Vol.8, Issue 1 | Annual Subscription ₹480
Rotary News, June 2025, Chennai

ஜூன் 2025

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



# WE INVITE YOU

**RJ GARBAGE BANK**

**WITH**

**ROTARY CLUBS OF INDIA**




# PLOG WITH ROTARIANS

**Plogging: Jogging+Picking up litter**

**Come! Get fitter and help clean up your city at the same time.**

- Bags, Gloves, Tabard, Picker shall be provided by RJ Garbage bank.
- Plogging E-certificate for all participants
- Book your Sunday Morning if a minimum of 30 and a maximum of 50 of your club members are ready to volunteer.
- Let's take this chance to keep our nation clean by setting up a Green point and ensure all our collected recyclables are transferred to respective recycling units.

RJ GARBAGE BANK
குப்பை வங்கி

Meri LiFE

स्वच्छ भारत
एक कदम स्वच्छता की ओर

KNOW MORE ABOUT PLOGGING

rj_garbagebank www.ilovewaste.in rjgarbagebank@gmail.com 87542 04222

ADVT.

# உள்ளே




**14**

ஆக்ராவில் குழந்தைகளை உற்சாகப்படுத்திய நிகழ்வுகள்



**20**

புனேவின் கேபின் பள்ளிகள்




**24**

திருப்பதி பயணத்திற்குப் பின்னால் இருந்த நுணுக்கமான திட்டமிடல்



**30**

மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஒரு வேடிக்கை மாரத்தான்



**38**

ஜார்கண்ட் கிராமப்புறங்களில் கண் பராமரிப்பு



**42**

ஜம்முவில் ரோட்டரி மருத்துவ முகாம்



**56**

தூய்மைப் பணியாளர்களுக்கு விளையாட்டு போட்டி



Rotary

A publication of Rotary Global Media Network



சுற்றுச் சூழலைக்காக்க மின்பதிப்புக்கு மாறவும்

**மின்னிதழ் கட்டணம் குறைப்பு**

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து ₹324-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## *அமைதியை வலியுறுத்தி ஒரு ரோட்டேரியனின் வேண்டுகோள்!*




*"கர்தார்பூர் சாகிப், இந்தியா-பாகிஸ்தான் ரோட்டேரியன்கள் உறவை பிணைக்கிறது" என்னும் கட்டுரையை நான் படித்தேன். இது ஆமதாபாத் மற்றும் பாகிஸ்தான் ரோட்டேரியன்களால் எடுக்கப்பட்ட முன்முயற்சியாகும். ஆனால், பஹல்காமில் தீவிரவாதிகள், சுற்றுலாப்பயணிகளை மனிதாபிமானமற்ற முறையில் படுகொலை செய்துள்ளனர். இரு நாட்டு ராணுவமும் தாக்குதலில் ஈடுபட்டது. நான் சண்டையை விரும்புபவன் அல்ல. நல்ல வேளையாக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. அதை வரவேற்கிறேன்.*

*ஆனால், போர் நிறுத்தம் என்பது மோதலின் முடிவு அல்ல.- அது மறுகட்டமைப்பின் தொடக்கமாகும். இந்த நெருக்கடியான கால கட்டத்தில் ரோட்டரி போன்ற சேவை அமைப்புகள் வெறும் கோஷங்களுடன் நின்றுவிடாமல், சேவையைத் தொடர வேண்டும், ஒற்றுமைக்கு குரல் கொடுக்க வேண்டும். நமது ராணுவ வீரர்கள் இரவு, பகலாக எல்லைப் பகுதியை காத்து வருகின்றனர். இப்போது ஒற்றுமை, கருணை மற்றும் எழுச்சியைக் காட்டுவது நமது கடமையாகும். ராணுவ வீர்ர்களின் குடும்பத்தினருக்கு ஆதரவாக இருப்போம், பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு துணை நிற்போம். இரத்த தானம் செய்வோம். தேவைப்படுபவர்களுக்கு நிவாரண உதவி அளிப்போம். பதற்றம் மற்றும் அமைதியற்ற நாட்களில் ஏற்பட்ட காயங்களை குணப்படுத்துவோம். பீதிக்கு பதிலாக நட்புறவை வளர்ப்போம். கோபத்திற்கு பதிலாக பச்சாதாபம் காட்டுவோம்.*

*அரசாங்கம் ரோட்டரியை ஒரு நம்பகமான, அரசியல் கலப்பற்ற சக்தியாக பார்க்கிறது. இளைஞர்கள் ஈடுபாடு, சுகாதார முன்முயற்சிகள், சமூக நலன், மன உறுதியை கட்டியெழுப்புதல் மூலம் தேசிய அளவில் குணப்படுத்தலுக்கு தயாராவோம். அமைதியை ஏற்படுத்தி, தேசபக்தியை வளர்ப்பதற்கு போரைப் போலவே பலம் தேவைப்படுகிறது. நல்லிணக்கத்தை நோக்கிய இந்த உறுதியான பயணத்தை ரோட்டரி வழிநடத்தட்டும்.*

*ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் அமைதி மற்றும் நோக்கத்தின் ஒளிவிளக்காக இருக்கட்டும். ஒவ்வொரு ரோட்டேரியனும் அமைதியாக நம்பிக்கையை கட்டியெழுப்புவர்களாகவும், எல்லைக்கு அப்பால் தேசத்திற்கு சேவை செய்பவராக இருக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.*

*ரோட்டரியின் முன்னாள் இயக்குநர் அசோக் மஹாஜன்.*




ரஷீதா பகத் எழுதிய "சூரிய சக்தி வாழ்க்கையை ஒளிரச் செய்கிறது" என்னும் கட்டுரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

குறிப்பாக நமது மக்கள் தொகையில் 25 சதவீதத்துக்கும் மேலானவர்கள் கிராமங்களில் தொலைதூரத்தில் வசிப்பதால், மின் தொகுப்பிலிருந்து மின் இணைப்பு கொடுப்பது சாத்தியமல்ல. மும்பை ரோட்டரி சங்கத்தின் சமூக சேவைகள் பிரிவு இயக்குநர் லதா தேசாய், மாணவர்களின் திறனை மேம்படுத்தவும், அவர்கள் படிக்கவும் உதவும் வகையில் சூரியசக்தி விளக்குகளை வழங்கியுள்ளார். ஒழுங்கற்ற மின் சப்ளை மற்றும் மின்பற்றாக்குறையை எதிர்கொள்ளும் தொலைதூரப்பகுதியில் உள்ள பள்ளி மாணவர்களுக்கும் இதுபோன்று சூரிய சக்தி விளக்குகளை வழங்க முன்வரவேண்டும். மேலும் இப்பணிக்காக கார்ப்பொரேட் நிறுவனங்களிடம் நிதியுதவி கேட்டுப்பெறலாம்.

T D பாட்டியா
RC தில்லி மயூர் விஹார் — D 3012.

### தாக்கத்தை ஏற்படுத்திய சதாரா அணை கதை

எங்கள் சங்கத்தால் நிறைவேற்றப்பட்ட சதாரா அணை திட்டம் பற்றிய விரிவான மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் தகவல்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்.

உங்கள் கதை சொல்லும் திறன் மற்றும் படவிளக்கங்கள் இந்த முயற்சியின் சாரத்தையும் தாக்கத்தையும் அழகாக படம்பிடித்து காட்டியது. இந்த கட்டுரை சமூக மாற்றத்தின் கவனத்தை ஈர்க்கும். அதுமட்டுமல்ல, ரோட்டரியின் செயல்பாட்டை வலிமைப்படுத்தவும் உதவும்.

எங்கள் சங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சார்பாக, எங்கள் பணியை சிறப்பாக வெளிப்படுத்திய ஜெயஸ்ரீ மற்றும் ரோட்டரி செய்திக் குழுவினருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதய் தர்மாதிகாரி
RC புனே சென்ட்ரல் — D 3131

"உங்கள் வார்த்தை- நடத்தை நீங்கள் யார் என்பதை தீர்மானிக்கிறது" என்ற தலைப்பிலான ஆசிரியர் தலையங்கம், முதலாளி- பணியாளர் உறவு தொடர்பான சம்பவத்தை மேற்கோள் காட்டி, ஒரு நிறுவனத்தில் உள்ள மக்களை பணியிடத்தில் உரிய பாராட்டையும் அங்கீகாரத்தையும் வழங்குவதன் மூலம் அதிகாரம் அளிப்பதன் கொள்கையை குறிக்கிறது.

ஒருவர் சிறப்பாக செயல்படுவதற்கான சிறந்த வழிகளில் ஒன்று வேலையில் ஈர்ப்பை ஏற்படுத்தி முடிந்தவரை அவரை ஊக்குவிப்பதாகும். இந்த அணுகுமுறை விசுவாசத்தை உருவாக்குவதுடன், ஊழியர்களை நீண்டகாலம் தக்கவைக்க வகை செய்கிறது. தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துகள் ரோட்டேரியன்களுக்கும் பொருந்தும். நாம் எல்லோரும் நமது தொழிலில் தலைவர்கள். எந்த ஒரு நிறுவனத்திலும் மரியாதை என்பது மக்களின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் கட்டமைப்பதற்கான அடித்தளமாகும்.

மதுரை லட்சுமி பள்ளி இன்டராக்ட் சங்கத்தால் சமூக சேவைக்காக புதுமையான முறையில் நிதி திரட்டும் திட்டம் (மதுரை இன்டராக்ட் ரூ.6 லட்சம் நிதி திரட்டுகிறது) குறித்த நல்ல செய்திக்காக முத்துக்குமரன் மற்றும் ஆசிரியர் குழுவினருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கட்டுரையை வெளியிட்டதன் மூலம் நீங்கள் இன்டராக்ட் உறுப்பினர்களை ஊக்குவிப்பதுடன், ஒவ்வொரு ஆண்டும் அதிக சேவைத் திட்டங்களை நிறைவேற்ற தூண்டியுள்ளீர்கள்.

R ஸ்ரீனிவாசன்,
RC பெங்களூரு J P நகர் — D 3191

மே இதழின் பக்கங்களைத் திருப்ப முடியவில்லை. அது தலையங்கத்தில் தனித்துவமானது மற்றும் சிந்திக்கத் தூண்டுகிறது. ரோட்டரியின் குறிக்கோள் சுயத்தை விட சேவை என்பது போல, மற்றவர்களுக்கு நல்லது செய்யுங்கள், ஏழைகள் மற்றும் நோயாளிகளுக்கு உதவுங்கள்.

ராஜ்குமார் கபூர்
RC ரூப் நகர் — D 3080

## DEI-தான் உச்சம் வகிக்கிறது

ரோட்டரி DEI-யிலிருந்து பின்வாங்கவில்லை என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. உரிமை இல்லாமை, போதுமான குழுப்பணி இல்லாமை, சங்கக் கூட்டங்களுக்கு குறைந்த நபர்களின் வருகை, பரஸ்பரம் நம்பிக்கை இல்லாமை உள்ளிட்ட பிரச்னைகளுக்கு DEI நடைமுறையை பின்பற்றுதல் மூலம் தீர்வுகாணலாம்.

DEI-யின் பயன்பாடு குறித்து நான் பல ஆராய்ச்சிகளைச் செய்துள்ளேன். ஆனால், அவற்றை நடைமுறைப்படுத்திப் பார்க்க ரோட்டரி எனக்கு வாய்ப்பு தரவில்லை. ஒட்டுமொத்த தர மேம்பாட்டு ஆலோசகராக நான் பணியாற்றியதால், ரோட்டரி சங்கங்களில் DEI-யை என்னால் வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. வழக்கமான செயல்திறன் தவிர, தலைமைத்துவ மாற்றம், புகார்களை குறைத்தல், எதிர்ப்புகளை குறைத்தல், பரஸ்பரம் நம்பிக்கையை ஏற்படுத்துதல், கூட்டாண்மை, உறுப்பினர்களைத் தக்கவைத்தல், புதிய இளைஞர்களை ரோட்டரிக்குள் இழுத்தல், சேவை மனப்பான்மையை உருவாக்குதல் என பலவிதங்களில் DEI பங்களிப்புச் செய்ய முடியும்.

N R U K கர்தா, RC திருவனந்தபுரம் சபர்பன் — D 3211

## ரோட்டரி நியூஸ் புதிய உறுப்பினர்களை ஈர்க்கும்

எனது நண்பர்கள் இருவர் என் வீட்டிற்கு வந்திருந்தபோது ஏப்ரல் மாத ரோட்டரி நியூஸ் பத்திரிகை படிக்க நேர்ந்தது. அந்த நேரத்தில் நான் வீட்டில் இல்லை. நான் வீட்டிற்கு வந்தபோது அவர்கள் இருவரும் ரோட்டரி பற்றி விசாரித்தார்கள். அவர்கள் இருவரும் திருப்பத்தூரைச் சேர்ந்தவர்கள். குறிப்பாக ஜவ்வாது மலை பழங்குடியினர் வாழ்க்கை பற்றிய அட்டைபடக் கட்டுரையைப் படிப்பதில் அவர்கள் ஆர்வம் காட்டினர்.

மேலும் ரோட்டரி உறுப்பினர் ஆவதற்கான நடைமுறை, கட்டணம் மற்றும் தொடர்புடைய விஷயங்கள் குறித்து கேட்டறிந்தனர். அப்போதுதான் எனக்குப் புரிந்தது ரோட்டரி சங்கங்கள் செய்யும் சமூக சேவைகள் பற்றிய தகவல்கள் ரோட்டரி செய்தியில் நல்லமுறையில் வெளியிடப்படுகின்றன. அவற்றின் மூலம் புதிய உறுப்பினர்களை நாம் ஈர்க்கமுடியும் என்று தெரிந்தது. கவிதைகள், சிறுகதைகளுக்கு ஒன்றிரண்டு பக்கங்களை ரோட்டேரியன் அல்லாதவர்களுக்காக ஒதுக்கினால், அதன் மூலம் புதிய உறுப்பினர்களை ஈர்க்க முடியும் என்பது எனது கருத்தாகும்.

S மோகன்குமார்
RC பள்ளிகொண்டா — D 3231

"ரோட்டரி இந்தியா" என்னும் வார்த்தையைப் பயன்படுத்துவதை RI தடை செய்யும் பிரச்னையில், ரோட்டரியில் உள்ள மூத்த மூத்தவர்கள் அதை கையாளும் விதம், மற்றும் நேர்மையற்ற முறையில் செயல்படுவது துரதிஷ்டவசமானது. RI அவர்களை வெளியேற்ற வேண்டும். அவர்கள் ரோட்டரியில் உள்ள கரும்புள்ளிகள். யாரும் அமைப்பைவிட மேலானவர்கள் அல்ல.

நாத்மல் நெவாடியா
RC கொல்கத்தா மேஃபேர் — D 3291

அட்டைப்படம்: ஆக்ரா ரோட்டரி சங்கம் (RID 3110) ஏற்பாடு செய்த சிறப்புப் பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டியில் "வேக நடை" பிரிவில் தாயாருடன் ஆர்வமாக பங்கேற்ற சிறுவன்.

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நலத்திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.
















புகைப்படங்கள்: டாம் கம்ப்

1. RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக் ஃப்ளோரிடாவில் ஒரு வனவிலங்கு சரணாலயத்தில்; 2. பசடேனாவில் நடைப்பெற்ற ரோஸ் பரேடில்; 3. லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் தினத்தன்று ராஜா சார்லஸ் உடன்; 4. அமெரிக்க விண்வெளி மற்றும் ராக்கெட் மையத்தில்; 5. உகாண்டாவில் ஒரு RYLA நிகழ்ச்சியில்.

# RI தலைவரிடமிருந்து...


6


10



7


8


9

*6. இஸ்டான்புல்லில் நடைப்பெற்ற ரோட்டரி அமைதி மாநாட்டில்; 7. தன் சொந்த ஊரான பென்சில்வேனியாவில் ஒரு விளையாட்டு நிகழ்ச்சியில்; 8. தென் அமெரிக்காவின் பெருவில் உள்ள மச்சு பிச்சு மலையடிவாரத்தில்; 9. போஸ்னியா மற்றும் ஹெர்ஜிகோவினா ப்ரஸிடென்சியின் உறுப்பினர் ஜெல்ஜ்கோ கோம்ஸிக் உடன்; 10. எகிப்து நாட்டிலுள்ள கிசா பிரமிடுகள் முன்.*

## சிறந்தது இனிமேல்தான் வரப்போகிறது

நாம் இளம்பிள்ளைவாதத்தை முடிக்கும் நிலையைக் கிட்டத்தட்ட எட்டிவிட்டோம். ஆனால், அதை எண்ணி நாம் ஓய்வெடுக்க முடியாது. உலகக் குழந்தைகளுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் நாம் கொடுத்துள்ள உறுதி மொழியை நாம் நிறைவேற்ற வேண்டும். அதை நாம் நிதி திரட்டல், குரல் கொடுத்தல் மற்றும் நம் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் மூலம்தான் சாதிக்க இயலும்.

இந்த ஆண்டின் முற்பகுதியில் நடைபெற்ற தலைவர் அமைதிக் கருத்தரங்கத்தின்போது, அமைதிக் கட்டமைப்பாளர்களுடைய திறமை மற்றும் உறுதிப்பாட்டைக் கண்டு நான் வியந்தேன். நம் அமைதித் தோழமைத் திட்டமும், நம்முடைய மற்ற பல அமைதி முன்னெடுப்புகளும் பிரிந்துள்ள உலகை ஆற்றுகின்றன. ஆனால், அவை செயல்திறனுடனும் பொருத்தமாகவும் தொடர்வதற்கு நம் ஆதரவு தேவை.

செயல் திட்டமானது நம் சங்கங்கள், மாவட்டங்களை மிகவும் ஈர்ப்பானவையாக ஆக்குவதற்கு வழிகாட்டும். ஆனால், அந்த அறிவுரையை எடுத்துக்கொண்டு செயல்படுத்துவது நம் கடமை.

நம் ரோட்டரி குடும்பம் ஒன்றாகச் சேர்ந்தால், ஒரு பொது இலக்கை நோக்கிப் பணியாற்றினால், நம்மால் சாதிக்க இயலாதது ஏதுமில்லை.

நீங்கள்தான் ரோட்டரியின் மந்திரம். உலகில் நீங்கள் கொண்டுவரப்போகும் நீடித்த மாற்றத்தைக் காண நான் ஆவலுடன் இருக்கிறேன்.


**ஸ்டெஃப்னி A அர்ச்சிக்**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்



# Rotary
District 3212



THE MAGIC OF ROTARY




Rotary club of Virudhunagar

# VIGNANA RATHAM

## Empowering Students Towards Great Citizens For Future

The idea of Vignana Ratham is to kindle student's interest towards science. It is to aid students in understanding the magic of science through creative and fun-filled experiments. RID 3212 wondered how good it would be to take the best brains to institutions in all corners of Tamil Nadu. As a result, a tie-up was made with Parikshan Trust of an Indian Scientist, Dr. Pasupathy. Mr.Arivarasan, Mr. Naveen Kumar and Mr. Satheesh were assigned to travel in Vignana Ratham and meet students of various schools every day. Numerous students benefit out of this programme and we believe that we have seeded the fervor required to bring out a Scientist from every institution we visited.

CROSSING OVER
**770**
PROGRAMS
ALL OVER TAMILNADU

## SUCCESSFUL JOURNEY OF SCIENCE ON WHEELS

As on 28.03.2025

Total No. of Schools Visited
**735**

Total No.of Colleges Visited
**25**

Total No.of Students Explored
**2,11,143**

Total No.of Days Travelled
**513**

Total No.of Teachers Participated
**9,428**

Total No.of Kilometres Travelled
**42,056**

LEKHA ads/June 25/ Rotary/NTEN

**GET IN TOUCH WITH US**
94422 48586

PARIKSHAN
CHARITABLE TRUST
Empowering society through Science...



Project Chairman
Rtn. R.Vadivel

Project Concept
Dr. Pasupathy

**Do you want**
to have **Vignana Ratham** travelling to a school in your Town / City / District?
We would love to partner with you in this mission.

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

ADVT.



# போர் வெறி என்னும் மனநோய்

ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்களை ஏவுகணை மூலம் அழித்து ஒழித்தது. இந்தியா நடத்திய இந்த பதிலடி தாக்குதலுக்கு "ஆபரேஷன் சிந்தூர்" என பெயரிடப்பட்டது. "சிந்தூர்" என்ற பெயரை தேர்ந்தெடுத்தவருக்கு நாம் முழு மதிப்பெண்கள் கொடுக்கலாம். காஷ்மீரில் உள்ள பஹல்காமில் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியதற்கு இந்திய அரசும், ராணுவமும் தக்க பதிலடி கொடுத்துள்ளது. தீவிரவாதிகள் சுற்றுலாப் பயணிகளை எந்த மதத்தை சேர்ந்தவர்கள் என்று கேட்டு இந்துக்கள் மீது திட்டமிட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். திருமணமான பெண்கள் தங்கள் நெற்றியில் குங்குமம் (திலக்) வைத்துக்கொள்வது இந்து மதத்தில் உள்ள பாரம் பரியமாகும். பெண்களின் கண்முன்னே அவர்களின் கணவர்களைக் கொன்று பெண்களின் குங்குமத்தை அழித்தவர்களை பழிதீர்க்கும் நோக்கிலேயே இதற்கு சிந்தூர் என பெயரிடப்பட்டது. கொடூரமான இந்த பயங்கரவாதச் செயல் ஒவ்வொரு இந்தியரையும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது. பெண்களிடம் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானும் பதிலடி கொடுத்தது. இந்திய எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இதனால் இந்திய விமானநிலையங்கள் பல மூடப்பட்டன. இந்தப் பகுதிகளில் ஒருவித குழப்பமும் பீதியும் நிலவியது. ஆனால், விரைவிலேயே ஒருவித அமைதி நிலவியது. அமெரிக்காவின் தலையீட்டால், இரவில் நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பின் போர் நிறுத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் முதன் முதலாக நம்மிடம் கூறினார். திரைக்குப் பின்னால் என்ன நடந்தது என்பது நமக்குத் தெரியாது. இந்தியா, பாகிஸ்தானின் அணுசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியது முதல், வர்த்தக வாக்குறுதிகள் மற்றும் சர்வதேச செலாவணி நிதியத்தின் (IMF) கடன் அனுமதி வரை பல காரணங்கள் சொல்லப்பட்டன. இதனால் பாகிஸ்தான் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. போர் சூழலில் அரசுகள் எல்லாவற்றையும் வெளியிடுவதில்லை. அது இயல்புதான்.

இருநாட்டு எல்லைப் பகுதிகளைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் போர் நிறுத்தத்தை வரவேற்ற போதிலும் மதவெறியர்களும், போர் வெறியர்களும் பல்வேறு சமூக வலைத்தளங்கள் மூலம் பாகிஸ்தானை துண்டு துண்டாக உடைப்பதற்கு முன்பு போர் நிறுத்தம் ஏன் என்று கேட்டு இந்திய அரசுக்கு கண்டனம் தெரிவித்தனர். இந்திராகாந்தி பாகிஸ்தானுக்கு பாடம் கற்பிக்கவில்லையா? என்று கூறி கூச்சலிட்டனர். போர்க்குணம் மிக்க தேசியவாதிகள் முட்டாள் தனமாக பேசினர். அணுசக்தி சகாப்தத்தில் போரினால் ஏற்படும் செலவுகளை, விளைவுகளை அவர்கள் எண்ணிப்பார்க்கவில்லை. இராணுவ தளவாடங்கள் அது எவ்வளவு நவீனமாகவோ அல்லது விலை கொண்டதாகவும் இருந்தாலும் அவற்றை திரும்ப பெற்றுவிடலாம். ஆனால், போரில் உயிரிழக்கும் ராணுவ வீரரை மீண்டும் கொண்டுவர முடியுமா? இங்கு இருப்பவர்கள் தொலைக்காட்சி சேனல்கள் அல்லது சமூக ஊடகங்களில் போர் முழக்கங்களை எழுப்புவது எளிதானது.

இதைவிட கொடூரமானது மற்றும் வெட்கக்கேடானது இரு தரப்பு டி.வி.சேனல்களிலும் போர் வெறியைத் தூண்டுவது, பறை அடிப்பது போன்ற காட்சிகளை பார்க்க நேர்ந்ததுதான். முட்டாள்தனமாக அவர்கள் அலறுவதும், போர் வெறியைத் தூண்டுவதும், நெஞ்சை நிமிர்த்தி பேசுவது போன்ற மோசமான காட்சிகளை ஸ்டூடியோக்களிலிருந்து ஒலி-ஒளிபரப்பானது கண்டு நான் திகிலடைந்தேன். ஒருகாலத்தில் பத்திரிகைகள், ஊடகங்களின் தரம் நன்றாக இருந்தது, ஆனால் இப்போது செய்திகள் செய்திகளாக அல்லாமல் அவர்களின் புலம்பலாகவே இருக்கிறது. தொலைக்காட்சி விவாதங்களில் யாராவது புத்திசாலித்தனமாக அல்லது கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டியதை ஆதரிப்பவர் போல் பேசினால், தொகுப்பாளர் ஏதோ ஊக்கமருந்து சாப்பிட்டவர் போல் உரத்தகுரலில் பேசி அவர்களை அடக்கினார். அவ்வப்போது பகிரப்பட்ட தகவல்களும், சில படகாட்சிகளும் பொழுதுபோக்காகவே இருந்தன.

போர் வெறி தணிந்தவுடன், நமது தொலைக்காட்சி சேனல்கள், தங்களிடம் பணிபுரியும் நிலையற்ற, மனநிலை சரியில்லாத தொகுப்பாளர்களை மீண்டும் பத்திரிகைத் தொழிலுக்கான பயிற்சிப் பள்ளியில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும். அதுதான், இப்போது தேசத்திற்கு செய்யும் சேவையாக இருக்கும்!

ரஷீதா பகத்

# RI இயக்குனர் செய்தி



# ஒரு இனிதான பயணம்

அன்புள்ள ரோட்டேரியர்களே,

கடந்த 24 மாதங்களாக உங்கள் ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராக பணியாற்றியது எனது மிகப்பெரிய பாக்கியம். இந்த பயணத்தில், நான் நேர்மை, வெளிப்படைத்தன்மை, உண்மைத்தன்மை மற்றும் பணிவு ஆகிய நான்கு நம்பிக்கைக்குரிய தோழர்களுடன் வழிநடத்த முயன்றேன்.

என்ன ஒரு அற்புதமான பயணம் இது! பரபரப்பான மாநகரங்கள் முதல் கிராமப்புற வகுப்பறைகளின் அமைதியான ரீங்காரம் வரை, ரோட்டரியின் உண்மையான கதாநாயகர்களை நான் சந்தித்தேன் – பிளேசர்கள் மற்றும் பேட்ஜ்களில் இருப்பவர்கள் மட்டுமல்ல (அவர்களுக்கும் என் நன்றி), மாறாக சங்கத்தலைவர்கள், மாவட்ட அதிகாரிகள், மற்றும் அயராத தன்னார்வலர்கள், இவர்கள் காரியங்களை அமைதியாக, திறமையாக, மற்றும் எப்போதும் கருணையுடன் செய்து முடிப்பதை ஒரு கலையாக மாற்றியவர்கள்.

புகழைத் தேடாத இந்த சாதனையாளர்களுக்கு, நான் எனது மரியாதை செலுத்துகிறேன். நீங்கள் முகாம்களை நடத்தியுள்ளீர்கள், வகுப்பறைகளைக் கட்டியுள்ளீர்கள், சமூகங்களுக்கு அதிகாரமளித்துள்ளீர்கள், உங்கள் பணி ரோட்டரியின் உயிர்நாடி – அது உன்னதமானது, அவசியமானது, மற்றும் பெரும்பாலும் கவனிக்கப்படாதது.

“ரோட்டரியின் மாயம்” என்பதிலிருந்து அற்புதமான “நல்லதிற்காக ஒன்றிணைவோம்” என்ற கருப்பொருளுக்கு நாம் மாறும்போது, ஒன்றை நினைவில் கொள்வோம்: ரோட்டரி ஒருபோதும் தனிப்பட்ட முயற்சியைப் பற்றியது அல்ல. இது ஒருவரையொருவர், குறைகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு கண்டறிந்து, சில சமயங்களில் நமக்குள்ளேயே இருக்கும் தடைகளை மீறி, அர்த்தமுள்ள ஒன்றை ஒன்றாகச் செய்வது பற்றியது. வரும் ஆண்டு ஒற்றுமைக்கு அழைப்பு விடுக்கிறது-அது இனிப்பான, எல்லோரையும் கட்டிப்பிடிக்கும் வகையான ஒற்றுமை அல்ல, மாறாக தெளிவான பார்வையுடன், தோளோடு தோள் நிற்கும் வகையான ஒற்றுமை. நமது சட்டையின் கைகளை சுருட்டிக்கொண்டு, இணைந்து பணியாற்றுவோம் வாருங்கள்.

வரவிருக்கும் நமது RI இயக்குநர்கள் K P நாகேஷ் மற்றும் முருகானந்தம் ஆகியோரிடம் இந்த பாரம்பரிய ஜோதியை ஒப்படைப்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. எனது சக இயக்குநர் அனிருதா ராய்சௌதுரிக்கு ஒரு மிகச் சிறப்பு நன்றி. எனக்கு ஆதரவாக நின்றவர்கள், என்னை உற்சாகப்படுத்தியவர்கள், அனைவருக்கும் நன்றி.

எனது மனைவி வித்யாவிற்கு அன்பும் பாராட்டும் நிறைந்த ஒரு சிறப்பு குறிப்பு. ரோட்டரி வட்டாரங்களில் அவர் என்னை விட அதிகமாக போற்றப்பட்டார் – இந்த உண்மையை நான் ஆரம்பத்திலேயே ஓரளவு நளினமாக ஏற்றுக்கொண்டேன். இந்த பயணம் முழுவதும் அவர் எனக்கு வலிமையின் தூணாக இருந்துள்ளார். ஆம், இது இந்த குறிப்பிட்ட அத்தியாயத்தின் கடைசிப் பக்கம், ஆனால் புத்தகத்தின் கடைசிப் பக்கம் அல்ல. ரோட்டரி என்பது ஒரு பட்டத்தை விட, வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் ஒரு மனநிலை. நான் இப்போது பொதுவான ஒரு ரோட்டேரியராக, ஆறுதலான மறைநிலைக்குத் திரும்புவேன், ஓரமிருந்து உற்சாகப்படுத்திக் கொண்டும், எனது சொந்த அமைதியான இடத்தில் தொடர்ந்து சேவை செய்துகொண்டும் இருப்பேன்.

மீண்டும் சந்திக்கும் வரை, தொடர்ந்து சேவை செய்யுங்கள், தொடர்ந்து புன்னகை செய்யுங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக, உங்கள் நகைச்சுவை உணர்வை உங்களுடன் வைத்திருங்கள்.

**ராஜு சுப்ரமணியன்**
RI இயக்குனர் 2023–25

# District Wise TRF Contribution

Source: RI South Asia Office

Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation.

As on April, 2025

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| 2981 | 67,932 | 15,983 | 10,104 | 38 | 94,056 |
| 2982 | 47,911 | 13,988 | 10,421 | 110,254 | 182,573 |
| 3000 | 52,467 | 24,038 | 1,000 | 342,578 | 420,084 |
| 3011 | 105,432 | 6,497 | 70,480 | 1,603,982 | 1,786,390 |
| 3012 | 18,368 | 151 | 1,500 | 1,128,996 | 1,149,014 |
| 3020 | 113,352 | 56,014 | 105,906 | 151,382 | 426,654 |
| 3030 | 59,609 | 5,203 | 23,935 | 272,022 | 360,768 |
| 3040 | 8,296 | 270 | 3,000 | 89,183 | 100,748 |
| 3053 | 60,185 | 700 | 0 | 83,524 | 144,409 |
| 3055 | 53,853 | 4,417 | 2,071 | 68,208 | 128,549 |
| 3056 | 28,648 | 2,056 | 60 | $133 | 30,897 |
| 3060 | 200,484 | 6,449 | 38,970 | 722,382 | 968,284 |
| 3070 | 30,826 | 1,713 | 0 | 0 | 32,539 |
| 3080 | 41,124 | 9,765 | 17,384 | 79,456 | 147,729 |
| 3090 | 18,103 | 109 | 22,064 | $0 | 40,276 |
| 3100 | 32,014 | 5,561 | 0 | 55,133 | 92,708 |
| 3110 | 18,429 | 1,593 | 4,164 | 432,566 | 456,751 |
| 3120 | 67,061 | 1,211 | 14,746 | 65,312 | 148,330 |
| 3131 | 586,626 | 21,318 | 142,420 | 1,434,397 | 2,184,761 |
| 3132 | 71,163 | 2,589 | 23,339 | 84,868 | 181,959 |
| 3141 | 509,581 | 40,749 | 269,941 | 3,198,801 | 4,019,072 |
| 3142 | 492,529 | 58,892 | 50,060 | 626,541 | 1,228,022 |
| 3150 | 184,862 | 31,909 | 145,498 | 970,221 | 1,332,490 |
| 3160 | 25,579 | 3,443 | 1,000 | 5,787 | 35,809 |
| 3170 | 54,773 | 23,006 | 120,174 | 370,703 | 568,655 |
| 3181 | 157,281 | 17,261 | 77 | 0 | 174,619 |
| 3182 | 114,456 | 4,104 | 12 | 29,270 | 147,842 |
| 3191 | 72,022 | 8,340 | 158 | 284,506 | 365,025 |
| 3192 | 153,434 | 9,942 | 23,500 | 342,788 | 529,665 |
| 3201 | 130,143 | 40,551 | 32,982 | 821,565 | 1,025,241 |
| 3203 | 52,406 | 14,164 | 16,034 | 143,539 | 226,143 |
| 3204 | 50,054 | 16,275 | 53,047 | 17,080 | 136,456 |
| 3211 | 32,412 | 4,373 | $0 | 47,055 | 83,839 |
| 3212 | 303,186 | 40,183 | 103,500 | 178,954 | 625,823 |
| 3231 | 17,215 | 8,289 | 93,192 | 46,768 | 165,464 |
| 3233 | 72,818 | 20,899 | 5,199 | 464,421 | 563,338 |
| 3234 | 128,497 | 30,657 | 100,746 | 1,031,174 | 1,291,075 |
| 3240 | 200,470 | 31,436 | 50,000 | 204,780 | 486,685 |
| 3250 | 149,330 | 6,161 | 22,248 | 182,539 | 360,277 |
| 3261 | 10,538 | 644 | 8,335 | 10,878 | 30,395 |
| 3262 | 81,664 | 2,515 | 2,313 | 22,505 | 108,996 |
| 3291 | 157,074 | 14,206 | 198,335 | 279,515 | 649,130 |
| 3220 Sri Lanka | 61,709 | 4,828 | 30,052 | 24,730 | 121,319 |
| 3271 Pakistan | 9,953 | 50,036 | 0 | 10,500 | 70,489 |
| 63 (former 3272)* | 8,637 | 2,683 | 0 | 0 | 11,321 |
| 64 (former 3281)* | 7,799 | 3,060 | 1,000 | 1,050 | 12,908 |
| 65 (former 3282)* | 1,096 | 1,351 | 0 | $0 | 2,447 |
| 3292 | 104,722 | 27,729 | 90,026 | 152,634 | 375,111 |

* Undistricted

2025

மாநாடு

# கால்கரி:
# ஒரு பருந்துப் பார்வை



RI மாநாட்டின்போது கால்கரியில் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களுடன், குறிப்பாக, அருகிலுள்ள US மற்றும் கனடாவைச் சேர்ந்த நம் நண்பர்களுடன் சேர்ந்துகொள்ள உங்களில் பலருக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது. இந்தப் பெரிய நிகழ்ச்சி நெருங்கும்போது பல உறுப்பினர்கள் கடைசி நேரத்தில் பதிவு செய்கிறார்கள். சிலர் நிகழ்ச்சியின்போது பணம் கட்டி இணைவதும் உண்டு.

கால்கரி 21–25 ஜூன் நிகழ்ச்சிகளில் உங்கள் சங்கத்தின் தாக்கம், உறுப்பினர் எண்ணிக்கையை வளர்க்க உதவும் உரத்த குரல்கள், பெரிய யோசனைகள் நிறைந்துள்ளன. எல்லாரும் சொல்வது போல், ஒவ்வொருவரும் மாநாட்டில் ஒருமுறையாவது கலந்துகொள்ள வேண்டும். “மாநாட்டில்தான் ரோட்டரி உயிர் பெறுகிறது” என்கிறார் RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக்.

எப்போதும்போல் இந்த நிகழ்ச்சியில் உலகத் தரத்திலான பேச்சாளர்கள் இடம்பெறுகிறார்கள். இவர்களில் சிலர்: பெண்கள் உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் டவக்கொல் கர்மன் (நோபல் அமைதிப் பரிசு வென்ற முதல் அரபுப் பெண்), டைம்ஸ் இதழின் மிகுந்த தாக்கம் கொண்ட மக்கள் பட்டியல்களில் இடம்பெற்றுள்ள காலநிலை அறிவியலாளர் காதரின் ஹேஹோ.

இடை நிகழ்ச்சிகளில் ரோட்டரியில் AIஐப் பயன் படுத்துவதில் தொடங்கி, இளம் தலைவர்கள், பன்முகத்தன்மை கொண்ட உறுப்பினர்களைச் சேர்ப்பதுவரை பல தலைப்புகள் உங்கள் கற்றல் அனுபவத்தை மேம்படுத்தும். நட்பு இல்லம் என்பது, ரோட்டரியின் பன்னாட்டுச் சமூகம் நண்பர்களுடன் கலந்து திட்ட யோசனை களை உருவாக்கும் இடமாகும். இந்த நிகழ்ச்சி நடைபெறும் இடம் மகிழ்ச்சி நிறைந்தது. இங்கிருந்து கனடியப் பாறை மலைகளைப் பார்க்கலாம். எளிதில் சுற்றிவரக்கூடிய இந்த நவீன நகரம் முழுவதும் மேற்கத்தியப் பண்பாட்டை நீங்கள் காண்பீர்கள். “கால்கரி இதமான விருந்தோம்பல், இயற்கை அழகின் மிகச் சிறந்த கலவை” என்கிறார் ஸ்டெஃப்னி.

மாநாட்டில் பங்கேற்கும் அனைவரும் ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் என்கிறார் டெக்சாஸில் உள்ள RC கார்ரோல்ல்டன்-ஃபார்மர்ஸ் பிராஞ்ச் உறுப்பினர் எலிசப்தெ வில்லாஃப்ரான்கா. “இது என் வாழ்க்கையை, என் பார்வைக்கோணத்தை மாற்றியுள்ளது, நம் உலகை இன்னும் மேம்பட்ட இடமாக மாற்றுவதற்காகத் தொடர்ந்து வேலை செய்யத் தேவையான ஆற்றலை எனக்குக் கொடுத்துள்ளது.”

மேலும் விவரங்களுக்கு *convention.rotary.org* காண்க

**உலக ரோட்டரி எண்ணிக்கை**

| | | | |
|---|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் : | 36,632 | ரோட்டரியினர் : | 1,171,195 |
| ரோட்டராக்ட் சங்கங்கள்: | 9,454 | ரோட்டராக்டர்கள் : | 135,426 |
| இன்டராக்ட் சங்கங்கள் : | 16,784 | இன்டராக்டர்கள் : | 386,170 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) : | 13,984 | | |

*As on May 19, 2025*


**ஆளுநர் குழு**

RID 2981 பாஸ்கரன் S
RID 2982 சிவகுமார் V
RID 3000 ராஜா கோவிந்தசாமி R
RID 3011 மகேஷ் திரிகா
RID 3012 பிரசாந்த் ராஜ் ஷர்மா
RID 3020 வெங்கடேஸ்வர ராவ் M
RID 3030 ராஜீந்தர் சிங் குரானா
RID 3040 அனீஷ் மலிக்
RID 3053 ராகுல் ஸ்ரீவஸ்தவா
RID 3055 மோகன் பராஷர்
RID 3056 ராக்கி குப்தா
RID 3060 துஷார் ஷா
RID 3070 பர்மிந்தர் சிங் குரோவர்
RID 3080 ராஜ்பால் சிங்
RID 3090 சந்தீப் சௌஹான்
RID 3100 தீபா கண்ணா
RID 3110 நீரவ் நிமேஷ் அகர்வால்
RID 3120 பரிதோஷ் பஜாஜ்
RID 3131 ஷீத்தல் ஷரத் ஷா
RID 3132 சுரேஷ் ஹேரலால் சாபூ
RID 3141 சேட்டன் தேசாய்
RID 3142 தினேஷ் மேத்தா
RID 3150 சரத் சௌத்ரி கட்ராகட்டா
RID 3160 சாது கோபால கிருஷ்ணா
RID 3170 சரத் பாய்
RID 3181 விக்ரம்தத்தா
RID 3182 தேவ் ஆனந்த்
RID 3191 சதீஷ் மாதவன்
RID 3192 மகாதேவ பிரசாத் N S
RID 3201 சுந்தரவடிவேலு N
RID 3203 சுரேஷ் பாபு S
RID 3204 சந்தோஷ் ஸ்ரீதர்
RID 3211 சுதி ஜப்பார்
RID 3212 மீரான் கான் சலீம்
RID 3231 ராஜன்பாபு M
RID 3233 மகாவீர் போத்ரா
RID 3234 சரவணன் N S
RID 3240 சுக்மிந்தர் சிங்
RID 3250 பிபின் சாச்சன்
RID 3261 அகில் மிஸ்ரா
RID 3262 யக்ஞன்சிஸ் மோஹாபத்ரா
RID 3291 கிருஷ்ணேந்து குப்தா



அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**



கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.



Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| T N ராஜு சுப்ரமணியன்<br>RI இயக்குனர் மற்றும்<br>RNT தலைவர் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி<br>RI இயக்குனர் | RID 3291 |
| Dr பரத் பாண்ட்யா<br>TRF அறங்காவலர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**RI Directors-elect**

| | |
|---|---|
| முருகானந்தம் M | RID 3000 |
| நாகேஷ் K P | RID 3191 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2024–25)

| | |
|---|---|
| மகாதேவ பிரசாத் N S<br>தலைவர், ஆளுநர் குழு | RID 3192 |
| அகில் மிஸ்ரா<br>செயலாளர், ஆளுநர் குழு | RID 3261 |
| ராஜா கோவிந்தசாமி R<br>பொருளாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| ராக்கி குப்தா<br>ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3056 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF தலைவரிடமிருந்து...**



# வாழ்க்கையை மாற்றும்

கடந்த ஆண்டில், என் மனைவி கே மற்றும் நான் ரோட்டரி அறக் கட்டளையின் தாக்கத்தைப் பார்க்கும் சிறந்த வாய்ப்பைப் பெற்றோம். இந்தியாவில் டயாலிசிஸ் மையங்களில் தொடங்கித் தைவானில் சுற்றுச்சூழல் திட்டங்கள், உலகெங்கும் கல்வி முன்னெடுப்புகள் என்று உங்கள் தாராள மனப்பான்மை வழங்கிய, வாழ்க்கைகளை மாற்றும் திட்டங்களை நாங்கள் அருகிலிருந்து பார்த்தோம். நம் அறக்கட்டளையின் பணியை அருகிலிருந்து பார்க்கும்போது, அமைதி, நம்பிக்கை, நலத்தைப் பரப்புவதன் மூலம் வாழ்க்கைகளை மாற்றும் ரோட்டரியின் ஆற்றல் இன்னும் ஆழமாகப் புரிகிறது.

பாங்காக்கில் ஒரு பொது மருத்துவ மனையில், நுரையீரல் மற்றும் இதயச் சிக்கல்களைக் கொண்ட, தீவிர நோயுள்ள நோயாளிகளுக்கான சிறப்பு உயிர் ஆதரவு இயந்திரம் ஒன்றை நாங்கள் பார்த்தோம். இந்த நகரத்தில் வாழும் 11 மில்லியன் மக்களுக்குத் தனியார் மருத்துவப் பராமரிப்புக்கு வெளியில் கிடைக்கிற இரண்டாவது இயந்திரம் இதுதான். ஒரு பன்னாட்டு நல்கையின் வழியாக நிதியளிக்கப்பட்ட இந்தத் தொழில்நுட்பம் உயிர்களைக் காக்கிறது.

ரோட்டரி அமைதி மையங்கள், பெரிய அளவுத்திட்டங்கள், பன்னாட்டு, மாவட்ட நல்கைகள் என ரோட்டரி தன் அறக்கட்டளை வழியாகச் சாதிக்கிற ஒவ்வொன்றும் ஒரு வலுவான, வளரும் நன்கொடை நிறுவலைச் சார்ந்துள்ளன. உங்கள் தாராள மனப்பான்மையின் வழியாக நீங்கள் நடத்தும் ரோட்டரியின் மந்திரம் இது.

அதனால்தான், 30 ஜூன் 2025க்குள் ரோட்டரி அறக்கட்டளையின் நன்கொடை நிறுவல் நிகரச் சொத்துகள் மற்றும் உறுதிப்பாடுகளை $2.025 பில்லியனுக்கு வளர்க்கும் நம் இலக்கின்மீது நான் பேரார்வம் கொண்டுள்ளேன். 2016-ல், முந்தைய இலக்குகளைத் தாண்டிய பிறகு, நன்கொடை நிறுவல் வழங்கல்பற்றி வளர்ந்து வரும் ஆர்வத்தை அடையாளம் கண்டபிறகு, அறங்காவலர்கள் இந்த இலக்கை அமைத்தார்கள். உறுப்பினர்களுடைய உடைமைகளிலிருந்து வரும் பரிசுகள் உள்பட இதற்கு உங்கள் சிறந்த ஆதரவுக்கு நன்றி. நன்கொடை நிறுவல் நிகரச் சொத்துகள் மற்றும் உறுதிப்பாடுகள் குறிப்பிடக்கூடிய அளவு வளர்ந்துள்ளன, நம் இலக்கை நெருங்கிக்கொண்டிருக்கின்றன.

நன்கொடை நிறுவலுக்குப் பங்களிக்க, உங்கள் நன்கொடை நிறுவல்/மிகப் பெரிய பரிசுகள் அறிவுறுத்துநரிடம் அல்லது உங்கள் மிகப் பெரிய பரிசுகள் அலுவலருடன் பேசுங்கள், அல்லது, *rotary.org/donate*-ல் பாருங்கள்.

நாம் மரங்களை நடுகிறோம். இந்த மரங்கள் வளர்ந்து ரோட்டரி அமைதித் தோழர்களுக்கும் கல்வி உதவித் தொகைகளுக்கும் நிதியளிக்கும், இளம் பிள்ளைவாதத்தை முடித்து வைக்கும், உயர்தாக்கம் கொண்ட பெரிய அளவுத்திட்டங்களையும் பன்னாட்டு நல்கைகளையும் ஆதரிக்கும்.

என்னுடைய 40 ஆண்டு ரோட்டரி தலைமைப் பயணத்தில், TRF-தான் எப்போதும் என் மையமாக இருந்தது. 1986-ல் ஒரு GSE குழுவுக்குத் தலைமை தாங்கியதில் தொடங்கி மாவட்ட அறக்கட்டளைத் தலைவர், அறங்காவலர், RI தலைவர், இப்போது அறங்காவலர் தலைவர் என்று எனக்குக் கிடைத்த வாழ்நாள் பெருமை இது.

உங்கள் அர்ப்பணிப்பு, சேவை, செயல்பாட்டின் வழியாக நீங்கள் உருவாக்கும் மந்திரத்தைப் பார்ப்பதும் அதனால் ஊக்கம் பெறுவதும் என் பெருமை.

**மார்க் மலோனி**
TRF அறங்காவலர் தலைவர்

# ஆக்ராவில் குழந்தைகளை உற்சாகப்படுத்திய நிகழ்வுகள்

ஜெய்ஸ்ரீ



"நாகினி நடனம் முதல் மைக்கேல் ஜாக்ஸனின் மூன் வாக் வரை நடைபெற்ற பொம்மலாட்ட நிகழ்ச்சியின் போது அவர்கள் அடைந்த மகிழ்ச்சி மறக்கமுடியாத ஒன்றாகும்" என்று RID 3110-க்கு உட்பட்ட ஆக்ரா ரோட்டரி சங்கத்தின் தலைவர் நம்ரதா பணிக்கர் மகிழ்ச்சி பொங்க தெரிவித்தார்.

ஆக்ரா நகரில் உள்ள ஆஷா பள்ளி மற்றும் செயின்ட் அல்போன்சோ இன்ஸ்டியூட்டில் மனநலம் குன்றிய குழந்தைகளுக்காக ரோட்டரி சங்கம், வடிவமைத்த பொம்மலாட்ட நிகழ்ச்சியை அவர் குறிப்பிட்டார். குழந்தைகளின் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

குழந்தைகள், செயின்ட் அல்போன்சோவில் பிரார்த்தனை பாட்டு பாடி நிகழ்வைத் தொடங்கினர். உடனே அறையில் அமைதி நிலவியது. ஹிட்டான பாடலுக்கு ஏற்ப நடந்த பொம்மலாட்ட நிகழ்வை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் குதூகலத்துடன் கண்டு ரசித்து. இருக்கையைவிட்டு எழுந்து நின்று உற்சாகமாகத்துடன் கரவொலி எழுப்பினர்.

ஆஷா பள்ளிக் குழந்தைகள் சங்க உறுப்பினர்களுக்கு கைகளால் வண்ணம் தீட்டப்பட்ட கலைப் படைப்புகளை பரிசாக அளித்தனர். குழந்தைகள் அவர்களின் உலகத்திற்கு எங்களை அழைத்துச் சென்றதற்காக நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்றார் நம்ரதா. பள்ளிகளின் தலைவர்கள் மற்றும் அவர்களின் குழுவினர்கள் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்தார். செயின்ட் அல்போன்சோ பள்ளி முதல்வர் அல்போ மாத்யூ, "இந்த நிகழ்வை குழந்தைகள் கண்டு ரசித்தது மட்டுமல்ல, இதுபற்றி கேள்விப்பட்டு குழந்தைகளின் பெற்றோர்கள்கூட மகிழ்ச்சி அடைந்தனர்" என்றார்.

இதைத் தொடர்ந்து சங்கம் மனவளர்ச்சி குன்றிய குழந்தை களுக்காக பிரத்யேகமாக "பிரேவ் ஹார்ட்ஸ் இன்டர்-ஸ்கூல் ஸ்போர்ட் மீட்" நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. ஆக்ராவில் உள்ள ஏழு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 135 குழந்தைகள் இதில் கலந்துகொண்டு 27 விதமான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றனர். ரிலே ரேஸ், சமநிலை விளையாட்டுகள் மற்றும் குழந்தைகள்-பெற்றோர்கள் வேகநடை போட்டி என பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. குழந்தைகள் உற்சாகத்துடன் இதில் பங்கேற்றனர். இதில் வெற்றி-தோல்வி முக்கியமல்ல, பங்கேற்பது, முயற்சிப்பது மற்றும் மகிழ்ச்சி அடைவது ஆகியவைதான் முக்கியமானது. நிகழ்வின் ஒவ்வொரு தருணத்தையும் குழந்தைகள் விரும்பி ரசித்தனர்" என்கிறார் சங்கத்தின் தலைவர்.




*குழந்தைகள் பொம்மலாட்ட நிகழ்ச்சியை ரசிக்கிறார்கள்.*

நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்த கூடுதல் போலீஸ் கமிஷனர் சஞ்சீவ் தியாகி, "இது போன்ற நிகழ்ச்சியில் நான் பங்கேற்பது இதுவே முதன்முறையாகும். குழந்தைகளின் ஆர்வமும் உற்சாகமும் என்னை




*சங்கத்தலைவர் நம்ரதா பணிக்கர் பார்த்துக் கொண்டிருக்கும் போது, ஒரு சிறுவன் சங்க உறுப்பினர் குஞ்சன் சிங்கின் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுக்கிறான்.*





*ஒரு குழந்தை தனது பெற்றோருடன் வேக நடைப்பயிற்சி நிகழ்வில் பங்கேற்கிறது.*

வெகுவாக கவர்ந்தது" என்று குறிப்பிட்டார். செயின்ட் அல்போன்சோ நிறுவனம் 74 பதக்கங்களுடன் பட்டியலில் முதலிடத்தை பிடித்தது. பிரயாஸ் அறக்கட்டளையைச் சேர்ந்த புஷ்கல் தனிநபர் போட்டியில் நான்கு தங்கப்பதங்களுடன் தனித்து நின்றது.

இந்த சிறப்பு விளையாட்டுப் போட்டி வரம்புகளைத் தாண்டி, குழந்தைகளை அவர்களாகவே இருக்க அனுமதிக்கும்போது என்ன சாத்தியம் என்பதை வெளிப்படுத்தும் வகையில் இருந்தது என்று சங்கத்தின் உறுப்பினர் மனோஜ் குமார் தெரிவித்தார். இரண்டு நிகழ்வுகளின் முடிவுகளிலும் மகிழ்ச்சி அடைந்த சங்கத்தின் சமூகசேவை பிரிவு இயக்குநர் உமேஷ் குப்தா கூறுகையில், "உள்ளடக்கம் என்பது ஒரு கருத்து அல்ல, செயல். இன்று ஒவ்வொரு குழந்தையும் பெருமைப்படுவதற்கும், கவனிக்கப்படுவதற்கும் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் இடமளிக்க முடிந்ததில் நாங்கள் பெருமைப்படுகிறோம் என்று அவர் கூறினார்.

இதுபோன்ற தளங்களை மேலும் ஏற்பாடு செய்வதில் ஆர்வம் உள்ள நம்ரதா கூறுகையில், "விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களுக்குப் பொதுவானது என்றாலும் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு வாய்ப்புகள் மிகக் குறைவாகவே தெரிகிறது.

இன்று நாம் குழந்தைகள் முகத்தில் மகிழ்ச்சியைப் பார்த்தோம். அவர்கள் உற்சாகத்துடன் விளையாட்டுகளில் பங்கேற்றார்கள். அவர்களின் பெற்றோர்களின் முகத்திலும் மகிழ்ச்சியை காண முடிந்தது" என்றார். புதிய தலைவர் தீனதயாள் அகர்வாலும், இந்த நிகழ்ச்சிகளை அடுத்த ஆண்டும் நடத்துவதற்கு தயாராக உள்ளார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

87 வயதான இந்த சங்கம் 1939 இல் நிறுவப்பட்டது. இந்த ஆண்டு சங்கம் கல்வியில் கவனம் செலுத்தி வருகிறது. நகரில் உள்ள பல பள்ளிகள் புதுப்பிக்கப்பட்டன. ஏழை மாணவர்கள் படிக்கும் பள்ளியில் கணினி ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெண்கள் மேம்பாடு மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தற்காப்புக் கலை மற்றும் பாதுகாப்பான தொடுதல் எது என்பது குறித்து பள்ளிகளில் பயிலரங்குகள் நடத்தி வருகிறோம். இது எங்களின் முக்கியமான திட்டம் என்பதால் வரும் காலங்களில் மேலும் பல பெண் குழந்தைகளுக்கு இந்த திட்டத்தை எடுத்துச் செல்ல விரும்புகிறோம். இந்த ஆண்டு சங்கம் இரண்டு இன்டராக்ட் சங்கங்களை பட்டயப்படுத்தியது. மேலும் ஆக்ரா ராயல்ஸ் ரோட்டரி சங்கத்தை ஆதரித்து அதற்கு ரோட்டேரியன்களின் மனைவிமார்களை பட்டய உறுப்பினர்களாக சேர்த்துள்ளோம் என்று தெரிவித்தார்.■



Rotary PEOPLE OF ACTION

# போஷ் உதவியுடன் கிராமப்புற இளைஞர்களை மேம்படுத்துதல்

ரஷீதா பகத்

கிராமப்புற மற்றும் கீழ் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை மேம்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக கொல்கத்தா ரோட்டரி சங்கம், RID 3291, போஷ் பிரிட்ஜ் திட்டத்தை அடையாளம் கண்டது. இது போஷ் இந்தியாவின் ஒரு CSR முயற்சியாகும், இது இந்தியாவில் ரோட்டரியுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

“இந்தத் திட்டம், இந்திய அரசின் ஸ்கில் இந்தியா மிஷனின் ஒரு பகுதியாகும். வேலையில்லாத இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளித்து, அவர்களை வேலைக்குத் தயார்படுத்துவதே இதன் நோக்கம். RID 3191 PDG ஜீதேந்திர அனேஜாவின் உதவியுடன், இந்த தனித்துவமான முயற்சியைப் பற்றி நாங்கள் அறிந்தபோது இந்தத் திட்டம் ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க தாக்கத்தை நாங்கள் புரிந்துகொண்டோம் - 15,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து, போஷின் நெட்வொர்க் மூலம் அவர்கள் வேலைவாய்ப்பு பெறவும் உதவியுள்ளது” என்கிறார் இந்தத் திட்டத்தின் முக்கிய உந்துசக்தியாக இருந்த சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் ரீனா மல்பானி.

தனது குடும்ப அறக்கட்டளையான - தாராச்சந்திரா மற்றும் சாந்தி மகேஸ்வரி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலராகவும் ரீனா இருக்கிறார். இந்த அறக்கட்டளை, தாழ்ந்த சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த பெண்களுக்கு அதிகாரமளிக்கும் ஒரு திட்டத்தை நடத்துகிறது, மேலும் தகுதியான சில மாணவர்களின் கல்விக்கும் ஸ்பான்சர் செய்கிறது.

போஷ் பிரிட்ஜ் திட்டத்தின் கீழ் வேலையில்லாத இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிப்பதற்கான ஒரு திட்டத்தை தனது சங்கம் செயல்படுத்தினால், பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு போஷ் உடன் இணைந்துள்ள 3,000 நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று அவர் நம்பினார்.

ஆனால் கிழக்கு இந்தியாவில்



போஷ் பிரிட்ஜ் மையம் எதுவும் இல்லை என்பதை அவர் கண்டறிந்தார். இச்சிக்கலை ஒரு வாய்ப்பாக மாற்றிய அவரது சங்கத்தின் ரோட்டேரியர்கள், நவம்பர் 2024-ல் நடந்த போஷ் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட பிறகு, கொல்கத்தாவிலிருந்து 45 நிமிட தூரத்தில் உள்ள பாருய்பூர் மாவட்டத்தில் உள்ள மல்லிக்பூரில் ஒரு மையத்தை அமைக்க முடிவுசெய்தனர்.

“இதற்காக, பெண்கள் மேம் பாட்டுத் துறையில் பணியாற்றும் ஒரு அரசு சாரா நிறுவனமான அவேர்னஸ் ஃபவுண்டேஷன் ஃபார் என்விரான்மென்ட் அண்ட் ஸ்கில் டெவலப்மென்ட் உடன் இணைந்து ஒரு மையத்தை அமைத்தோம்” என்றார். அந்நிறுவனத்திற்கு மல்லிக்பூரில் சுமார் 3–4 ஏக்கர் பரப்பளவில் ஒரு பண்ணை வீடு உள்ளது என்றும், இந்த பயிற்சியால் பயனடையும் கிராமப்புற இளைஞர்களை அடையாளம் காண இது சரியான இடமாகவும் இருந்தது என்றும் விளக்கினார். போஷ் ஒரு பயிற்சிப் பிரிவில் அதிகபட்சமாக 25 இளைஞர்களை அனுமதிக்கிறது. இதில் எட்டு வாரங்கள் தியரி வகுப்புகளும், நான்கு வாரங்கள் செய்முறைப் பயிற்சி மற்றும் இன்டர்ன்ஷிப் ஆகியவை அடங்கும். வேலை விண்ணப்பத்திற்கான CV எழுதுவதற்கான பயிற்சி மற்றும் மாதிரி நேர்காணல்களும் நடத்தப்படுகின்றன.

இந்திய அரசின் ஸ்கில் இந்தியா திட்டத்தில் பங்கேற்கும் PP மித்ராவுக்கு சொந்தமான பண்ணை வீட்டில், போஷ் பயிற்சிக்கு மூன்று வகுப்பறைகளை ஒதுக்கினார். பயிற்சிக்குத் தேவையான கணினிகளையும் அவர் வழங்கினார். டாக்டர் ரீனாவின் அறக்கட்டளை பயிற்சியாளரின் சம்பளமான சுமார் ரூ.16,000-ஐ செலுத்தும்.

“பொதுவாக, இதுபோன்ற திட்டங் களுக்கு, தகுதியான பயனாளிகளைக் கண்டுபிடிப்பதை விட பணத்தைக் கண்டுபிடிப்பது எளிது. ஆனால் எங்கள் சங்க உறுப்பினர்களின் உதவியால் இந்த இளைஞர்களைக் கண்டுபிடிக்க முடிந்தது” என்றார். அவர்கள் 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களைத் தேடிக் கொண்டிருந்தார்கள், ஆனால் ஆச்சரியப்படும் விதமாக ஒரு பட்டதாரி கூட போஷ் பயிற்சிக்கு விண்ணப்பித்திருந்தார். இதற்கான முக்கிய காரணம் பொருத்தமான வேலைகளைக் கண்டுபிடிப்பதில் உள்ள பெரும் சிரமம், மேலும் 60–70 சதவீத ஆட்சேர்ப்பு மற்றும் சுமார் ரூ. 15,000 ஆரம்ப சம்பளம் ஆகியவை சேருவதற்கான ஊக்கமாக இருந்தன. ஒரு முறை கட்டணம் வெறும் ரூ. 1,000 மட்டுமே; பல கல்லூரிகள் இந்த பிரிட்ஜ் படிப்பை ரூ.15,000 கட்டணத்தில் வழங்குகின்றன என்று ரீனா கூறுகிறார்.

மல்லிக்பூரில் உள்ள பயிற்சி மையத்தை RI இயக்குனர் அனிருதா



**இடமிருந்து:** *சங்கத்தலைவர் அபா, மாவட்ட தொழில் திறன் தலைவர் பார்த்தா பிரதிம் சக்ரவர்த்தி மற்றும் திட்டத் தலைவர் ரினா.*



RI *இயக்குநர் அனிருதா ராய்சௌத்ரி,* PDG *ரஜனி முகர்ஜி, திட்டத் தலைவரும் முன்னாள் தலைவருமான டாக்டர் ரினா மல்பானி மற்றும் சங்கத்தலைவர் அபா லூனியா ஆகியோர் திறன் மையத்தில்.*

ராய்சௌத்ரி திறந்துவைத்தார். ரோட்டரி மற்றும் போஷ் கூட்டணியை அமைப்பதில் முக்கிய பங்கு வகித்தவர் இவர். மூன்று மாத காலத்திட்டத்தில், மாணவர்கள் கணினி அடிப்படைகள், ஆங்கிலம் மற்றும் இன்றைய வேலை சந்தைக்கு தேவையான மென் திறன்கள் ஆகியவற்றில் பயிற்சி பெறுவார்கள்.

பயிற்சியாளர்கள் போஷ் நடத்தும் 4 நாள் தீவிர பயிற்சித் திட்டத்தின் மூலம் சான்றிதழ் பெற வேண்டும் மற்றும் தகுதி பெற ஒரு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். பயிற்சி கருவிகள் மற்றும் பாடத்திட்டம் போஷால் இலவசமாக வழங்கப்படுகிறது.

பெண்கள் மேம்பாட்டுத் துறையில் பணியாற்றும் அவேர்னஸ் ஃபவுண்டேஷன், வடிவமைப்பு மற்றும் தையல் படிப்பில் சிங்கருடன் கூட்டு சேர்ந்துள்ளது. அவர்கள் அடிப்படை நகை வடிவமைப்பு மற்றும் அழகு பராமரிப்பு படிப்புகளையும் வழங்குகிறார்கள்.

சுவாரஸ்யமாக, ரீனாவின் நிறுவனம் கொல்கத்தாவிலிருந்து சுமார் 50 கி.மீ தொலைவில் உள்ள தியாலியில் பெண்களுக்கான திறன் மேம்பாட்டு மையத்தையும் சிங்கருடன் இணைந்து அமைத்துள்ளது. “நான் 2023-ல் எனது சங்கத்தின் தலைவராக இருந்தபோது இதைத் தொடங்கினேன். இது ஆறு மாத தையல் படிப்பை வழங்குகிறது, மேலும் வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு சான்றிதழ்களும் தையல் இயந்திரங்களும் வழங்கப் படுகின்றன. அவர்களுக்கு வேலை கிடைக்கவும் நாங்கள் உதவுகிறோம். எனக்கு இரண்டு அல்லது மூன்று நிறுவனங்களுடன் தொடர்பு இருப்பதால், அவர்கள் எப்போதும் இதுபோன்ற திறமையான தொழிலாளர்களைத் தேடுகிறார்கள். தொழில்துறை பயன் பாட்டிற்கான ஆடைகளை தயாரிக்கும் ஒரு நிறுவனத்தின் உரிமையாளருடன் நான் கோல்ஃப் விளையாடுகிறேன், இந்த பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது குறித்து நான் அவரிடம் பேசினேன். வேலை கிடைத்தவர்கள் ரூ.15,000–20,000 சம்பளத்தில் தொடங்குகிறார்கள், இது அவர்களுக்கு நல்ல வருமானம்.”

கொல்கத்தாவில் உள்ள கீதாஸ் சர்க்கிள் என்ற பூட்டிக்கின் உரிமையாளர் ஷைலேந்திர குப்தாவையும் ரீனாவுக்கு தெரியும்; “அவரும் கொல்கத்தா ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்தவர், அவர் தனது பூட்டிக்கிலிருந்து வரும் எஞ்சிய துணிகளை எங்களுக்கு வழங்குகிறார், நாங்கள் அதை எங்கள் பெண்களுக்கு பயிற்சி அளிக்கும் போது பயன்படுத்துகிறோம். நாங்கள் அவர்களுக்காக ஒரு சிறிய பேஷன் ஷோவையும் ஏற்பாடு செய்திருந்தோம்,

தனது சமூக சேவை ஆர்வத்தைப் பற்றி ரீனா கூறுகிறார், “இது ஒருவேளை என் அப்பாவிடமிருந்து எனக்கு வந்திருக்கலாம்; அவர் பெரிய அளவில் பணம் நன்கொடை அளிக்காவிட்டாலும், அவர் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்க அவர் விரைந்து சென்றது என் நினைவில் இன்றும் இருக்கிறது.”

ரோட்டரி-போஷ் ஒத்துழைப்பை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தவரும், இந்த முயற்சிக்கு வழிகாட்டியாகவும் இருந்த ராய்சௌத்ரிக்கும், முக்கியமான திட்ட விவரங்களை சந்தைப்படுத்து வதிலும் கையாளுவதிலும் முக்கிய பங்காற்றிய சங்கத்தின் தலைவர் அபா லூனியாவுக்கும் தனது நன்றியை பதிவு செய்கிறார்.

இந்த சங்கத்தின் அடுத்த நிகழ்ச்சி நிரல் இப்பகுதியில் மற்றொரு போஷ் பிரிட்ஜ் பயிற்சி மையத்தைத் தொடங்குவதுதான். அடுத்த ஆண்டு நான் உதவி ஆளுநராக இருக்கும்போது, இன்றைய தேவைக்கேற்ப நமது இளைஞர்களை வேலைச் சந்தைக்கு ஏற்ற திறன்களைப் பெறச் செய்யும் இந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்தை விரிவுபடுத்த நான் கடுமையாக உழைப்பேன்” என்று ரீனா கூறினார்.

மல்லிக்பூரின் போஷ் மையத்தில் உள்ள 23 இளைஞர்களில் பெரும்பாலோர் பெண்கள். அவர்களில் பலர் வகுப்புகளுக்கு வருவதில்லை, ஏனெனில் அவர்களில் பலர் பணம் சம்பாதிக்க சில வேலைகளையும் செய்ய வேண்டியுள்ளது. “இது அவர்களின் வாழ்க்கையின் யதார்த்தம், நாங்கள் அதைச் சமாளிக்க வேண்டும். ஆனால் கூட்டு முயற்சியாலும் தொலைநோக்குப் பார்வையாலும் இந்த முயற்சி உண்மையிலேயே வாழ்க்கையை மாற்றும், என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்” என்று அவர் கூறுகிறார்.■

*ரோட்டரி போஷ் திறன் மையத்தில் மாணவர்கள்.*




Your Pathway to Medicine Starts at
Xavier University School of Medicine
& KLE Belgaum
XAVIER UNIVERSITY SCHOOL OF MEDICINE
KARNATAKA LINGAYAT EDUCATION SOCIETY
6 Years
Pre-Med to Doctor of Medicine /
Doctor of Veterinary Medicine Programme
Empathy in Action:
Your Medical Journey at
XUSOM
Healing Together:
The Future of Animal Care at
XUSOVM
Register for our Webinar
Admission open for September 2025
Xavier Students are eligible for H1/J1 Visa Programme
To Apply Visit:
application.xusom.com
admissions@xusom.com
WhatsApp
+1 516-927-0418
ADVT.

Rotary PEOPLE OF ACTION

# புனேவின் கேபின் பள்ளிகள்

ஜெய்ஸ்ரீ

புனேவின் சாங்வி குடிசைப் பகுதிகளில் உள்ள பல குழந்தைகளுக்கு, வகுப்பறையில் அமர்ந்து எழுத்துக் களைக் கற்றுக்கொள்வது என்பது ஒரு காலத்தில் எட்டாக்கனியாக இருந்தது. ஆனால் இன்று, ரோட்டரி கிளப் ஆஃப் பிம்ப்ரி, RID 3131 அமைத்த கேபின் பள்ளி காரணமாக, அந்த கனவு நனவாகி வருகிறது.

“இங்கே குறிப்பிட்ட பாடத் திட்டமோ அல்லது வகுப்புகளோ இல்லை. பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்கள், குழந்தைகள், ஏன் பெரியவர்கள்கூட எளிதாக உள்ளே வந்து படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம்” என்கிறார் சங்கத்தலைவர் சந்தோஷ் கிரஞ்சே. இந்தப் குடிசைப் பகுதிகளில் உள்ள குழந்தைகள் பள்ளியில் இருக்க வேண்டிய நேரத்தில் தங்கள் வாழ்க்கையை வீணடிப்பதை நேரில் கண்ட பிறகு, போர்டா கேபின் பள்ளி என்று அழைக்கப்படும் இது 2024 இல் அமைக்கப்பட்டது. “இது சும்மா இருக்கும் மனம் சைத்தானின் பட்டறை என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம். குழந்தைகளுக்கு வாழ்க்கையில் ஒரு நோக்கம் இல்லாதபோது, அவர்கள் எளிதில் தீய பழக்கங்களுக்கு ஆளாகிறார்கள் அல்லது எளிதாக பணம் சம்பாதிக்க பிச்சை எடுக்கிறார்கள். இந்த எண்ணம் எங்களுக்கு தூக்கமில்லாத இரவுகளைத் தந்தது. அப்போதுதான் நாங்கள் ஆலோசித்து, கற்றலில் அவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் ஒரு அடிப்படைப் பள்ளிக்கான இந்த யோசனையைக் கொண்டு வந்தோம்,” என்று அவர் விளக்குகிறார்.

மறுபயன்பாடு செய்யப்பட்ட கப்பல் கண்டைனருக்குள் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பள்ளி, பிம்ப்ரி-சின்ச்வாடின்



நியூ சாங்வியில் ஒரு திறந்த மைதானத்தில் அமைந்துள்ளது. சங்கம் பல ஆண்டுகளாக தொடர்பு வைத்துள்ள ஜன் சேவா அறக்கட்டளை ஆசிரியர்கள், “அனைவரும் தினமும் திரும்பி வர ஆவலுடன் இருக்கும் வகையில் வேடிக்கையான முறையில்” வகுப்புகள் நடத்துகிறார்கள். மராத்தி, இந்தி மற்றும் கணிதப் பாடங்கள் வெள்ளைப் பலகையிலும், எழுத்துக்கள், எண்கள் மற்றும் அடிப்படை அறிவியல் கருத்துக்களை சித்தரிக்கும் வண்ணமயமான அட்டவணைகளைப் பயன்படுத்தியும் கற்பிக்கப்படுகின்றன.

தற்போது அந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 50 குழந்தைகள் இந்தப் வகுப்புகளில் பயில்கின்றனர். “அவர்களின் பிள்ளைகள் தெருக்களில் திரிவதற்குப் பதிலாக கற்றுக்கொள்வதில் நேரத்தைச் செலவிடுவதைக் கண்டு அவர்களின் பெற்றோர் நிம்மதி அடைந்துள்ளனர். இந்தக் குழந்தைகளில் பெரும்பாலானோர் எந்த முறையான பள்ளிக்கும் சென்றதில்லை. இங்கு அவர்கள் ஆங்கிலம் மற்றும் மராத்தியில் எழுத்துக்கள் மற்றும் எளிமையான கணிதம் என அடிப்படைகளிலிருந்து தொடங்குகிறார்கள்” என்கிறார் கிரஞ்சே. புத்தகங்கள், சீருடைகள் மற்றும் எழுதுபொருட்கள் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன, மேலும் ஊழியர்கள் நட்பையும் குழுப்பணியையும் வளர்க்க ஆரோக்கியமான விளையாட்டுகளை ஏற்பாடு செய்கின்றனர். “அவர்கள் வறுமை, கல்வியறிவு இல்லாத மற்றும் பதற்றம் நிலவும் சூழலில் வாழ்கின்றனர். இதுபோன்ற சூழ்நிலைகளில், அவர்கள் அமைதியாக இருப்பது மிகவும் முக்கியம்; அவர்களின் கட்டுப்பாடு மற்றும் அமைதி அவர்களைச் சுற்றியுள்ள பெரியவர்களுக்கு ஒரு உத்வேகமாக இருக்க வேண்டும்” என்று அவர் விளக்குகிறார்.

முறையான கல்வியில் இருந்து விலகிய சுமார் 20 டீனேஜர்களுக்காக இந்தப் பள்ளி இணைப்பு வகுப்புகளை நடத்துகிறது. ஜன் சேவா ஊழியர்கள் அவர்களை நுழைவுத் தேர்வுகளுக்குப் பயிற்றுவித்து, பள்ளிகளில் மீண்டும் சேர்வதற்கு உதவுகிறார்கள். “கடந்த ஆண்டு எங்கள் மாணவர்களில் ஒருவர் தனது உயர்நிலைப் பள்ளித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றார், அவருக்கு கல்லூரி உதவித்தொகை பெற நாங்கள் உதவினோம். இந்தப் பள்ளியின் மற்றொரு மாணவர் தனது டிப்ளமோவை முடித்து தற்போது வேலைவாய்ப்பை பெற்றுள்ளார். அவரது தாயார், வீட்டு வேலை செய்பவர், அவரது எதிர்காலம் பாதுகாப்பாக இருப்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறார்” என்று சங்கத்தலைவர் பெருமையுடன் கூறுகிறார்.

6–16 வயது வரையிலான குழந்தைகள் கேபின் பள்ளியில் அனுமதிக்கப்படுகிறார்கள், அங்கே படிப்பைத் தவிர, சுய பாதுகாப்பு, மாதவிடாய் சுகாதாரம், பாதுகாப்பான தொடுதல் மற்றும் கலாச்சார நடத்தை பற்றிய பட்டறைகளிலும் அவர்கள் கலந்துகொள்கிறார்கள். மூத்த மாணவர்கள் இளையவர்களுக்கு வகுப்புகளை நடத்துவதற்கு கூட முன்வருகிறார்கள். சங்கத்தின் நன்ஹே கதம் முயற்சியின் கீழ், நீண்ட தூரம் பள்ளிக்குச் செல்லும் தகுதியான குழந்தைகளுக்கு பழுதுபார்க்கப்பட்ட சைக்கிள்கள் பரிசளிக்கப்படுகின்றன. இரத்தசோகை, கண் கோளாறுகள் மற்றும் பல் சுகாதாரத்திற்காக குழந்தைகளை பரிசோதிக்க மருத்துவ முகாம்கள் தொடர்ந்து ஏற்பாடு செய்யப்படுகின்றன. சங்கம் மாணவர்களுக்கு தொடர்ந்து



*RC பிம்ப்ரியால் ஆதரிக்கப்படும் பழங்குடி கிராமங்களில் ஒன்றில் சாகுபடி செய்யப்படுகிறது.*



*கிராமவாசிகள் தங்கள் விளைச்சலுடன்.*

எங்கள் உதவியை கோரினார். இந்தப் பகுதியில் நல்ல மழை பெய்தாலும், சரியான சேமிப்பு வசதிகள் இல்லை. எனவே இந்த கிராமங்கள் நான்கு மாதங்களுக்கு மட்டுமே அதிக நீர் பெறுகின்றன, அதன் பிறகு நிலத்தடி நீர் குறைகிறது" என்று திட்ட இயக்குனர் தனஞ்சய் பிங்கே நினைவுகூர்ந்தார்.

சர்வதேச மானிய ஆதரவுடன், சங்கம் பண்ணைக் குளங்கள் மற்றும் தடுப்பணைகளை கட்டியது. கிராம மக்களுக்கு விதைகள், கால்நடைகள் மற்றும் பழக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. நவீன விவசாய நுட்பங்களில் அவர்களுக்கு பயிற்சி அளிக்க சங்கம் BAIF மேம்பாட்டு ஆராய்ச்சி அறக்கட்டளையுடன் இணைந்து செயல்பட்டது. குழு கிணறுகளுக்காக ₹15 லட்சம் நிதியுதவி அளித்து டாடா மோட்டார்ஸ் சங்கத்தின் முயற்சிக்கு ஆதரவளித்தது. இந்த முன்னேற்றம் மிகவும் திருப்திகரமாக உள்ளது, என்கிறார் கிரஞ்சே. "எங்கள் உறுப்பினர்கள் கிராமங்களின் மாறிவரும் தேவைகளை மதிப்பிட ஒவ்வொரு மாதமும் கிராமங்களுக்குச் செல்கிறார்கள். ஹேப்பி வில்லேஜஸ் திட்டம்

ஊட்டச்சத்து நிறைந்த உணவை விநியோகிக்கிறது.

இந்தப் பள்ளியின் வெற்றியால் உற்சாகமடைந்த சங்கம், புனேவில் உள்ள மேலும் மூன்று குடிசைப் பகுதிகளில் போர்டா கேபின் பள்ளிகளை அமைத்துள்ளது. நவி மும்பையைத் தளமாகக் கொண்ட விவசாய இயந்திரங்களை தயாரிக்கும் போண்டியோளி & பவேசி இந்தியா, கார்ப்பரேட் பங்குதாரராக உள்ளது. சங்கத்தின் உறுப்பினரான DGN நிதின் தமலே, இந்த திட்டத்தின் தீவிர ஆதரவாளர்.

கல்விக்கு அப்பாற்பட்டு, ஜன் சேவா குழு உள்ளூர் மக்களுக்கு வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், ஆதார் அட்டைகள், ரேஷன் அட்டைகள் அல்லது எரிவாயு இணைப்புகள் போன்ற அத்தியாவசிய ஆவணங்களுக்கு விண்ணப்பிக்கவும் உதவுகிறது. "எங்களின் அடுத்த குறிக்கோள் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி தொடங்குவது. தையல், மின்சாரம் மற்றும் இயந்திரவியல் படிப்புகளுக்கான வகுப்புகள் திட்டமிடப்பட்டு வருகின்றன. அவர்களின் எதிர் காலத்தை மீண்டும் எழுத நாங்கள் உறுதியாக உள்ளோம்" என்கிறார் அவர்.

சங்கத்தின் தாக்கம் குடிசைப் பகுதிகளுக்கு அப்பாலும் பரவுகிறது. அதன் முதன்மைத் திட்டமான ஹேப்பி வில்லேஜஸ் திட்டத்தின் கீழ், சஹ்யாத்ரி மலைகளில் உள்ள பீமாசங்கருக்கு அருகிலுள்ள இரண்டு தொலைதூர பழங்குடி கிராமங்களான கர்புட் மற்றும் கோபேவாடியை தத்தெடுத்துள்ளது. "ஒரு தசாப்தத்திற்கு முன்பு, கிராம சர்பஞ்ச் நீர் வழங்க

*புனேவின் நியூ சங்வியில் உள்ள போர்டா கேபின் பள்ளியில் ஒரு தியான வகுப்பு நடந்து வருகிறது.*





*மேல்நிலைப் பள்ளியில் சேர்க்கை பெற்ற கேபின் பள்ளியின் முன்னாள் மாணவரை அங்கீகரித்து, சங்கத்தலைவர் சந்தோஷ் கிரஞ்சே (வலதுபுறத்திலிருந்து ஐந்தாவது) பாராட்டுகிறார்.*

எங்களின் பெருமை, மேலும் ஒவ்வொரு புதிய தலைவரும் அதைத் தொடர உறுதியளிக்கிறார். சமீபத்தில் தடுப்பணைகளில் இருந்து நேரடியாக வீடுகளுக்கு தண்ணீர் எடுக்க ஒரு சூரிய மின்சார பம்பை நிறுவியுள்ளோம்."

இந்த கிராமங்களுக்குப் பொதுவான இரண்டு பள்ளிகளை சங்கம் புதுப் பித்துள்ளதுடன், மாணவர்களுக்கு ஆண்டுதோறும் கல்வி உபகரணங்கள், சீருடைகள் மற்றும் காலணிகளையும் வழங்குகிறது. "திறமையான மாணவர்களின் உயர் கல்விக்கு நாங்கள் ஆதரவளிக்கிறோம் மற்றும் நகரக் கல்லூரிகளில் டிப்ளமோ அல்லது பட்டப் படிப்புகளைத் தொடர அவர்களுக்கு உதவுகிறோம்," என்கிறார் பிங்கே. இந்த மாணவர்களில் சிலர் டாடா மோட்டார்ஸில் பயிற்சி பெற்று ஆண்டுக்கு சுமார் ₹3 லட்சம் சம்பாதிக்கின்றனர்.

இந்த கிராமங்களிலும் மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகின்றன. ஏப்ரல் மாதம், கண் புரை அறுவை சிகிச்சை தேவைப்படும் 25 கிராம மக்களை சங்கம் அடையாளம் கண்டு, H V தேசாய் கண் மருத்துவமனையில் அவர்களுக்கான சிகிச்சைக்கு உதவியது, மேலும் நோயாளிகள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு போக்குவரத்து மற்றும் உணவு வசதிகளை வழங்கியது.

ஆறு ஆண்டுகளாக இந்த திட்டத்தை மேற்பார்வையிட்டு வரும் பிங்கே, தற்போது இரண்டு கிராமங் களிலும் நன்கு அறியப்பட்டவராக இருக்கிறார். "இந்த திட்டத்தில் அவரது தொடர்ச்சி ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது" என்கிறார் கிரஞ்சே.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, சங்கம், ஜன் சேவா அறக்கட்டளை மற்றும் CSR பங்குதாரரான செல்லோ உடன் இணைந்து, வெல்ஹே மற்றும் போர் தாலுக்காக்களில் உள்ள இரண்டு கிராமங்களை வியத்தகு முறையில் மாற்றியது. இந்தக் கிராமங்களில் சுமார் 300 கழிப்பறைகள் கட்டப்பட்டன மேலும் "ஸ்மார்ட் வகுப்புகள், வகுப்பறை மரச் சாமான்கள் மற்றும் சுகாதார வசதிகளுடன் பள்ளிகளை மேம்படுத்தினோம்." தடுப்பணைகள் கட்டப்பட்டன, இது கிராம மக்கள் அதிக பயிர்களை சாகுபடி செய்ய உதவுகிறது. கிராம மக்களுக்கும் கால்நடைகளுக்கும் மருத்துவ முகாம்களை சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது, என்று அவர் குறிப்பிடுகிறார். ■

Rotary PEOPLE OF ACTION

# திருப்பதி பயணத்திற்குப் பின்னால் இருந்த நுணுக்கமான திட்டமிடல்

ரஷீதா பகத்

“ஆதார் அட்டை, பான் அட்டை அல்லது பாதுகாப்பு சோதனை எதுவும் இல்லாமல் திருப்பதி தரிசனம் செய்தது என் வாழ்வில் இதுவே முதல்முறை, அந்த அனுபவம் அற்புதமாக இருந்தது,” என RID 3233-இன் ஆளுநரான மகாவீர் போத்ரா உற்சாகமாக கூறுகிறார். புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டத்தின் ஆளுநராகப் பொறுப்பேற்றவுடன் 1,650 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கும் அவர்களுடன் வந்தவர்களுக்கும் அவர் ஏற்பாடு செய்த சிறப்பு தரிசனம் பற்றி அவர் பேசுகிறார்.

“மாற்றுத்திறனாளி குழந்தைகளுடன் பழகுவதில் செய்வதில் நான் எப்போதும் ஆர்வமாக இருக்கிறேன்... அவர்கள் தினசரி எதிர்கொள்ளும் கஷ்டங்களுடன் ஒப்பிடும்போது, நாம் சொர்க்கத்தில் வாழ்கிறோம். அவர்களில் பலரால் கேட்கவோ, பேசவோ அல்லது பார்க்கவோ முடியாது. நான் 2014-15 இல் எனது சங்கத்தின் (RC டி நகர்) தலைவராக இருந்தபோது, சுமார் 1,500 சிறப்பு குழந்தைகளுக்காக ஒரு நாள் முகாமை ஏற்பாடு செய்திருந்தேன், அந்த நிகழ்ச்சியில் அனைத்து குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன,” என்று அவர் மேலும் கூறுகிறார்.

ரோட்டரி சின்னம் பொறிக்கப்பட்ட பிரகாசமான மஞ்சள் நிற சட்டைகளை அணிந்திருந்த சிரிக்கும் குழந்தைகளின் மகிழ்ச்சியான புகைப் படங்களைக் கொண்ட அவரது திருப்பதி திட்டம், தமிழ்நாட்டின் உள்ளூர் ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தது. பல வெளியீடுகள் மற்றும் சேனல்கள், சென்னையிலிருந்து 1,000க்கும் மேற்பட்ட சிறப்பு குழந்தைகளுக்காக ரோட்டரி திருப்பதி திருமலை தேவஸ்தானத்தில் எவ்வாறு சிறப்பு தரிசனம் ஏற்பாடு செய்தது மற்றும் அவர்கள் ஒரு சிறப்பு ரயில் மூலம் திருப்பதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்ற கதையை முக்கியப்படுத்தின.

போத்ரா சமீபத்தில் ரோட்டரி நியூஸ் டிரஸ்ட் அலுவலகத்திற்கு வந்தபோது, அவருக்கு இந்த யோசனை எப்படி வந்தது என்றும், 1,000 குழந்தைகள் என்ற பெரும் எண்ணிக்கையிலானவர்களுக்கு இதுபோன்ற ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்வது எவ்வளவு கடினமானது என்றும் நான் அவரிடம் கேட்டேன். அவர் பகிர்ந்து கொண்ட விவரங்கள்... இந்த நிகழ்ச்சிக்குச் செய்யப்பட்ட நுணுக்கமான திட்டமிடலை கேட்டு நான் வியந்தேன்! ரோட்டரி திட்டங்களை செயல்படுத்துவதில் இருக்கும் திட்டமிடல் மற்றும் கடின உழைப்பின் முழு அளவை நாம் அரிதாகவே உணர்கிறோம்.

“அது நிச்சயம் எளிதாக இல்லை, அது உற்சாகமாக இருந்தது சரிதான், ஆனால் 1,000 குழந்தைகளை கையாளும்போது எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்று நினைத்து நான் பயந்தேன். குழந்தைகளில் ஒருவர் ரயிலில் இருந்து விழுந்து விடலாம் அல்லது குதித்து விடலாம், அல்லது






திருப்பதி செல்லும் வழியில் ரயில் பயணத்தை அனுபவிக்கும் குழந்தைகள்.

விபத்தில் சிக்கலாம், இதனால் நான் சிறைக்கு செல்ல வேண்டியிருக்கும். நான்கு நாட்களாக எனக்கு தூக்கம் வரவில்லை.”

இந்த யோசனையின் தோற்றம் குறித்து, போத்ரா தனது பதவி காலத்திற்கு முன் மலேசியாவில் தனது PETS கருத்தரங்கை ஏற்பாடு செய்தபோது, “எனது ஆண்டிற்காக நான் எந்த குறிப்பிட்ட திட்டத்தையும் வைத்திருக்கவில்லை, ஆனால் திடீரென்று, PETS இன் கடைசி நாளில், 1,000க்கும் மேற்பட்ட சிறப்பு குழந்தைகளுக்கு திருப்பதி தரிசனத்திற்காக ஒரு சிறப்பு திட்டத்தை செய்யப் போகிறோம் என்று நான் அறிவித்தேன். ஆனால் எனக்கு தேவஸ்தானத்தில் செல்வாக்கும் இல்லை, அதை எப்படி செய்வேன் என்ற திட்டமும் இல்லை” என்று நினைவுகூர்ந்தார்.

மலேசியாவில் இருந்து வீடு திரும்பிய பின், அந்த அறிவிப்பு அவரது மனதில் ஓடிக்கொண்டே இருந்தது, அவர் தனது ICICI வங்கி மேலாளரிடம் திருமலை தேவஸ்தானத்தில் மூத்த அதிகாரிகள் எவரேனும் தெரியுமா என்று கேட்டார், அதற்கு அவர் தனது வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களில் ஒருவர் அங்கு ஒரு அறங்காவலர் என்றார். போத்ராவின் திட்டத்தை விவரிக்கும் ஒரு கடிதத்தை அவர் கேட்டார். “ரோட்டரி, எங்கள் மாவட்டம் மற்றும் 1,500-க்கும் மேற்பட்ட சிறப்பு குழந்தைகளுக்கும் அவர்களுடன் வருபவர்களுக்கும் சிறப்பு தரிசனம் ஏற்பாடு செய்யும் எனது திட்டம் பற்றி விளக்கி ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்தேன், மேலும் அனைத்து தளவாடங்களையும் நாங்கள் கவனித்துக் கொள்வோம் என்று உறுதியளித்து ஒரு சிறப்பு நேரத்தை கோரினேன்.”



DG *மகாவீர் போத்ரா*



DG *போத்ரா மற்றும்* PDG *ராஜா சீனிவாசன்.*

ஒரு மாதமாக எந்த பதிலும் இல்லை, அந்த அறங்காவலரை நேரில் சந்திக்க அவர் தயாராகிக் கொண்டிருந்தபோது, குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் தரிசனத்திற்கு சிறப்பு அனுமதி அளித்து ஒரு பதில் அவருக்கு கிடைத்தது. மகிழ்ச்சியடைந்த DG, செலவு ரூ.10 லட்சத்திற்குள் இருக்கும்

என்று நினைத்தார்; திரும்ப டிக்கெட் சுமார் ரூ.500 ஆக இருக்கும், மேலும் குழந்தைகளுக்கு உணவு இலவசமாக கிடைக்கும் ஏனெனில் அவரால் எளிதாக சில ஸ்பான்சர்ஷிப்களை பெறமுடியும். அவர் ரூ.15 லட்சம் வரை கூட செலவு செய்ய தயாராக இருந்தார்.

அவர் விரைவாக 5 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்தார், ஒவ்வொரு உறுப்பினரும் ரூ.1.5 லட்சம் பங்களித்தனர்; ஏற்கனவே பட்ஜெட்டில் பாதி (மேல் வரம்பில்) கையில் இருந்தது, பயணத்திற்கான நுணுக்கங்கள் தொடங்கின. ரெனிகுண்டா நிலையத்திற்கு குழந்தைகளை அழைத்துச் செல்ல ஒரு ரயிலை கோரி தெற்கு ரயில்வேயின் பொது மேலாளருக்கு ரோட்டேரியர்கள் ஒரு கடிதம் கொடுத்தனர். ஆனால் அவர், சப்தகிரி எக்ஸ்பிரஸ் பயணிகளுக்கு மட்டுமே ஒதுக்கப்பட முடியும், ஆனால் அவர்கள் ஒரு சிறப்பு ரயிலை எடுத்துக் கொள்ளலாம் என்றும் பதிலளித்தார்.

ரோட்டேரியர்கள் தாங்கள் தயாராக இருப்பதாக கூறியபோது, ஒவ்வொரு பெட்டியும் ரூ.1 லட்சம் செலவாகும் என்றும், 1,600 பயணிகள் இருந்ததால் 16 பெட்டிகள் மற்றும் ஒரு பேன்ட்ரி காரை வாடகைக்கு எடுக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அந்த செலவு மட்டுமே ரூ.15 லட்சம் என்ற முழு பட்ஜெட்டையும் தாண்டியது.

இந்த செலவைத் தவிர, ரயில்வே விதிகளின்படி, அவர்கள் ரூ.10.5 லட்சம் டெபாசிட் செலுத்த வேண்டும், இது நிகழ்ச்சி முடிந்து 6 மாதங்களுக்குப் பிறகு மட்டுமே திரும்ப வழங்கப்படும். மேலும், தண்ணீர், தின்பண்டங்கள், சுத்தம் செய்தல் போன்ற கூடுதல் செலவுகளை அவர்களே ஏற்க வேண்டும்.

“இது ஒரு திருமண மண்டபம் போல செயல்படுகிறது; ரயில் உங்களுக்கு காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை வாடகைக்கு விடப்படுகிறது; நீங்கள் இரவு 10.05 மணிக்கு திரும்பினால், ரூ.1 லட்சம் அதிகமாக செலவாகும்” என புன்னகையுடன், போத்ரா கூறுகிறார்.

“டெபாசிட் உட்பட, ரயிலின் செலவு மட்டுமே ரூ.27 லட்சம் என்பதால் பணம் எங்கிருந்து வரும் என்று நாங்கள் யோசித்தோம். ரெனிகுண்டா நிலையத்தில் இருந்து திருமலைக்கு குழந்தைகளை ஏற்றிச் செல்ல இலவச பேருந்துகளை திருமலை டிப்போவிடம் கேட்டோம், ஆனால் அவர்கள் ரெனிகுண்டாவில் இருந்து இலவச பேருந்துகளை எங்களால் கொடுக்க முடியாது, எங்கள் பேருந்துகள் திருப்பதியில் இருந்து திருமலைக்கு மட்டுமே செல்கின்றன. பேருந்துகளுக்கு ITCTC-ஐ தொடர்பு கொள்வது நல்லது என்று சொன்னார்கள்; ; நாங்கள் அப்படியே செய்தோம், ஒவ்வொரு பேருந்தும் ரூ.40,000 செலவாகும் என்று கூறப்பட்டது. எங்களுக்கு 38 பேருந்துகள் தேவைப்பட்டன, எனவே செலவு சுமார் ரூ.15 லட்சம், மேலும் முன்னெச்சரிக்கை வைப்புத் தொகையாக கூடுதலாக ரூ.4 லட்சம் தேவைப்பட்டது.”

இப்போது சென்னை ரயில் நிலையத்தில் இருந்து திருமலைக்கு அடிப்படை போக்குவரத்து - ரயில் மற்றும் பேருந்து - செலவு மட்டுமே ரூ.50 லட்சம் வரை உயர்ந்திருந்தது. போத்ரா உடனடியாக தனது 5 உறுப்பினர்கள் கொண்ட குழுவை 15 உறுப்பினர்கள் கொண்ட குழுவாக விரிவுபடுத்தி, ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் ரூ.1.5 லட்சம் கோரினார். இதன் மூலம், ரயிலின் செலவு, டெபாசிட் உட்பட, ரூ.25 லட்சத்தை அவர் பெற்றார்.

இதற்கிடையில் அவரது குழு இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என அனைத்து மதங்களைச் சேர்ந்த குழந்தைகளையும் கொண்ட சுமார் 70 சிறப்பு குழந்தை களுக்கான பள்ளிகளை அடையாளம் கண்டது. “நான் தனிப்பட்ட முறையில் பள்ளி அதிகாரிகளிடம் பேசினேன், உங்களுக்கு விருப்பம் இருந்தால், குழந்தைகளை அனுப்பவும். எந்த கட்டாயமும் இல்லை, மேலும் அனைத்து மதங்களைச் சேர்ந்த குழந்தைகளையும் அழைத்துச் செல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம் என கூறினேன். தங்கள் குழந்தைகள் வெளியே செல்ல மிகவும் ஆர்வமாக இருப்பதாக அவர்கள் கூறினர்.”



*போத்ரா குழந்தைகளுக்கு மதிய உணவை பரிமாறுகிறார்.*

பின்னர் தனித்தனி குழுக்களை அமைத்து விரிவான திட்டமிடல் தொடங்கியது; "நாங்கள் உணவு, திட்டமிடல், குழந்தைகளின் பாதுகாப்பு, ஸ்பான்சர்ஷிப் போன்றவற்றுக்காக 16 குழுக்களை அமைத்தோம். ரயிலில் காலை சிற்றுண்டி மற்றும் தேநீர், திருமலையில் மதிய உணவு, திரும்பும்போது ரெனிகுண்டாவில் மீண்டும் தேநீர் மற்றும் பின்னர் இரவு உணவுக்காக ஸ்பான்சர்ஷிப் பணம் திரட்டப்பட்டது. முகேஷ் அம்பானி, ரஜினிகாந்த் போன்றோருக்கு உணவு தயாரித்த அருசுவை ஸ்ரீதர் உணவு வழங்கினார்," என்று போத்ரா மேலும் கூறுகிறார்.

உணவை விட, பேக்கிங் பொருள் மிகவும் விலை உயர்ந்தது என்று அவர் மேலும் கூறுகிறார்; குழந்தைகளுக்கு ஓடும் ரயிலில் உணவு பரிமாறப்பட வேண்டியிருந்ததால், அது சிதறாமல் இருக்கும் வகையில் பேக் செய்யப்பட வேண்டும்.

அந்த காலை, சென்னை சென்ட்ரல் நிலையம் ஒரு விழாக்கோலத்தைக் கொண்டிருந்தது. 1,000க்கும் மேற்பட்ட சிறப்பு குழந்தைகள், 400க்கும் மேற்பட்ட உடன் வருபவர்கள், மற்றும் 200க்கும் மேற்பட்ட ரோட்டேரியர்கள் மற்றும் ரோட்டராக்டர்கள், அனைவரும் ரோட்டரி லோகோவுடன் பிரகாசமான மஞ்சள் நிற டி-ஷர்ட்களை அணிந்து, சிறப்பு ரயிலை நோக்கி அணிவகுத்தனர்.

திட்டமிடல் மிகவும் நுணுக்கமாக இருந்தது, குழந்தைகளை அழைத்து வருவது மற்றும் மீண்டும் இறக்கி விடுவது கூட ஏற்பாடு செய்யப் பட்டது; "நாங்கள் பள்ளியிடம் அவர்களின் சொந்த வாகனங்களை பயன்படுத்தும்படி சொன்னோம், ஆனால் செலவை நாங்களே செலுத்தினோம். சிலர் டீசல் பணம் கேட்டனர், மற்றவர்கள் படி கேட்டனர். அவர்கள் என்ன கேட்டாலும் நாங்கள் கொடுத்தோம்."

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், தேவஸ்தான கமிட்டி, விஜிலென்ஸ் துறை, சென்னை காவல்துறை ஆணையர்... ஆகியோருக்கு அனுமதி கோரி கடிதங்கள் எழுதப்பட்டன; 18 கடிதங்கள் தேவைப்பட்டன மற்றும் வழங்கப்பட்டன; அனுமதிகள் மெதுவாக ஆனால் நிச்சயமாக வந்தன. அடுத்ததாக திருமலையில் அமர்ந்து உணவு உண்ணும் அன்னதானம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

நான்கு மாதங்கள் தீவிர திட்டமிடலுக்குப் பிறகு, சிறப்பு நாள் உதயமானது, ஆனால் கனமழையுடன். "குழந்தைகள் சரியான நேரத்தில் ரயில் நிலையத்திற்கு வந்து சேர்வார்களா என்று நாங்கள் மிகவும் பயந்தோம்,



*உடல் ஊனமுற்ற பெண்கள் கோவிலில் பாலாஜியை தரிசனம் செய்ய உதவும் ரோட்டேரியன்கள்.*



ஆனால் கடவுளின் அருளால் அவர்கள் அனைவரும் சரியான நேரத்தில் வந்து சேர்ந்தனர். ஒவ்வொரு குழந்தைக்கும் தண்ணீர் மற்றும் தின்பண்டங்களுடன் ஒரு பை கொடுக்கப் பட்டது, மேலும் அவர்கள் ரயிலில் அதனை கிட்டத்தட்ட ஒரு விருந்து போல் சாப்பிட்டனர். குழந்தைகளின் கழிப்பறை தேவை களுக்கு உதவ ஒவ்வொரு பெட்டிக்கும் இரண்டு பராமரிப்பு உதவியாளர்கள் ஒதுக்கப்பட்டனர். ஒவ்வொரு பெட்டியிலும் பாதுகாப்பு பணியாளர்கள் இருந்தனர் மற்றும் எந்த குழந்தையும் கதவுகளை திறக்க முயற்சிக்காத வகையில் பூட்டப்பட்டிருந்தது. ஒவ்வொரு பெட்டியிலும் இரண்டு ரோட்டேரியர்கள் மற்றும் இரண்டு ரோட்டராக்டர்களும் இருந்தனர்.

ரோட்டேரியர்கள் மருத்துவ அவசர நிலையையும் மனதில் கொள்ள வேண்டும். "பயணத்தின் போது மருத்துவ அவசரநிலை ஏற்பட்டால் ஆம்புலன்ஸ் மற்றும் சில மருத்துவர்கள் தேவை என்று அப்பல்லோ மருத்துவமனைக்கு நான் எழுதினேன். ஒரு மணி நேரத்திற்குள் எனக்கு ஒரு பதில் கிடைத்தது, எந்த செல்வாக்கையும் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லாமல் அந்த கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டது. குழந்தைகளுக்கான தொப்பிகளுக்காக அவர்கள் ரூ.1.5 லட்சம் கொடுத்தனர், மேலும் மருத்துவமனை சென்னையில் ஒன்று, ரெனிகுண்டாவில் ஒன்று என இரண்டு ஆம்புலன்ஸ்களை, 20 மருத்துவர்களுடன், அனைத்தும் இலவசமாக வழங்கும் என்று கூறினர்."

மதியம் 12.30 மணிக்கு திருமலைக்குள் நுழைந்த பிறகு இரண்டு குழந்தைகள் காணாமல் போனதாக தெரியவந்தபோது ஒரு பதட்டம் ஏற்பட்டது, ஆனால் அவர்கள் விரைவாக கண்டுபிடிக்கப்பட்டனர்.

எங்களுக்கு நேரடி அனுமதி கிடைத்தது, பாதுகாப்பு காவலர்களுடன், கிட்டத்தட்ட 100 காவல்துறை/பாதுகாப்பு பணியாளர்கள் இருந்திருப்பார்கள். மேலும் அன்னதானத்திற்காக, தேவஸ்தானத்திற்கு ரூ.1.51 லட்சம் நன்கொடை அளித்தோம்," என்கிறார் ஆளுநர்.

மொத்த பயண செலவு ரூ.75 லட்சம், ஆனால் பணத்தை விட, ஒரு குழந்தைக்கு கூட ஏதாவது தவறு நடந்து விடுமோ என்ற பயம் அதிகமாக இருந்தது. "பயணத்தின் போது யாராவது இறந்துவிட்டால், அல்லது விபத்து ஏற்பட்டால், நான் என்ன செய்வேன் என்ற தொடர்ச்சியான கேள்விகள் என் மனதில் இருந்தன. கடைசி ஐந்து நாட்களில் நான் மிகவும் கவலைப்பட்டதால், அனைத்து பயணிகளுக்கும் காப்பீட்டு பாதுகாப்பு கோரினேன்; அவர்கள் ரூ.5 லட்சம் பாதுகாப்பு வழங்க முன்வந்தனர், ஆனால் நான் அதை ரூ.25 லட்சமாக உயர்த்தினேன், மேலும் ரூ.1.63 லட்சம் பிரீமியம் செலுத்தினேன்."

ஒவ்வொரு குழந்தையும் புன்னகையுடன் ஒரு திருப்பதி லட்டை சுமந்து சென்றதை கண்டது அவருக்கு கிடைத்த வெகுமதி. "ரோட்டரி மற்றும் அதன் வலையமைப்புக்கு நன்றி, சில சிறப்பு குழந்தைகளுக்கு இந்த அற்புதமான அனுபவத்தை எங்களால் வழங்க முடிந்தது. மேலும் இந்த மிக பயனுள்ள திட்டத்தை திட்டமிட்டு செயல்படுத்த உதவிய எங்கள் மாவட்டத்தின் அனைத்து சங்கங்களுக்கும் நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்" என்று போத்ரா மேலும் கூறுகிறார்.■

Rotary PEOPLE OF ACTION

# மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஒரு வேடிக்கை மாரத்தான்

கிரண் ஜெஹரா




மராத்தானில் தனது "நண்பர்களுடன்" ஒரு பங்கேற்பாளர்.

350-க்கும் மேற்பட்ட சிறப்புக் குழந்தைகள் (மாற்றுத்திறனாளிகள்) கால்களில் ஷூக்களை அணிந்து கொண்டு நண்பர்களின் கைகளை இறுகபற்றியபடி 3 கி.மீ. தொலைவு மாரத்தான் போட்டியில் உற்சாகத்துடன் பங்கேற்றனர்" என்று கொல்கத்தா மகாநகர் ரோட்டரி சங்கத்தின் (RID 3291) தலைவர் பிரமீளா துகார் கூறினார். இந்த சங்கம் சமீபத்தில் உன்மிஷ் கற்றல் மையம் மற்றும் கொல்கத்தா போலீசாருடன் இணைந்து குழந்தைகளுக்கான மாரத்தான் போட்டியை நடத்தியது. இந்த போட்டியில் 400 சிறப்பு குழந்தைகள் மற்றும் அதற்கு சமமான எண்ணிக்கையில் தன்னார்வலர்கள் உள்பட 1200 பேர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட PRIP சேகர் மேத்தா, "வெற்றியை நாம் எண்ணிக்கை, பதக்கங்கள் மூலம் கணக்கிடுகிறோம். இன்று வெற்றி என்பது சிரிப்பிலும், மைல்கற்களிலும், உள்ளடக்கத்திலும் கணக்கிடப்பட்டுள்ளது" என்றார். இந்த போட்டியை கொல்கத்தா காவல்துறை ஆணையர் மனோஜ் வர்மா கொடியசைத்து தொடங்கிவைத்தார். இந்த மாரத்தான் காவலர்கள் தடகள சங்கத்திலிருந்து விஜய் வெற்றிவிழா நுழைவுவாயில் வரை சென்று திரும்பியது.

"அதிவேகமாகச் சென்று வெற்றிக்கோட்டை எட்டுபவர்களுக்கு மகுடம் சூட்டுவதல்ல, மாறாக தோழமை மற்றும் உள்ளடக்கத்தை கொண்டாடுவதே எங்கள் முயற்சியின் நோக்கம்" என்று பிரமீளா கூறினார். "இது ஓடுவது பற்றியல்ல, ஆனால், எங்களாலும் முடியும் என்று எடுத்துக்காட்டுவது. இது அனைத்து குழந்தைகளும் ஒரே பாதையில், ஒரே சமூகத்தில் மனித ஆற்றலை கொண்டாடுவதை நினைவுபடுத்துவது. பங்கேற்பாளர்கள் 1.5 கி.மீ. தொலைவுள்ள குட்டி மாரத்தான் அல்லது 3 கி.மீ. தொலைவுள்ள மாரத்தான் என எதில் வேண்டுமானாலும் சேரலாம். தேவைக்கு ஏற்ப பல்வேறு திறனுள்ள குழந்தைகள் இதை அணுகமுடியும் என்றார்.

நீலம் மற்றும் மஞ்சள் நிற டீ ஷர்ட் அணிந்தவர் MHSI பள்ளியைச் சேர்ந்த தன்னார்வலர்கள். இவர்கள் தான் மாரத்தான் குழந்தை களுக்கு நண்பர்களாக இருந்தவர்கள். "நான்



**இடமிருந்து:** *மாரத்தான் ஓட்டத்தின் தொடக்க விழாவில் ராஷி மேத்தா, சங்கத்தலைவர் பிரமீளா துகர் மற்றும் PRIP சேகர் மேத்தா.*




*மாரத்தானில் ஒரு சிறப்பு குழந்தை.*

மற்றவர்களுக்கு உதவ இங்கு இருப்பதாக நினைத்தேன். ஆனால், எனது நண்பர்கள் ஒவ்வொரு அடியையும் எப்படிக் கொண்டாட வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தனர்” என்று 12 வயது மாணவி அனன்யா கூறினார். அவர் ஆரவ் என்னும் வாய் பேசமுடியாத சிறுவனுடன் போட்டியின் முழு தொலைவையும் கடந்து சென்றார். “அவன் அதிகம் பேசவில்லை. ஆனால், நாங்கள் எல்லைக் கோட்டை அடைந்தபோது, என்னைப் பார்த்து சிரித்தான். அந்த தருணத்திலேயே அவன் எல்லாவற்றையும் கூறிவிட்டான்” என்று புன்னகைத்தார்.

“பல குழந்தைகளுக்கு இது அவர்களின் முதல் மாரத்தான் போட்டி. அவர்கள் மிகுந்த மன உறுதியுடன் இதில் பங்கேற்றனர். போட்டி முழுவதுமே சிரிப்பும் வேடிக்கையுமாக இருந்தது” என்று பிரமீளா குறிப்பிட்டார். “போட்டி நிகழ்வுகள் பெரும்பாலும் வேகம் மற்றும் தனிப்பட்ட சாதனைகளை மையமாக கொண்டிருக்கும் நேரத்தில், நண்பர்களுடனான இந்த மாரத்தான் அதற்கு மாறானது. வெற்றி என்பது ஆழமான மனிதாபிமானம் கொண்டது. நாங்கள் மாரத்தான் எப்படி இருக்க வேண்டும் என்பதை மாற்றவில்லை, குழந்தைகளின் உணர்வில்தான் மாற்றத்தை ஏற்படுத்தினோம்” என்று அவர் கூறினார்.■



**பந்தயத்தில் சக்கர நாற்காலியில் பயணிக்கும் பங்கேற்பாளரும் அவரது நண்பரும்.**

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரி மூலம் புத்துயிர் பெறும் எத்தியோப்பிய குழந்தைகள்

ரஷீதா பகத்



பெங்களூரு விமான நிலையத்திற்கு வந்தபோது, எத்தியோப்பிய குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோருடன், PDG ராஜேந்திர ராய் (இடமிருந்து மூன்றாவது) மற்றும் RC பெங்களூரு மிட் டவுன் முன்னாள் தலைவர் அதுல் கௌஷல் (வலமிருந்து இரண்டாவது).



பெங்களூரில் உள்ள ரோட்டரியின் மாபெரும் திட்டத்தின் மூலம் சிறிய இதயங்களைச் சீரமைப்பதன் சமீபத்திய பயனாளிகள் எத்தியோப்பியாவைச் சேர்ந்த குழந்தைகளாவர். பெங்களூரில் உள்ள ரோட்டரி நீடி ஹார்ட் ஃபவுண்டேஷன் (RNHF) மூலம் இவர்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது. இது நீடி ஹார்ட் ஃபவுண்டேஷனின் (NHF) ஒரு பிரிவாகும். பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஒரு புதிய வாழ்வைத் தருவதை கனவாகக் கொண்ட RC பெங்களூர் இந்திராநகரின் முன்னாள் தலைவர் O P கன்னா அவர்களால் 2021-ல் இது தொடங்கப்பட்டது. RNHF மற்றும் NHF இணைந்து 2001 முதல் 12,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் இதயங்களைச் சீரமைக்க உதவியுள்ளன.

கன்னா 2001இல் NHF ஐத் தொடங்கினார், அது அப்போது ரோட்டரி திட்டமாக இருக்கவில்லை. ரோட்டரியைச் சேராதவர்களும் மணிப்பால் மருத்துவமனையைச் சேர்ந்த சில மருத்துவர்களும் அறுவை சிகிச்சைக்கு உதவ பணம் கொடுத்து வந்தனர். 2007-08 ஆம் ஆண்டில் ராஜேந்திர ராய் பிரிக்கப்படாத RID 3190 இன் மாவட்ட ஆளுநராக இருந்தபோது, அவரது தலைமையில், முதல் முறையாக, இதய அறுவை சிகிச்சைகளுக்கான மானியத்திற்கு மாவட்டம் விண்ணப்பித்தது மற்றும் அந்த நிதிகளின் உதவியுடன் இதய நோய்களால் பாதிக்கப்பட்ட 48 குழந்தைகளுக்கு ரோட்டரி மூலம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. “பாகிஸ்தானைச் சேர்ந்த முன்னாள் அறங்காவலர் அஜிஸ் மெமன் எனது பேட்ஜ்மேட், அவர் பாகிஸ்தானிலிருந்து 12 குழந்தைகளை இதய அறுவை சிகிச்சைகளுக்காக அனுப்பினார். 2021-ல், நம்மில் சிலர் ரோட்டரி மூலம் பின்தங்கியவர்களுக்கான இதய அறுவை சிகிச்சைகளை கவனித்துக்கொள்வதற்கு ஒரு தனி அறக்கட்டளையைத் தொடங்க வேண்டும் என்று உணர்ந்தோம், அதன் மூலம் RNHF தொடங்கப்பட்டது,” என்கிறார் RNHF இன் நிர்வாக அறங்காவலர் ராய்.

2021–22-ல் சேகர் மேத்தா RI தலைவராக இருந்தபோது, “மருத்துவ வசதிகள் பற்றாக்குறை மற்றும் திறந்த இதய அறுவை சிகிச்சைகளைச் செய்ய அவர்களின் மருத்துவமனைகளின் திறன் குறைவாக இருப்பதாலும், இந்த ஆப்பிரிக்க நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 400 க்கும் மேற்பட்ட குழந்தைகள் அகால மரணமடைவதாலும், எத்தியோப்பியாவைச் சேர்ந்த சில குழந்தைகளுக்கு இலவசமாக இதய அறுவை சிகிச்சையை ஏற்பாடு செய்ய RNHF-ல் உள்ள எங்களைக் கேட்டுக்கொண்டார்,” என்று அவர் மேலும் கூறுகிறார்.

இந்த அறக்கட்டளையுடன் தொடர்புடைய ரோட்டேரியர்கள் இதை ஒரு சவாலாகக் கண்டனர், ஏனெனில் இந்திய மருத்துவமனைகளில் வெளிநாட்டு குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சை செய்ய அரசின் ஆதரவு இல்லை. “ஏழைகளின் மருத்துவ சிகிச்சைக்கு அரசு திட்டங்கள் இருப்பதால், உள்ளூர் குழந்தைகளுக்குத் தேவைப்படுவதை விட அதிக நிதி தேவைப்பட்டதால் இது ஒரு பெரிய சவாலாக இருந்தது. ஆனால் ரோட்டரி பல ஆண்டுகளாகச் செய்யும் அனைத்து மனிதாபிமான திட்டங்களிலும் நடப்பது போல, நோக்கங்கள் நல்லதாக இருந்தால், வளங்களைக் கொண்டுவர ரோட்டரியின் மாயாஜாலம் உதவியது” என்றார் அவர்.

இந்த பெரிய திட்டத்தைப் பற்றி விளக்குகையில், குழந்தைகளுக்கு பெரும்பாலும் பிறவி இதய அசாதாரணங்கள் இருந்தன, அவை திறந்த இதய அறுவை சிகிச்சைகள் மூலமாக மட்டுமே சரி செய்ய முடியும்.

இந்த அறுவை சிகிச்சைகள் பெங்களூரில் உள்ள மூன்று குறிப்பிட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்பட்டன - ஜெயதேவா மருத்துவமனை-இது ஒரு அரசு மருத்துவமனை, மணிப்பால் மருத்துவமனை மற்றும் நாராயணா ஹிருதயாலயா. 2023–24 ரோட்டரி ஆண்டில், RNHF சுமார் 1,044 பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்

இலவச இதய அறுவை சிகிச்சைகளைப் பெற உதவியுள்ளது என்று அவர் மேலும் கூறுகிறார்.

இந்த எண்ணிக்கையுடன் கூடுதலாக, NHF மற்றும் RNHF பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தோனேசியா, எத்தியோப்பியா, நேபாளம் போன்ற நாடுகளில் இருந்து பிறவி இதய நோய்களால் பாதிக்கப்பட்ட சுமார் 300 வெளிநாட்டு குழந்தைகளுக்கும் உதவியுள்ளன.

பெங்களூரின் ரோட்டேரியர் களால் தங்கள் பாதிக்கப்பட்ட இதயங்களைச் சீரமைக்க உதவி பெற்ற எத்தியோப்பியா குழந்தைகளைப் பற்றி மீண்டும் கூறும்போது, பிரதமர் நரேந்திர மோடி தனது சமீபத்திய மன் கி பாத் நிகழ்ச்சியில், பிறவி இதய நோய்களுடன் பிறந்த எத்தியோப்பிய குழந்தைகளுக்கு இந்திய மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகள் எவ்வாறு திறந்த இதய அறுவை சிகிச்சைகளை செய்கிறார்கள் என்று குறிப்பிட்டபோது ரோட்டேரியர்ணகளுக்கு அது ஒரு பெருமையான தருணமாக இருந்தது. “எத்தியோப்பியாவில் உள்ள இந்திய NRI-கள் அத்தகைய குழந்தைகள் இந்திய மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்து அதன் பிறகு மகிழ்ச்சியாக வாழ உதவுகிறார்கள். மேலும் குடும்பம் இந்தியாவுக்குப் பயணிக்க வசதி இல்லாவிட்டால், அவர்களுக்கு அதுவும் இலவசமாக ஏற்பாடு செய்யப்படுகிறது” என்று அவர் கூறினார்.

துரதிர்ஷ்டவசமாக, பிரதமர் ரோட்டரியைக் குறிப்பிட வில்லை, ஆனால் அவர் பேசிக் கொண்டிருந்தபோது நேரடி ஒளிபரப்பில் ஓடிய காட்சி உள்ளடக்கத்தில் PDG ராய் உட்பட பெங்களூரில் உள்ள ரோட்டேரியர்கள் எத்தியோப்பிய குழந்தைகளையும் அவர்களது பெற்றோரையும் விமான நிலையத்தில் வரவேற்பது, அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வது போன்ற படங்கள் ஒளிபரப்பப்பட்டன. இந்த இதய அறுவை சிகிச்சை திட்டத்தைப் பற்றி பிரதமர் அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்த எத்தியோப்பியாவில் உள்ள இந்திய தூதரகம், குழந்தைகளை அடையாளம் காண்பது, அங்குள்ள மருத்துவர்கள் மற்றும் மருத்துவ மனைகளுடன் மருத்துவ ஆவணங் களை ஏற்பாடு செய்வது, தேவையான அனுமதிகளைப் பெறுவது போன்ற பல பின்னணி வேலைகளை நமது தூதரகத்துடன் ஒருங்கிணைந்து செய்யும் NRI ராஜீவ் ஷர்மாவை மையப்படுத்தி இருந்ததால், ரோட்டரி அத்தகைய முக்கியமான மக்கள் தொடர்பு வாய்ப்பை இழந்தது என்று ராய் கூறுகிறார்.

ஆனால் நிகழ்ச்சியில் ஒளிபரப்பப் பட்ட படங்கள் பிரதமர் யாரை குறிப்பிடுகிறார் என்பதில் எந்த சந்தேகத்தையும் விடவில்லை. “எப்படி யிருந்தாலும், அது எங்களுக்கு ஒரு இனிமையான ஆச்சரியமாக இருந்தது; ராஜீவ் இந்தியாவில் இருந்தார், அவர் அதைப் பற்றி எங்களுக்குத் தெரிவித்தார், மேலும் நாங்கள் அந்த நிகழ்ச்சியைப் பார்க்க முடிந்தது” என்கிறார் ராய்.

20 எத்தியோப்பிய குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சைக்கான நிதியை ஏற்பாடு செய்வதில் உள்ள நிதி சவால்களுக்குத் திரும்புகையில், அறுவை சிகிச்சை செய்யப்படும் மருத்துவமனைகள் அறுவை சிகிச்சையின் சிக்கல்தன்மையைப் பொறுத்து சுமார் ரூ.1.15 முதல் 1.50 லட்சம் வரை வசூலிக்கின்றன.

*எத்தியோப்பியாவிலிருந்து பயனாளிகளுடன், RC பெங்களூரு மிட் டவுனின் உறுப்பினர் கௌஷல் (இடது) மற்றும் பிமல் தேசாய்.*



இந்திய குடிமக்கள் – குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் இருவரும் – சம்பந்தப்பட்டிருக்கும்போது இது எளிதாக இருக்கும்; “உதாரணமாக, கடந்த ஆண்டு, இந்திய நோயாளி களுக்கு 1,044 இதய அறுவை சிகிச்சைகளைச் செய்தோம். ஒவ்வொரு தேவைப்படும் பணத்தில், ரூ.90,000 மாநில அரசால் வழங்கப்படுகிறது, மேலும் நாங்கள் மருத்துவமனைக்கு சராசரியாக ரூ.35,000 வழங்குகிறோம், இதனால் செலவு ஈடுகட்டப்படுகிறது. ஆனால் எத்தியோப்பியர்கள் அல்லது வேறு எந்த வெளிநாட்டினரும் அரசு மானியங்கள் தரப்படுவதில்லை, எனவே நாங்கள் பணத்தைத் திரட்ட வேண்டியிருந்தது” என்று அவர் கூறுகிறார்.

எனவே அவர் RC பெங்களூர் மிட்டவுனின் முன்னாள் தலைவர்களான F R சங்வி மற்றும் அதுல் கௌஷல் ஆகியோரைக் கேட்டார், அவர்கள் சில குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சைக்கு தேவையான மொத்த தொகையான ரூ.1.5 லட்சத்தை ஸ்பான்சர் செய்தனர். ஆனால் இந்த சங்கத்தின் மற்றொரு உறுப்பினர், பிமல் தேசாய், மேலும் நான்கு எத்தியோப்பிய






*RC பெங்களூரு மிட் டவுன் தலைவர் பழனி லோகநாதன் மற்றும் ரோட்டரி பெங்களூரு வெஸ்ட் தலைவர் யோகேஷ் பச்சிசியா ஆகியோருடன் PDG ராய்.*



குழந்தைகளுக்கு நிதியுதவி தேவை என்று கூறப்பட்டபோது, “20 குழந்தைகளுக்கும் ஸ்பான்சர் செய்ய தயாராக இருந்தார்! இந்த திட்டத்தின் கீழ் 20 எத்தியோப்பிய குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைகளை ஏற்பாடு செய்வோம் என்று PRIP சேகர் மேத்தாவிடம் நாங்கள் உறுதியளித்திருந்தோம். அவர்களின் சங்கத்தின் தொடர்ச்சியான ஆதரவுக்கு தலைவர் பழனிக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.” ஒவ்வொரு ஆண்டும், இந்த திட்டத்தின் கீழ், மேலே குறிப்பிட்டுள்ள மூன்று மருத்துவமனைகளில் 1,000-க்கும் மேற்பட்ட இந்திய குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு இதய அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன என்றார்.

இதுவரை, பெங்களூரில் உள்ள ஜெயதேவா இதய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நான்கு குழுக்களாக 18 எத்தியோப்பிய குழந்தைகளுக்கான இதய அறுவை சிகிச்சைகளை ரோட்டேரியர்கள் கவனித்துக்கொண்டனர். அப்போதைய ஜெயதேவா மருத்துவமனையின் இயக்குநரும் இப்போது கர்நாடகாவின் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் மஞ்சுநாத்,”எங்கள் பத்து ஆண்டுகளுக்கும் மேலான தொடர்பில் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் RNHF-க்கு எப்போதும் பெரும் ஆதரவை அளித்துள்ளார்.” டிசம்பர் 2022-ல் இருந்து சிறிய குழுக்களாக வரத் தொடங்கிய குழந்தைகளும், டிசம்பர் 2024-ல் வந்த கடைசி குழுவில் உள்ள நான்கு குழந்தைகளும், அவர்களது பெற்றோரும், எத்தியோப்பியன் ஏர்லைன்ஸ் மூலம் அடிஸ் அபாபாவில் இருந்து பெங்களூருக்கு இலவசமாக அழைத்து வரப்பட்டனர்.

எத்தியோப்பியாவில், RC அடிஸ் அபாபா போல், RID 7212-ன் தலைவர் ராஜீவ் சர்மா, கடந்த இரண்டு ஆண்டுகளில் எத்தியோப்பியர்களின் தடையற்ற பயணத்தை ஏற்பாடு செய்வதில் RNHF, அடிஸ் அபாபாவில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் எத்தியோப்பியன் ஏர்லைன்ஸுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டுள்ளார். “இந்த திட்டம் சாத்தியமானதற்கு RID 7212-ன் DG அலெக்ஸ் நியாகா மற்றும் DG அசெப் அஸ்ரா, IPDG லியோனார்ட் இட்டாஃபு மற்றும் DG ஜோ கமாவு அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்,” என்று ராய் மேலும் கூறுகிறார்.

இப்போது, PRIP மேத்தா கானாவிலிருந்து இதய பிரச்சனை களுடன் மேலும் இரண்டு குழந்தைகளை பரிந்துரைத்துள்ளார். வணிகராக இருக்கும் Rtn தேசாய், மேலும் நான்கு குழந்தை களுக்கான அறுவை சிகிச்சைகளை ஆதரிக்க தயாராக உள்ளார் என ராய் கூறுகிறார்,

RID 3191 மற்றும் 3192-ல் உள்ள ரோட்டரி சங்கங்களும் RNHF-ன் உதவியுடன் உலகளாவிய மானியங்கள் மற்றும் CSR மானியங்கள் மூலம் CHD உள்ள குழந்தைகளுக்கு இதய அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றன என்று அவர் மேலும் கூறுகிறார். “இந்த முயற்சியில் எங்கள் முக்கிய பங்காளிகளில் ஒருவர் அமெரிக்காவில் உள்ள கிப்ட் ஆப் லைப் மற்றும் அதன் தலைவர் PDG ரவி பூப்லாப்பூர் ஆவார், அவர் ஒரு AKS உறுப்பினர். ரோட்டரி பெங்களூரு வெஸ்ட் மற்றும் ரோட்டரி பெங்களூரு இந்திராநகர் ஆகியவை கிப்ட் ஆப் லைப் அமைப்புடன் இணைந்து குழந்தைகளுக்கான இருதய அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்ள பல உலகளாவிய மானியத்(GG) திட்டங்களை செயல்படுத்தி உள்ளன. இது பூப்பலப்பூர் மற்றும் அவரது சொந்த சங்கமான RID 7255-ல் உள்ள RC கோல்ட் கோஸ்ட் லேக் சக்ஸஸ் இன் பங்களிப்பினால் சாத்தியமானது.■

Rotary PEOPLE OF ACTION

# நாசிக்கில் ஆறுகளை சுத்தம் செய்தல்

ஜெய்ஸ்ரீ



மஹிராவாணி கிராமத்தின் அருகே நந்தினி ஆற்றில், நாசிக் ரோட்டரி சங்கம் ( RID 3030) தூர்வாரும் திட்டத்தை மேற்கொண்டதால் சுமார் 45 குடும்பத்தினர் பயனடைந்துள்ளனர். ஆற்றில் சுமார் 1.5 கி.மீ. தொலைவுக்கு 2 மீட்டர் ஆழத்தில் மண் வாரி இயந்திரங்கள் மூலம் தேங்கிக் கிடந்த சேறுகள், சகதிகள், வண்டல்கள் தூர்வாறப்பட்டபின் அதில் குறைந்தபட்சம் 60 மில்லியன் லிட்டர் தண்ணீரைச் சேமித்து வைக்க முடியும் என்கிறார் சங்கத்தின் உறுப்பினர் விநாயக் தேவ்தர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக, சங்கம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்த பட்சம் இரண்டு தடுப்பணை தூர்வாரி வருகிறது. பருவமழை தொடங்குவதற்கு முன் இந்தப் பணிகள் நடைபெறும். நேரம் மிகவும் முக்கியமானது. மழைக்கு முன்னதாக நீர்வழிப் பாதைகளை தூர்வாரினால், மழைநீர் வீணாகாமல் தடுக்க முடியும். ஆறுகள் மற்றும் ஓடைகளில் நீர் அதன் வழியே செல்லும். நிலத்தடி நீரும் புத்துயிர் பெறும் என்று அவர் விளக்கினார்.

இந்த சேவை நடவடிக்கையால் சுமார் 25 கிராமங்கள் பயனடைந்துள்ளன. நாசிக்கின் கிராமப்புற பகுதிகளில் மழைநீரை சேகரிக்க ஆயிரக்கணக்கான சிறிய தடுப்பணைகள் ஆறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே கட்டப் பட்டுள்ளன. இந்த கட்டமைப்புகள் நீர் ஆதாரம் குறையாமல் இருக்க உதவுகின்றன. எனினும் காலப்போக்கில் ஆறுகள், ஓடைகளில் சேறு, சகதி, வண்டல் மண் குப்பைகள் சேர்ந்து தண்ணீர் சேமிப்பையும், மற்றும் அவை செல்லும் வேகத்தையும் குறைக்கின்றன. இதை கவனிக்காமல் விட்டுவிட்டால், வண்டல் மண் அதிகமாகி மழையின் போது வெள்ளப் பெருக்கு ஏற்பட வழிவகுக்கிறது அல்லது வறண்ட காலங்களில் தண்ணீர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கின்றன என்று தேவ்தர் விளக்கினார்.

நாசிக்கில் உள்ள கிருஷி விக்யான் கேந்திரத்தில் பணி புரியும் தோட்டக்கலை நிபுணரும் சங்க உறுப்பினருமான ஹேம்ராஜ் ராஜ்புத், தமது பணியின் ஒரு பகுதியாக கிராமப்புற பகுதிகளுக்குச் சென்று வருகிறார். அவர் தூர்வார வேண்டிய நீர்நிலைகளை கண்டறிகிறார். அவர் கொடுக்கும் தகவல்களின் அடிப்படையில் சங்கம் ஒவ்வொரு ஆண்டும் தூர்வாரும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது என்கிறார் தேவ்தர்.

இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆண்டுக்கு ரூ.3 முதல் ரூ.4 லட்சம் வரை செலவாகிறது. கார்ப்பொரேட் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் CSR நிதி மூலம் செலவுகளை சமாளித்து வருகிறோம். இந்த ஆண்டு இந்த திட்டத்துக்கு நாசிக்கில் உள்ள "அக்ரான் பிளாஸ்ட்" என்னும் பேக்கேஜிங் தொழில் நிறுவனம் நிதி வழங்கி ஆதரித்துள்ளது. நூற்றுக்கணக்கான விவசாயிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் அணையின் 20 கி.மீ. தொலைவுக்கும் 10 கி.மீ. தொலைவுக்கு கரையின் இருபக்கங்களும் விரிவுபடுத்தப்பட்டு சீரமைக்கப் பட்டுள்ளன.

தூர்வாரப்பட்ட பிறகு, நீர்மட்டம் கணிசமாக அதிகரித்துள்ளது. விவசாயிகள் ஆண்டு முழுவதும் தங்கள் நிலங்களில் பயிர்செய்ய முடிகிறது. அவர்களது வருமானமும் அதிகரித்துள்ளது. அவர்கள் வேலை தேடி கிராமங்களிலிருந்து வேறு இடங்களுக்கு இடம் பெயரத் தேவையில்லை என்கிறார் அவர். தூர் வாரப்படும் மண்ணும் வீணாக்கப் படுவதில்லை. கனிமங்கள் நிறைந்த அந்த மண்ணுக்கு அதிக தேவை உள்ளது. உள்ளூர் விவசாயிகள் அதை தங்கள் நிலத்தை வளப்படுத்த பயன்படுத்துகின்றனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ராஜ்புத் தலைமையில் மியாவாகி காடுகளை உருவாக்க மரங்கள் நடும் பணி நடைபெற்றது. காந்திநகரில் உள்ள ஜனதா வித்யாலயாவில் உள்ள நிலப்பகுதியில் 1,000 மரக்கன்றுகள் நடப்பட்டன. ஆறே மாதங்களில் காடு வளர்ப்புத் திட்டத்தில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.■



**இடமிருந்து:** *தத்து தாகே, பெல்கான் தாகாவின் சர்பஞ்ச், ஹேம்ராஜ் ராஜ்புத், ராதே யோலே, PDG தாதா தேஷ்முக் மற்றும் சங்க செயலாளர் முகதா லேலே ஆகியோர் பெல்கான் தாகாவில் முன்பு மண் அகற்றும் பணி நடைபெற்றது.*

# ஜார்கண்ட் கிராமப்புறங்களில் கண் பராமரிப்பு

**கிரண் ஜெஹரா**

உத்வேகம் எதிர்பாராத இடங்களில் இருந்து வரலாம். RC ஜம்ஷெட்பூர், RID 3240-ஐச் சேர்ந்த ஜகந்நாத் சான்ட்ராவுக்கு, சிங்கப்பூர் தேசிய ஆவணக் காப்பகத்தின் அமைதியான கூடங்களில் அது நிகழ்ந்தது. “கோவிட் லாக்டவுனுக்கு சற்று முன்பு நான் அங்கு வேலைக்காகச் சென்றிருந்தபோது, 1947-ல் ரோட்டரி கிளப் ஆஃப் சிங்கப்பூர் நன்கொடையாக வழங்கிய ஒரு நடமாடும் மருந்தகத்தின் புகைப்படத்தைப் பார்த்தேன். இரண்டாம் உலகப் போரின்போது காயமடைந்த பொதுமக்களுக்கு அது சிகிச்சை அளித்திருந்ததுடன், தடுப்பூசி இயக்கங்களுக்கும் ஆதரவளித்தது. அந்தப் படம் மனிதாபிமான சேவைக்கான ரோட்டரியின் மரபை எனக்கு நினைவூட்டியது” என்று அவர் நினைவுகூர்ந்தார்.

அந்த உத்வேக தருணம் விரைவில் சொந்த மண்ணில் செயலாக மாறியது. அவரது மனைவி மதுமிதா சான்ட்ரா, சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார், 2021–22-ம் ஆண்டிற்கான உலகளாவிய மானியத் திட்டத்தைத் திட்டமிடுவதில் தொடக்க நிலையில் இருந்தார். அவர் ஒரு விரிவான சமூக மதிப்பீட்டை நடத்தவும், முக்கியமான தேவைகளைக் கண்டறியவும், குறிப்பாக ஜார்கண்டின் கிராமப்புறப் பகுதிகளுக்குள் கண் பராமரிப்புக்கான அணுகலை வலியுறுத்தவும் ஒரு குழுவை நியமித்தார். சான்ட்ரா, திட்ட மேலாண்மையில் தனது அனுபவத்தைப் பயன்படுத்தி, சங்க உறுப்பினர்களான டாக்டர் விஜயா பாரத் மற்றும் N ராமமூர்த்தி ஆகியோருடன் இணைந்து, முதன்மை தொடர்பாளராக அந்தக் குழுவில் இணைந்தார்.

அவர்களின் கூட்டு முயற்சிகளின்

*கண் பரிசோதனை முகாமில் கிராம மக்கள்.*



விளைவாக, ரோட்டரி சாட்டிலைட் கண் பரிசோதனை கிளினிக், $40,681 நிதியுதவியுடன் உருவானது. ஒரு சாதாரண பயன் பாட்டு வாகனம் முழுமையாகச் சித்தப்படுத்தப்பட்ட நடமாடும் கண் கண்டறிதல் வேனாக மாற்றப்பட்டது, “இது ஜம்ஷெட்பூரில் உள்ள ஃபோர்ஸ் மோட்டார்ஸின் புனைவுப் பிரிவின் உதவியுடன் முடிக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் துல்லியமான பொறியியலின் ஒரு சாதனை” என்று சான்ட்ரா நினைவுகூர்ந்தார்.

ஒரு வெற்றிகரமான சோதனை ஓட்டம் மற்றும் பணியாளர் பயிற்சிக்குப் பிறகு, வேனின் ஓட்டம் தொடங்கியது. ஜம்ஷெட்பூர் கண் மருத்துவமனை மற்றும் டாடா ஸ்டீல் ஃபவுண்டேஷனுடன் இணைந்து, இது ஜம்ஷெட்பூரைச் சுற்றியுள்ள 55 கிராமங்களில் பின்தங்கிய சமூகங்களுக்கு அத்தியாவசிய கண் பராமரிப்பை வழங்கத் தொடங்கியது, “வானிலைக்கு ஏற்றவாறு வாரத்திற்கு ஐந்து கண் முகாம்களை நடத்தியது” என்று சான்ட்ரா விளக்கினார். “முக்கியமாக சரியான நேரத்தில் மற்றும் மலிவு விலையில் கண் சிகிச்சை பெற முடியாத வயதான கிராமவாசிகள் மற்றும் பெண்களை நாங்கள் கவனிக்கிறோம். வீட்டுப் பணியாளர்கள் மற்றும் துப்புரவுப் பணியாளர்களுக்காக மாதந்தோறும் நகரத்தில் முகாம்களையும் நடத்துகிறோம்.”

பிப்ரவரி 2023 முதல் பிப்ரவரி 2025 வரை, இந்த வேன் 27,468 கிலோமீட்டர் பயணித்து, 394 கண் முகாம்களை நடத்தி, 10,970 தனிநபர்களைப் பரிசோதித்தது. முடிவுகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன: 2,970 கண்புரை வழக்குகள் கண்டறியப்பட்டன, ஜம்ஷெட்பூர் கண் மருத்துவமனையில் 846 அறுவை சிகிச்சைகள் நடத்தப்பட்டன. 4,137 ஒளிவிலகல் பிழைகள் கண்டறியப்பட்டன, மற்றும் 1,270 கண்ணாடிகள் ரோட்டரி-பிராண்டட் பெட்டிகளில் விநியோகிக்கப்பட்டன.

முக்கிய குழு உறுப்பினரான டாக்டர் விஜயா, திட்டத்தின் வெற்றி சூத்திரத்தை வலியுறுத்தினார்: “ஒரு தீவிரமான தேவைகள் மதிப்பீட்டோடு தொடங்குங்கள். யாருக்குச் சேவை செய்கிறீர்கள், என்ன குறைபாடுகள் உள்ளன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பின்னர் ஜம்ஷெட்பூர் கண் மருத்துவமனை மற்றும் டாடா ஸ்டீல் ஃபவுண்டேஷன் போன்ற சரியான உள்ளூர் நிறுவனங்களுடன் கூட்டாண்மைகளை உருவாக்குங்கள், அவை மருத்துவ நிபுணத்துவத்தைக் கொண்டு வந்தன மற்றும் தளவாடங்களை நிர்வகித்தன.”

எண்களுக்கு அப்பால், மனிதக் கதைகள் இந்த திட்டத்தை உயிர்ப்பிக்கின்றன. சான்ட்ரா அத்தகைய ஒரு கதையை விவரிக்கிறார் – கைலாஷ், 64 வயதான கட்டுமானத் தொழிலாளி, பல மாதங்களாக பார்வை குறைபாட்டால் போராடினார். “கருவிகள் அவர் கையிலிருந்து நழுவின, சாரக்கட்டுகளில் தனது கால்களை தவறவிட்டார், ஒவ்வொரு நாளும் தனது பாதுகாப்பைப் பற்றி அஞ்சினார். எங்கள் நடமாடும் கிளினிக் மூலம் அவருக்குப் பரிந்துரைக்கப்பட்ட கண்ணாடிகள் கிடைத்தபோது, அது அவரது வாழ்க்கையை மாற்றியது. அவர் தனது நம்பிக்கையையும் வாழ்வாதாரத்தையும் மீண்டும் பெற்றார்.”

மற்றொரு எடுத்துக்காட்டு சுரேந்திரா. அவர் ஜம்ஷெட்பூர் உயிரியல் பூங்காவில் உள்ள ஒரு வயதான விலங்கு பராமரிப்பாளர், பூங்கா ஊழியர்களுக்கான சிறப்பு முகாமில் தனது முதல் கண்ணாடிகளைப் பெற்றார். “நான் மீண்டும் பாதுகாப்பாக உணர்கிறேன்” என்றார், தெளிவான பார்வை விலங்குகளைப் பராமரிக்கவும் தனது கடமைகளை செய்யவும் எவ்வாறு உதவியது என்பதை விவரித்தார்.

ஒரு வலுவான காட்சி அடையாளம் திட்டத்தின் இருப்பை உறுதிப்படுத்த உதவியது மற்றும் ரோட்டரியின் பங்களிப்பு காணப்படுவதையும் நினைவில் வைக்கப்படுவதையும் உறுதி செய்தது. “இந்த கவனிப்பை ரோட்டரிதான் அவர்களுக்குக் கொண்டு வந்தது என்பதை ஒவ்வொரு பயனாளியும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். வேன் தெளிவாக பிராண்ட் செய்யப்பட்டுள்ளது, மற்றும் கண்ணாடி பெட்டிகள் முதல் பணியாளர் சீருடைகள் வரை அனைத்தும் ரோட்டரி லோகோவைக் கொண்டுள்ளன. இந்தத் தெரிவுநிலை விழிப்புணர்வையும் நம்பிக்கையையும் உருவாக்குகிறது” என்று சான்ட்ரா கூறினார்.

டிசம்பர் 2024-ல், சங்கம் தங்கள் உலகளாவிய மானிய கூட்டாளர் சங்கமான, RC கில்ட்ஃபோர்ட், RID 1145-இலிருந்து ஜான் ரேஞ்சர் மைல்ஸ் மற்றும் ஃபியோனா பவுலின்



மைல்ஸை வரவேற்றது. அவர்கள் உயிரியல் பூங்காவில் நடைபெற்ற கண் மருத்துவ முகாமில் பங்கேற்று பயனாளர்களுக்கு கண்ணாடிகளையும், ஜாம்ஷெட்பூர் கண் மருத்துவமனை மற்றும் டாடா ஸ்டீல் ஃபவுண்டேஷன் ஊழியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களையும் விநியோகித்தனர்.

ஆரம்பத்தில் கிராமப்புற மக்களிடையே நீரிழிவு விழித்திரை நோயைக் கண்டறிவதில் கவனம் செலுத்தப்பட இருந்த நிலையில், கண்டுபிடிப்புகள் குழுவை ஆச்சரியப்படுத்தின. “நீரிழிவு தொடர்பான அதிக எண்ணிக்கையிலான கண் சிக்கல்களைக் கண்டுபிடிப்போம் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் நாங்கள் கண்டுபிடித்தது இதற்கு நேர்மாறாக இருந்தது. இந்த தொலைதூரப் பகுதிகளில் நீரிழிவு நோய் அரிதாகவே இருந்தது” என்று டாக்டர் விஜயா குறிப்பிட்டார்.



RC *கில்ட்ஃபோர்டைச் சேர்ந்த ஜான் ரேஞ்சர் மைல்ஸ் மற்றும் ஃபியோனா பவுலின் மைல்ஸ், டாக்டர் விஜயா பரத் (இடமிருந்து இரண்டாவது) மற்றும் மதுமிதா சாண்ட்ரா (இடது).*


*ஒரு பயனாளி தனது ரோட்டரி கண்ணாடியை அணிந்துள்ளார்.*

இந்த எதிர்பாராத நுண்ணறிவு, பரிசோதனைத் தரவை மீண்டும் பகுப்பாய்வு செய்ய குழுவைத் தூண்டியது, இது ஒரு வித்தியாசமான சவாலை வெளிப்படுத்தியது: ஒளிவிலகல் பிழைகள் அதிகம் ஏற்படும் பிரச்சினையாக இருந்தது — 4,137 கண்டறிதல்களைக் கொண்டிருந்தது.

“கண்புரை அல்லது நீரிழிவு சிக்கல்களைப் போலல்லாமல், மங்கலான பார்வை உயிருக்கு ஆபத்தானது அல்ல” என்று விஜயா கூறினார். “பலர் மருந்துச் சீட்டுகளை பெற்றுக் கொண்டு, செலவு அல்லது அணுகல் இல்லாமை காரணமாக கண்ணாடிகள் வாங்குவதைத் தொடர வில்லை.” இதனால், சங்கம் “உயர்தர கண்ணாடிகளை மானிய விலையில் வழங்கும் என்லைடென்ட் விஷனுடன் கூட்டாண்மை செய்தது. இப்போது, பயனாளிகள் பார்வை குறைப்பாடை கண்டறிதல் மட்டுமல்லாமல், அடுத்தடுத்த முகாம்களில் தங்கள் தனிப்பயனாக்கப் பட்ட கண்ணாடிகளையும் பெறலாம் - அனைத்தும் ஒரே கூரையின் கீழ்” என்று அவர் விளக்கினார்.

இந்தத் திட்டம், “களத் தரவு மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தொடர்ந்து மேம்பட்டு வருகிறது. ஒவ்வொரு முகாமிலும் நாங்கள் புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்கிறோம். வேன் சென்ற பிறகும் விழிப்புணர்வும் ஆரம்பகால கண்டறிதலும் தொடர வேண்டும் என்பதற்காக பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு அடிப்படை கண் பரிசோதனையில் பயிற்சி அளித்துள்ளோம்” என்றார்.

ஒற்றைச் சங்க முயற்சியாகத் தொடங்கியது இப்போது மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக மாறியுள்ளது. RID 3250-லிருந்து ஐந்து சங்கங்கள் ஏற்கனவே இதுபோன்ற திட்டங்களைத் தொடங்கிவிட்டன. “நாங்கள் அவர்களுக்கு வழிகாட்டுகிறோம், வழியில் கற்றுக்கொண்ட அனைத்தையும் பகிர்ந்து கொள்கிறோம். ஒரு தினக்கூலித் தொழிலாளி மீண்டும் வேலைக்குச் செல்வது, ஒரு குழந்தை கரும்பலகையை மீண்டும் தெளிவாகப் படிப்பது, அல்லது ஒரு வயதான பெண் தனது பேரக்குழந்தைகளின் முகத்தைப் பார்ப்பது திட்டத்தின் மிகப்பெரிய வெகுமதி” என்று அவர் கூறுகிறார்.■




# Apply for the 2026 Programs of Scale award

If you have an initiative that has demonstrated its success and is ready to expand to help more people in more places, consider applying for The Rotary Foundation's 2026 Programs of Scale award.

One program may receive US$2 million over three to five years to further its impact.

**Concept notes from qualified Rotary and Rotaract clubs and districts will be accepted until 1 August 2025.**

Learn more at
**rotary.org/programsofscale**

Rotary



# ஜம்முவில் ரோட்டரி மருத்துவ முகாம்

ராஜீவ் பிரதான்

காஷ்மீரில் ஜம்மு மாவட்டத்தில் உள்ள பதேர்வா என்னும் நகரில் வசித்து வரும் மிதிலாதேவி என்னும் வயதான பெண்ணுக்கு பித்தப்பை அறுவைச்சிகிச்சை செய்யப்பட வேண்டும். பித்தப்பையில் கற்கள் காரணமாக கடந்த மூன்று ஆண்டுகளாக அவர் வலியால் துடித்துவந்தார். நாட்கள் கடந்த போதிலும் அவரால் அறுவைச்சிகிச்சை செய்துகொள்ள முடியவில்லை. இதுபற்றி கேள்விப்பட்ட பொது மருத்துவரும் PDG-யுமான கிரிஷ் குணே, அந்தப் பெண்ணை பற்றி விசாரித்தபோது, "அவரை, வீட்டுக்கு போகலாம்" என்று கூறிவிட்டதாக சிலர் கூறினர்.

இக்பால் முகமது என்னும் செயல்முறை உதவியாளர் (OT), வயதான அந்த பெண்ணும் அவரது மகளும் வீட்டிற்கு சென்றிருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் வெகுதூரத்தில் மலைப்பகுதியில் வசிக்கின்றனர். அவர்கள் நகரத்தில்தான் இருக்க வேண்டும். நான் கண்டுபிடித்து அழைத்து வருகிறேன்: என்றார். இக்பால் நகரம் முழுவதும் சுற்றித்திரிந்து ஒருவழியாக அவர்களைத் தேடி கண்டுபிடித்து அழைத்துவந்தார். அந்த வயதான பெண்ணுக்கு அடுத்த நாள் டாக்டர் கிரிஷ் பித்தப்பை அறுவைச்சிகிச்சை நடத்தினார். தாயாருக்கு அறுவைச்சிகிச்சை நடந்தபின் அவரது பெண் கண்ணீருடன் இப்படிக் கூறினார்: "நாங்கள் வீடு திரும்பியிருந்தால், இங்கு வந்திருக்க முடியாது. எனது தாயார் நோய் முற்றி வலியால் துடித்தே இறந்துபோயிருப்பார். நீங்கள் கடவுள் மாதிரி வந்து காப்பாற்றிவிட்டீர்கள். அதற்காக நன்றி".

ஜம்மு பிராந்தியத்தின் கிஷ்த்வார், பதேர்வா மற்றும் தோடா நகரங்களில் சமீபத்தில் நடைபெற்ற மெகா அறுவைச்சிகிச்சை முகாம் வெற்றிக் கதைகளில் இதுவும் ஒன்று. ரோட்டரி மாவட்டங்கள் 3131 மற்றும் 3132 இணைந்து 2022 முதல் ஜம்மு காஷ்மீரில் இதுபோன்ற முகாம்களை நடத்தி வருகின்றன. இப்போது முகாம் நடத்தும் 3070 மாவட்டமும் எங்களுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு அளித்து வருகிறது. இந்த திட்டங்கள் எல்லாமே மாநில அரசின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. மேலும்



அவை ரோட்டரி மற்றும் யூனியன் பிரதேசத்தின் கூட்டுத் திட்டங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. முதல் திட்டம் வடக்கு காஷ்மீர் மாவட்டங்களான குப்வாரா, பாரமுல்லா, சோபோர் மற்றும் கந்தர்பாலில் நடைபெற்றது.

கோவிட் தொற்றுக்காலத்துக்குப் பிறகு இந்த முகாம் நடத்தப்பட்டது. எனவே ஏராளமான நோயாளிகள் பல்வேறு அறுவைச்சிகிச்சைகளுக்காக காத்திருந்தனர். சோபோரில் நடைபெற்ற முகாம் தொடக்க விழாவில் பேசிய யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா, ரோட்டரி, இதுபோன்ற முகாம்களை காஷ்மீர் தெற்கு பகுதிகளிலும் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதன்பிறகு ஓராண்டு கழித்து நாங்கள் காஷ்மீரில் ஆனந்தநாக், புல்வாமா, சோபியான் மற்றும் குல்காமில் அறுவைச்சிகிச்சை முகாம்களை வெற்றிகரமாக நடத்தினோம். இதையடுத்து ஜம்முவில் பூஞ்ச் மற்றும் ரஜௌரி மாவட்டங்களிலும் முகாம் நடத்த அறிவுறுத்தினர். அங்கு 2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் திட்டம் செயல்படுத்தப்பட்டது. பாகிஸ்தான் எல்லையை ஒட்டி அமைந்திருந்த அந்த மாவட்டங்களில் அப்போது கடும் குளிர்நிலவியது. ஆனாலும் மருத்துவ அறுவைச்சிகிச்சை நிபுணர்கள் அதைப் பொருட்படுத்தாமல் முகாமை வெற்றிகரமாக நடத்தி முடித்தனர்.

2022-ம் ஆண்டு முதல் நடைபெற்ற நான்கு திட்டங்கலிலும் ரோட்டரி மற்றும் யூனியன் பிரதேச மருத்துவர்கள் இணைந்து பல்வேறு பிரிவுகளில் சுமார் 10,000 அறுவைச்சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்து முடித்தனர். தற்போதைய திட்டத்துக்கு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே திட்டங்கள்போடப்பட்டது. PDGs டாக்டர் கிரிஷ் குணே, துஷ்யந்த் சௌதுரி, நான் மற்றும் ரோட்டேரியன் ஆதீப் மேத்தா ஆகியோர் இணைந்து அரசு மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் ஜர்கார் ஹமீத் மற்றும் மூத்த அதிகாரிகளிடம் பலமுறை மெய்நிகர் சந்திப்புகளை நடத்தினோம். சௌதுரி மற்றும் ஆதீப் இருவரும் தோடா மற்றும் கிஷ்த்வாருக்கு நேரில் சென்று முகாமுக்கான  வசதிகளை ஆய்வு செய்ததுடன், மாவட்ட ஆட்சியர் மற்றும் மருத்துவக் கண்காணிப்பு அதிகாரி மற்றும் வளர்ச்சித் திட்ட அதிகாரிகளை நேரில் சந்தித்து பேசினர்.

அரசு எப்போதும் எங்களுக்கு ஆதரவாக இருந்தது. எங்கள் வேண்டுகோளின் பேரில், அதிக செயல்முறை உதவியாளர்களை கூடுதலாக நியமித்து, மைக்ரோஸ்கோப், லேப்ராஸ்கோபி உள்ளிட்ட மருத்துவக் கருவிகளையும் முகாம் நடைபெறும் இடத்துக்கு கொண்டு செல்ல உதவினார்கள். மேலும்



**இடமிருந்து:** *திட்டத் தலைவர் PDG டாக்டர் ராஜீவ் பிரதான், ஜம்மு காஷ்மீர் லெப்டினன்ட் கவர்னர் மனோஜ் சின்ஹா RID 3070 PDG டாக்டர் துஷ்யந்த் சவுத்ரி மற்றும் லெப்டினன்ட் கவர்னரின் முதன்மைச் செயலாளர் மந்தீப் பண்டாரி.*

இதர மருத்துவமனைகளிலிருந்து கூடுதல் மருத்துவர்கள், உதவி யாளர்கள், செவிலியர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

எங்கள் தரப்பில் நானும் கிரிஷும் மருத்துவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோரை இரண்டு மாவட்டங்களிலிருந்து மட்டுமல்ல, முகாம் ஏற்பாடு செய்த மாவட்டத்திலிருந்தும் உருவாக்கினோம். PDG-யும் கோவையைச் சேர்ந்த முடநீக்கியல் மருத்துவ நிபுணருமான டாக்டர் எஸ்.சுந்தரராஜன் கடந்த திட்டங் களிலிருந்தே எங்களுடன் சேர்ந்து பணியாற்றி வருகிறார். இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும் எங்கள் மருத்துவத் திட்டங்களில் சேர்ந்து பணியாற்றிய பிரபல காது, மூக்கு, தொண்டை நிபுணர் டாக்டர் தீபர் லுவாவும் எங்களுடன் இணைந்து கொண்டார். PDG டாக்டர் உபிந்தர் சிங் (RID 3070) சுறுசுறுப்பாக எங்களுடன் செயல்பட்டார். PDGs ரவீந்திர சாலுங்கே மற்றும் கிஷோர் பவாடே (RID 3132) இருவரும் தன்னார்வலராக எங்களுடன் இணைந்துகொண்டனர். PRID மகேஷ் கோட்பாகி குழுவில் இடம்பெற்றிருந்தார்.



பொது அறுவைச்சிகிச்சை நிபுணர்கள், மகப்பேறு மருத்துவர்கள், கண் மருத்துவர்கள், காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள், பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை நிபுணர்கள், சிறுநீரகவியல், முடநீக்கியல் மருத்துவ நிபுணர்கள், மயக்கவியல் நிபுணர்கள் மற்றும் RID 3131 மற்றும் 3070-க்கு உட்பட்ட DRRs என 41 ரோட்டேரியன்கள் அடங்கிய குழுவினர் தங்கள் நேரத்தையும், திறமையையும் மனிதகுலத்துக்கு சேவைக்கு அர்ப்பணிக்க தயாராக இருந்தனர்.

பதேர்வா, தோடா மற்றும் கிஷ்த்வார் பகுதிகள் பற்றிய தகவல்களைத் தேடும்போது, அந்த இடங்கள் அனைத்தும் 5,400 முதல் 5,600 அடி உயரத்தில் மலைப்பாங்கான நிலப்பரப்பில் இருப்பதை நான் உணர்ந்தேன். பதேர்வா குட்டி காஷ்மீர் என்றும் அழைக்கப்படுகிறது. அடர்ந்த காடுகள், மலைகள், பள்ளத்தாக்குகள், பனிபடர்ந்த மலைப்பகுதிகள் மற்றும் அங்கு ஓடும் செனாப் நதி ஆகியவை வேலை செய்வதற்கு சரியான இடமாக இருந்ததில் ஆச்சரியம் இல்லை.


ஜம்முவிலிருந்து பதேர்வா மற்றும் கிஷ்த்வார் செல்லும் சாலை மலைப்பகுதியாகவும் ஏற்ற இறக்கமாகவும் இருந்தது. அது முடிவில்லாததாகவும் இருந்தது. ஆனாலும், மழைபெய்யத் தொடங்கும் வரை வானிலை இதமாக இருந்தது. ஆலங்கட்டி மழையால் வெப்பநிலை 3–4 டிகிரி செல்சியசாக குறைந்து இருந்தது.

பணிச்சுமை அதிகமாக இருந்தது. காஷ்மீரில் பித்தப்பைக் கல் பாதிக்கப்பட்ட நோயாளிகள்தான் அதிகம் இருந்தனர். எனவே எங்கள் மருத்துவ நிபுணர்கள் பதேர்வா மற்றும் கிஷ்த்வாரில் ஒரு நாளைக்கு 8 முதல் 10 லாப்ராஸ்கோபிக் அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. டாக்டர்கள் ஜல்பாஜி மோர் மற்றும் கிரிஷ் இருவரும் ஒரே நாளில் பல பித்தப்பை கல் அறுவைசிகிச்சையை செய்யவேண்டியிருந்தது.

இதேபோல கர்ப்பபை அகற்றும் அறுவைச்சிகிச்சைகளின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. டாக்டர் சகாரே, டாக்டர் மணிஷா ஜக்தாப் மற்றும் டாக்டர் ஷிவானி அகர்வால் ஆகியோர் மிகவும் பரபரப்பாக இருந்தனர். எதிர்பார்த்தபடியே இரு இடங்களிலும் கண்புரை அறுவைச்சிகிச்சைக்காக ஒரு நாளைக்கு 30 முதல் 40 நோயாளிகள் வரிசையாக காத்திருந்தனர். எங்கள் மயக்கவியல் மருத்துவ நிபுணர்கள் மஞ்சுஷா கண்டகாலே மற்றும் நேஹா பன்ஸி இருவரும் மயக்க மருந்து கொடுப்பதற்கான உபகரணங்கள் பற்றாக்குறை இருந்ததால் பித்தப்பை கல் நோயாளிகளுக்கு முதுகு எலும்பில் போடும் மயக்க மருந்தை செலுத்தினர்.

தோடாவில் அரசு மருத்துவக் கல்லூரி இருப்பதால், பிளாஸ்டிக் அறுவைச்சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை, சிறுநீரக பிரச்னை மற்றும் சிக்கலான எலும்பியல் அறுவைச்சிக்சைகள் அங்கு செய்யப்பட்டன. லேப்ராஸ்கோபிக் மற்றும் கர்ப்பபை அறுவைசிச்சைகளை எப்படி மேற்கொள்வது என்பதை விளக்க டாக்டர் அனில் சகாரே கிஷ்த்வாரிலிருந்து தோடாவுக்கு பயணிக்க வேண்டியிருந்தது. கிஷ்த்வாரில் PDG சுபோத் ஜோஷி மருத்துவக் குழுவினரை கவனித்துக் கொண்டார். பதேர்வாவில் அனைத்து குழுக்களையும் PDG சௌதுரி வழிநடத்தினார்.

சிறந்த அறுவைச்சிகிச்சை நிபுணரான PDG குணே, எப்போதும் நோயாளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டு அறுவைச்சிகிச்சை அறையை விட்டு வெளியேறும் கடைசி நபராக இருந்தார். கண் நோய் மருத்துவர்களான ராகுல் ஃபேஸ், மனோஜ் பையாகுடே, அங்குர் கோயல், ராஜேஷ் பர்வார், ஆனந்த் கட்கே மற்றும் ரஜ்னீத் தோடா ஆகியோர் மிகவும் பரபரப்பாக வேலையில் ஈடுபட்டிருந்தனர். அவர்களை டாக்டர் உமா பிரதான் ஒருங்கிணைத்தார். உதாம்பூர் கண் மருத்துவமனையின் தலைவர் ரோட்டேரியன் டி.என்.சர்மா, காஷ்மீரின் தொலைதூரப் பகுதிகளுக்கு



RID 3131 PDG டாக்டர் கிரிஷ் குணே
மருத்துவ முகாமில் அறுவை சிகிச்சை செய்கிறார்.

தமது மருத்துவக் குழுவினரை அழைத்துவர தயாராக இருக்கிறார்.

மருத்துவமனை ஊழியர்கள், செவிலியர்கள், நோயாளிகள் மற்றும் மருத்துவர்கள் நோயாளிகளுக்கு உதவுவதற்காக பல மைல்கள் நடந்து சென்றனர். மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் முகமது அஷ்ராப் மற்றும் அவரது சகாக்கள் அங்கேயே தங்கியிருந்து முழு ஒத்துழைப்பு அளித்தனர். நோயாளிகள் வெகுதூரத்திலிருந்து மலைகள், பள்ளத்தாக்குப் பகுதிகளைத்தாண்டி வரவேண்டியிருந்தது. ரோட்டரி மருத்துவக் குழு இல்லாவிட்டால் அவர்களால் முறையான மருத்துவ வசதியை பெற்றிருக்க முடியாது.

மருத்துவச் சிகிச்சை திட்ட முகாமின் கடைசிநாள் அதிர்ச்சி தரும் வகையில் வித்தியாசமாக இருந்தது. பஹல்காமில் ஏப்ரல் 22 இல் நடந்த பயங்கரவாத சம்பவம் பற்றி எங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அறுவைச்சிகிச்சைகளை திட்டமிட்டபடி மருத்துவ நிபுணர்கள் செய்துமுடித்த போதிலும் தங்கியிருக்கும் இடத்தைவிட்டு எங்கும் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டனர். கிஷ்த்வார் மற்றும் பதேர்வா விருந்தினர் மாளிகையின் கதவுகள் மாலையில் மூடப்பட்டன. கிஷ்த்வாரிலிருந்து பஹல்காமுக்கு சாலை வழியாகச் செல்ல வேண்டுமானால் 188 கி.மீ. பயணிக்க வேண்டும். ஆனால், மலைப்பகுதிகளின் குறுக்கே சென்றால் தூரம் அதிகமில்லை. உண்மையில் சொல்லப்போனால், கிஷ்த்வாரில் வனப்பகுதிகளில் பயங்கரவாதிகள் மறைந்திருக்கலாம் என்பதால் அதிகாரிகள் அவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அடுத்தநாள் காலை உணவுக்குப் பிறகு ரோட்டரி குழுவினர் அரசு வாகனங்களில் ஜம்முவை சென்றடைய வேண்டும். மாலையில், கிஷ்த்வார் குழுவினர் அதிகாலை 5 மணிக்கே தோடா மாவட்டத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்று சொன்னார்கள். பதேர்வாவில் இருந்த மருத்துவக் குழுவினர் 6.30-க்கு வெளியேறுமாறு கோரப்பட்டனர். கிஷ்த்வார் பகுதி அதிகாலை 4 மணிக்கே சுற்றிவளைக்கப்பட்டது. ஆனால், அதிகாரிகள் ரோட்டரி குழுவினர் வெளியேற அனுமதித்தனர். பதேர்வாவிலிருந்து நான் பயணித்த வாகனம், தோடா அருகே பெட்ரோல் நிரப்ப வேண்டும். ஆனால், நாங்கள் செனாப் நதியைக் கடந்தபோது எங்கள் வாகனம் தடுத்து நிறுத்தப்பட்டது. தோடா போக்குவரத்துக்கு மூடப் பட்டதாக தெரிவித்தனர். எங்கள் டிரைவர் பாதுகாப்பு ஊழியர்களை சமாதானப்படுத்தி தோடா நகருக்கு வெளியே உள்ள பெட்ரோல் நிலையத்தில் பெட்ரோல் நிரப்பிக் கொள்வதற்கு அனுமதி கேட்டார். ஜம்மு செல்லும் சாலையில் உதாம்பூர் வரை போக்குவரத்து குறைவாகவே இருந்தது. அனைத்து கடைகள், வியாபார நிறுவனங்கள், உணவகங்கள் மூடப்பட்டிருந்தன. நல்லவேளையாக நாங்கள் குறித்த நேரத்தில் ஜம்முவை சென்றடைந்தோம். இரவு முழுவதும் பதட்டமாக இருந்தாலும் ஜம்முவை அடைந்த பிறகுதான் எங்களுக்கு நிம்மதி ஏற்பட்டது.

எங்களின் அறுவைச்சிகிச்சை திட்டங்கள் சிறியவையாக இருக்கலாம். ஆனால், பின்தங்கிய பகுதிகளில் ரோட்டரி சேவையை முன்னெடுத்துச் செல்வதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகளாகும். தேசிய ஒருமைப்பாட்டுக்கும், மற்றவர்கள் செல்லத்துணியாத இடங்களுக்கு ரோட்டரி சென்று சேவை செய்துள்ளது என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்கு இது உதவும். சேவை செய்வதற்கு பொது மற்றும் தனியார் கூட்டாண்மை முக்கியம் என்பதையும் இது வலியுறுத்துகிறது.

இந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் கதுவா மாவட்டத்தில் இதேபோன்ற அறுவைச்சிகிச்சை முகாமை நடத்தவும் நாங்கள் தயாராகி வருகிறோம்!

(கட்டுரையாளர் RID 3132-ன் முன்னாள் மாவட்ட ஆளுநர் மற்றும் திட்டத்தின் தலைவர்.)

Rotary PEOPLE OF ACTION

# புதுப்பொலிவுடன் பள்ளியை மாற்றியமைத்த ரோட்டரி

**கிரண் ஜெஹரா**

சத்தீஸ்கர் மாநிலம், ராய்ப்பூரிலிருந்து சுமார் 231 கி.மீ. தொலைவில் உள்ள தாரைமால் என்னும் கிராமத்தின் இடிந்துபோன சுவர்களுடன் மங்கிப்போய் இருந்த தன்வர்பாரா அரசு ஆரம்பப் பள்ளி, இப்போது ரோட்டரியின் அன்பு முயற்சியால் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது. RID 3261-க்கு உட்பட்ட ராய்கர் ராயல் ரோட்டரி சங்கம் மேற்கொண்ட பெரு முயற்சிதான் இதற்கு முக்கிய காரணம்.

சங்கத்தின் தலைவர் ஆஷிஷ் மஹாமியா கூறுகையில், “பள்ளியின் முதல்வர் சில்வியா டிக்கா என்னிடம் அலைபேசியில் தொடர்புகொண்டு, பள்ளியின் மோசமான நிலைமையை விவரித்ததுடன் அதை சீர்படுத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார். பள்ளிக்குச் சென்று நேரில் பார்வையிட்டபோது உடனடியாகச் செயல்பட வேண்டும் என்பதை நாங்கள் உணர்ந்து கொண்டோம்” என்றார். அடுத்த சில நாட்களில் திட்டத்தின் தலைவர் ராஜீவ் குப்தா தலைமையின குழுவினர் மற்றும் செயலாளர் அங்கித் அகர்வால் தேவையான நிதி ஆதாரங்களையும் தன்னார்வலர்களையும் திரட்டினர்.

பள்ளிக்கு புதுப்பொலிவு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடங்கின. சுவர்களில் வர்ணம்




*RC ராய்கர் ராயல் பரிசளித்த புதிய இருக்கைகளில் அமர்ந்திருக்கும் மாணவர்கள்.*




*சங்கத்தலைவர் ஆஷிஷ் மஹாமியா (இடமிருந்து 8வது) மற்றும் செயலாளர் அங்கித் அகர்வால் (வலது) பள்ளியில் சங்க உறுப்பினர்களுடன்.*

பூசப்பட்டன. புதிதாக 35 சாய் மேஜைகளும் உட்காருவதற்கான பெஞ்சுகளும் போடப்பட்டன. வகுப்பறையில் மின்விசிறிகள், விளக்குகள் பொருத்தப்பட்டன. குழந்தைகள் விளையாட்டுக் கருவிகளும் நிறுவப்பட்டன. குடிநீர் வசதியும் செய்துதரப்பட்டது. “இப்போது குழந்தைகளுக்கு சுகாதாரமான கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் குழந்தைகள் ஒன்றாக அமர்ந்து சாப்பிட ஒரு கூடாரமும் அமைக்கப்பட்டுள்ளது. பள்ளியில் மேற்கொள்ளப்பட்ட சிறிய மாற்றம் மாணவர்களின் அன்றாட வாழ்க்கையில் சௌகரியத்தை ஏற்படுத்தித் தந்துள்ளது” என்கிறார் மஹாமியா.

அடிப்படை வசதிகள் தரம் உயர்த்தப்படுவது மற்றும் கற்றல் கருவிகள் என மேம்பாட்டுச் செலவுகள் ரூ.5.52 லட்சத்தில் செய்து முடிக்கப்பட்டன.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், பள்ளி வளாகத்தில் விளையாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்க மாணவர்கள் வரிசையில் நின்றிருந்த போது அவர்களது முகத்தில் மகிழ்ச்சியைக் காணமுடிந்தது. விளையாட்டு அவர்களின் மனதில் உற்சாகத்தை ஏற்படுத்தியிருந்தது. பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்துகொடுப்பதுடன் நாங்கள் நிற்கவில்லை. ஒவ்வொரு குழந்தைக்கும் புத்தகப் பை, நோட்டுப் புத்தகம், பேனா மற்றும் பென்சில் பாக்ஸ் வழங்கினோம் என்று பெருமையுடன் அவர் கூறினார்.

தொடக்க நிகழ்வில் என்.ஆர். குழுமத்தின் தொழிலதிபர் சஞ்சய் அகர்வால், சங்கத்தின் சமூக சேவைகளைப் பாராட்டினார். “இதுபோன்ற முயற்சிகள் ஒரு இடத்தை அழகுபடுத்துவதுடன் அல்லாமல் கனவுகளுக்கான அடித்தளத்தையும் அமைக்கின்றன” என்றார். இந்த நிகழ்ச்சியில் பள்ளி ஊழியர்கள் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர். “எங்களுக்கு இது வெறும் பள்ளியை மேம்படுத்துதல் மட்டுமல்ல, குழந்தைகளின் எதிர்காலத்துக்காக புதுப்பிக்கப்பட்ட முதலீடாகவே கருதுகிறோம்” என்று மஹாமியா கூறினார்.■

*சங்கம் நிறுவியுள்ள உபகரணங்களில் குழந்தைகள் விளையாடி மகிழ்கின்றனர்.*



# சென்னையின் தங்க சிட்டுக்குருவிகள்

V முத்துக்குமரன்

மகள், மனைவி தாய் மற்றும் குடும்பத்தலைவியாக இருந்து ஒரு பெண், தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வாழ்க்கையில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்று சென்னை மேயர் பிரியா ராஜன் தெரிவித்தார். "பெண்கள் சமூகத்தில் கொண்டாடப்பட வேண்டும். பல்வேறு சிரமங்கள் இருந்தபோதிலும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான திறன்கள் நம்மிடம் உள்ளன" என்று சென்னையில் RID 3233 சார்பில் பெண்களுக்கான ஒருநாள் திருவிழாவான "கோல்டன் ஸ்பாரோ" நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் அவர் கூறினார். மாவட்ட ஆளுநர் மகாவீர் போத்ரா தலைமையிலான குழு இதற்கு ஏற்பாடு செய்திருந்தது.

பல்வேறு துறைகளில் உயரங்களை எட்டவும், புதிய சாதனைகளை படைக்கவும் பெண்களால் முடியும் என்பதை ஆண்கள் அறிந்திருக்க வேண்டும் என்று பிரியா கூறினார். பெண்கள் கல்வி கற்கக்கூடாது, அவர்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது, பொது நிகழ்வில் பங்கேற்கக்கூடாது என்று கூறிவந்த காலங்கள் சென்றுவிட்டன. இப்போது அவர்கள் வெளியே வரவேண்டிய நேரமாகும். உங்கள் சிறகுகளை விரித்து முடிந்த அளவு உயரே பறந்து புதிய சாதனை படைக்கும் நேரம் வந்து விட்டது என்றும் அவர் கூறினார். பெண்கள் பல்வேறு துறைகளில் தங்களது திறமைகளை காட்டும் தளமாக இந்த நிகழ்வு அமைந்திருந்த தாகக் கூறி மாவட்ட ஆளுநர் போத்ரா மற்றும் அவரது குழுவினருக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

சிறந்த பேச்சாளரும், SIET மகளிர் கல்லூரி தமிழ்த்துறை பேராசியருமான பர்வீன் சுல்தானா பேசுகையில், ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சம உரிமை வேண்டும் என்று கோரி பெண்கள் நடத்திய வரலாற்றுப் போராட்டங்களை நினைவுகூர்ந்தார். தலைமுறையாக நடைபெற்ற போராட்டத்துக்கு நன்றி. இன்று நாம் ஆண்களுக்கு சமமாக எதிலும் போட்டியிடமுடியும். இதற்கு ரோட்டரி உலகமே ஒரு சிறந்த உதாரணமாகும். அதாவது பெண்களும் மாவட்ட ஆளுநர்களாக முடியும். பெண்கள் கூண்டுக்கிளியாக அடைபட்டு கிடக்காமல், சுதந்திரமாக செயல்பட்டு சமூகத்தில் சாதனையாளர்களாக திகழ வேண்டும் என்று யூடியூபில் பிரபலமானவரும், கார்ப்பொரேட் பெண்களும் நிறுவங்களுக்கு பயிற்சி

*ஜெயஸ்ரீ போத்ரா, பேராசிரியர் பர்வீன் சுல்தானாவுக்கு ரோட்டரி மகளிர் சாதனையாளர் விருதை வழங்கினார். (இடமிருந்து) RC கோல்டன் ஸ்பேரோ பட்டய செயலாளர் லலிதா ஸ்ரீராம், நிகழ்வு இணைத் தலைவர் அனீஸ் பேகம், DG மகாவீர் போத்ரா, சென்னை மேயர் பிரியா ராஜன், சங்க பட்டயத் தலைவர் சுஜாதா சீனிவாசன் மற்றும் நிகழ்வு ஆலோசகர் PDG AP கண்ணா.*



அளிப்பவருமான பர்வீன் சுல்தானா அறிவுறுத்தினார். மேயர் பிரியா, பர்வீன் சுல்தானா மற்றும் ஓய்வுபெற்ற IPS அதிகாரி வனிதா ஆகியோருக்கு ரோட்டரி மகளிர் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன. “பெண்கள் அதிக அளவில் சேர்ந்து, எங்கள் சமூக சேவை முயற்சிகளில் பங்கேற்றால் இன்னும் பல சாதனைகளை படைக்க முடியும். RID 3233-ல் உள்ள மொத்த உறுப்பினர்களில் 19 சதவீதம் பெண்களாவர். இந்த திருவிழா எங்களது முதல் முயற்சியாகும். இதில் வேடிக்கை, விளையாட்டு என பொழுதுபோக்கு அம்சங்களும் உள்ளன. இதன் மூலம் அதிக பெண்கள் ஈர்க்கப்படுவார்கள்” என்று போத்ரா கூறினார்.

ரோட்டரி சங்கத்தின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் துணைவியர்களுடன், தாம் நடத்திய காலை உணவு சந்திப்புகளை நினைவு கூர்ந்த அவர், “இந்த 65 சிறப்பு அமர்வுகளில் உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து நாங்கள் விவாதித்தோம்” என்று குறிப்பிட்டார். பல அமர்வு களுக்குப் பிறகு மாவட்ட அளவில் “கலங்கரை விளக்கு” நிகழ்ச்சியை அரங்கேற்றினோம். இதில் 500-க்கும் மேலான முன்னாள் தலைவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவர்களின் வழிகாட்டுதல்களை கேட்டுப்பெற்றோம். PRID A S வெங்கடேஷ் முக்கிய பேச்சாளராக இருந்தார். அடுத்த நிகழ்வு “வளர்பிறை” என்ற தலைப்பில் நடைபெற்றது. இதில் 800 புதிய உறுப்பினர்களுக்கு RIDE முருகானந்தனம் ஊக்கமளிக்கும் பயிற்சி வகுப்புகளை நடத்தினார்.

இந்த புதுமையான தொடர் நிகழ்வில் மூன்றாவதாக 225 உறுப்பினர் களுடன் சென்னை ஐகான்ஸ் ரோட்டரி சங்கம் நிர்மாணிக்கப்பட்டது. இப்போது பெண்களுக்கான திருவிழாவாக “கோல்டன் ஸ்பாரோ” நிகழ்வு நான்காவதாக நடைபெற்றுள்ளது. PDGs ஐசக் நாசர், ஆர்.ஸ்ரீனிவாசன் மற்றும் எனது மனைவி ஜெயஸ்ரீ ஆகியோரின் கூட்டு முயற்சியால் இது சாத்தியமானது. அவர்களுக்கு



**இடமிருந்து:** PDG R *சீனிவாசன், டாக்டர் ஸ்ரீராம் ராம்தாஸ்,* RID 3233 DGND *கணபதி சுரேஷ்,* PDG *ராஜா சீனிவாசன்,* DGE D *தேவேந்திரன்,* DGN *ஸ்ரீராம் துவ்வுரி மற்றும்* PDG ISAK *நாசர்.*

நன்றி என்று விளக்கினார். “பிங்க் ஆட்டோ” திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளில் 100-க்கும் மேலான பெண்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ஆய்வு நடத்தி மகளிர் ஆட்டோ டிரைவர்களுக்கு ரொக்கப் பரிசும், சீருடைகளும் வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு PDG சந்திரமோகனின் வழிகாட்டுதலில் 100 பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதே போல PDG முத்து பழனியப்பன் சிந்தனையில் உருவான Orange Eye Vision திட்டத்தின்கீழ் சென்னையில் உள்ள கண் மருத்துவமனைகளில் 120 பெண்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

## பெண்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்

மாவட்ட ஆளுநர்களின் அதிகாரப்பூர்வ வருகையின்போது பெண் உறுப்பினர் களுக்கு அழைப்பு விடுக்கப்படு வதில்லை அல்லது அவர்களுக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை என்பதை சங்கத் தலைவர்களுடன் நடந்த உரையாடலின் போது போத்ரா அறிந்து கொண்டார். இந்த திருவிழா பெண்களுக்கு உரிய அங்கீகாரத்தையும் பெருமையையும் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது.

இந்த நிகழ்வுக்கு சுஜாதா ஸ்ரீனிவாசன் தலைமை வகித்தார். பட்டயத் தலைவர் சுஜாதா, செயலாளர் லலிதா ஸ்ரீராம் தலைமையில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 155 பேரை உறுப் பினர்களாகக் கொண்ட “கோல்டன் ஸ்பாரோ” ரோட்டரி மகளிர் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளதாக PDG நாசர் அறிவித்தார். அவரே சங்கத்தின் ஆலோசகராக இருப்பார். 2026 ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் உறுப்பினர் எண்ணிக்கையை 19 சதவீத்த்திலிருந்து 30 சதவீதமாக அதிகரிக்க திட்ட மிட்டுள்ளதாக நாசர் தெரிவித்தார்.

நிகழ்ச்சிக்கான ஆலோசகர் PDG ஏ.பி.கன்னா, அதன் இணை தலைவர் ஆனீஸ் பேகம், DGE டி. தேவேந்திரன், DGN ஸ்ரீராம் துவ்வுரி, DGND கணபதி சுரேஷ் மற்றும் சென்னை பிராந்தியத்தைச் சேர்ந்த PDG-க்கள் இதில் பங்கேற்றனர். ஆரோக்கிய அமர்வுகள், வேடிக்கைகள் மற்றும் விளையாட்டுகள் உள்ளிட்ட பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ரோட்டரி மாவட்டம் 3233-க்கு உட்பட் 950 மகளிர் உறுப்பினர்கள், ஆண் உறுப்பினர்களின் மனைவிமார்கள் கலந்துகொண்டனர். 50 ரோட்ராக்டர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர். தென்னிந்தியாவைச் சேர்ந்த 100 பேர் சிறப்பு பிரதிநிதிகளாக கலந்து கொண்டனர்.

புகைப்படங்கள்: முத்துக்குமரன்

ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## பெண்கள் தயாரிப்புகளின் கண்காட்சி

உள்ளூர்ப் பெண் தொழில்முனைவோர்கள் கைவினைப் பொருட்கள், உணவு, சேவைகளில் தங்கள் திறன்களைக் காண்பிப்பதற்கென நான்கு நாள் திருவிழா ஒன்றை நடத்தியது RC சிலிகுரி உமீத், RID 3240. கலை நிகழ்ச்சிகள், இரத்த தான முகாம்களை உள்ளடக்கிய இந்த நிகழ்ச்சிக்கு நாள்தோறும் 1,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வந்தார்கள்.




*திருவிழாவில் பல்வேறு ஸ்டால்கள்.*

## ரோட்டரியின் ஏரிப் போர்

கேரளத்தில் உள்ள ஆலப்புழையில் இருக்கும் வேம்பநாடு ஏரியைத் தூய்மைப்படுத்திக் காப்பதற்காக RID 3211-ன் 15 ரோட்டரி சங்கங்கள் நகராட்சியுடன் இணைந்து நடத்திய பிளாஸ்டிக் இல்லாப் பரப்புரையை மாவட்ட ஆட்சித் தலைவர் அலெக்ஸ் வர்கீஸ் தொடங்கிவைத்தார். சுமார் 220 தன்னார்வலர்கள் 100 படகுகளைப் பயன்படுத்தி 3.6 டன் ஏரிக் குப்பைகளைத் திரட்டி அகற்றினார்கள்.



*தூய்மைப் பணியில் தன்னார்வலர்கள் மற்றும் ரோட்டேரியன்கள்.*

## பார்வை ஆற்றல்

ஃபெரோலைட் ஜாயின்டிங்ஸுடன் இணைந்து, பார்வைக் குறைபாடுள்ள 240 தில்லிப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஜோதி AI ப்ரோ அறிவார்ந்த மூக்குக் கண்ணாடிகளை வழங்கியது RC காசியாபாத் ஸ்மார்ட் சிட்டி, RID 3012. இந்த CSR இந்திய நல்கைத் திட்டத்துக்கு ஃபெரோலைட் ($27,000) மற்றும் இந்தச் சங்கம் ($15,500) பங்களித்தன.



*ரோட்டேரியன்களிடமிருந்து ஸ்மார்ட் கண்ணாடிகளைப் பெறும் பயனாளிகள்.*

## மாரத்தான் ஓட்டம்

பொவாய் ஆண்டு ஓட்டத்தின் 13வது பதிப்பை நடத்தியது RC மும்பை லேக்கர்ஸ், RID 3141. DG சேதன் தேசாய், சங்கத் தலைவர் பல்வி அகர்வால், ஹிராநந்தானி குழுவின் MD நிரஞ்சன் ஹிராநந்தானி, உள்ளூர் MLA திலீப் லாண்டெ தொடங்கிவைத்த இந்த நிகழ்வில் 1,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்றார்கள். 80 வயதுப் பங்கேற்பாளர் உஷா ஜோஷி, தன் 249வது பந்தயத்தை நிறைவு செய்த பார்வைக் குறைபாடுள்ள அமர்ஜீத் சிங், தங்கள் திறனைக் காண்பித்த சக்கர நாற்காலிக் கூடைப் பந்தாட்ட வீரர்கள் மக்களை ஈர்த்தனர்.



*பவாய் ஓட்டம் 2025-ல் பங்கேற்பாளர்கள்.*

ரோட்டரி சங்கங்களை வடிவமைக்கும் முக்கிய

# மதிப்பீடுகள்

ஜனநாயகம், கருத்து வெளிப்பாடு, அடையாளம்

**இந்த மூன்று கூறுகள்**
**நமது உறுதியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன :**

**ஜனநாயகம் :**

ஒவ்வொரு உறுப்பினரின் வாக்களிக்கும் உரிமையை உறுதி செய்து, நிர்வாகத்தில் சம பங்கேற்பை உறுதிப்படுத்துதல்.


**கருத்து வெளிப்பாடு :**

பேசுவதற்கும் கேட்பதற்குமான அடிப்படை உரிமையை பாதுகாத்தல்.

**அடையாளம் :**

நமது பல்வகைமிக்க பண்பாட்டின் மூலம் ஒருமைப்பாட்டை ஊக்குவிப்போம்.

ரோட்டேரியன்களாக,
இந்தக் கொள்கைகளை
நமது சங்க செயல்பாடுகளில்
நடைமுறைப்படுத்தி,
ஒருமைப்பாட்டை ஊக்குவித்து,
நமது சங்கத்தின் வளர்ச்சியை
மேம்படுத்துவோம்.


Rotary

**Rtn. AKS டாக்டர் கே. ஸ்ரீநிவாசன்**
ரோட்டரி திருச்சிராப்பள்ளி &
ஈரோடு சென்ட்ரல், மண்டலம் 5

ADVT.

# ரோட்டரியில் அதிசயங்கள் நிகழ்கின்றன

V முத்துகுமரன்

“ரோட்டரி அறக்கட்டளை என்பதே ரோட்டரியின் ஆன்மா மற்றும் உயிராக உள்ளது; அது தான் நம்மை ஒன்றாக வைத்திருக்கிறது” என்று PRIP K R ரவீந்திரன் சென்னையில் நடைபெற்ற RID 3231 மாவட்ட மாநாடான ராஜ் உத்சவ்வில் உரையாற்றும் போது கூறினார். ரோட்டரி இப்போது கல்வியறிவு, சுகாதாரம் போன்ற வலிமையான தொழிலில் ஈடுபட்டுள்ளதால், அது கனவு காண்பவர்களை செயல்படுத்து பவர்களாக மாற்றுகிறது. வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் மக்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை வாழ உதவுகிறது. இவை அனைத்தும் TRF-ன் வலுவான அடித்தளத்தால் சாத்தியமாகின்றன என விளக்கினார்.

உலகளாவிய ரோட்டரி குடும்பத்தின் வலிமையை பிரதி பலித்து ஒரு தசாப்தத்திற்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தை ரவீந்திரன் நினைவுகூர்ந்தார். மங்கோலியாவில் ஒரு கிறிஸ்தவ தம்பதியரின் ஏழு மாதக் குழந்தைக்கு மின்சார கெட்டிலில் ஏற்பட்ட விபத்தில் உயிருக்கு ஆபத்தான தீக்காயங்கள் ஏற்பட்டன. தலைநகர் உலான்பாதரின் பிரதான மருத்துவமனைக்கு குழந்தையை கொண்டு சென்றனர், அங்கு தீக்காயங்கள் தீவிரமாக இருப்பதைக் கண்டறிந்த மருத்துவர்கள் குழந்தையை ஒரு அமெரிக்க மருத்துவமனைக்கு மாற்றுமாறு அறிவுறுத்தினர். ஆனால் உள்ளூர் விமான நிறுவனங்கள் அந்த குழந்தையை அமெரிக்க மருத்துவமனைக்கு விமானத்தில் கொண்டு செல்லுவதற்கான அந்த தம்பதியரின் கோரிக்கையை நிராகரித்தன.”

வேறு வழியின்றி, கடைசி நம்பிக்கையாக, அவர்கள் ஏறக்குறைய ஒரு வாரம் தங்கள் நோய்வாய்ப்பட்ட குழந்தையைக் காப்பாற்ற கடவுளிடம் மனமுருகி பிரார்த்தனை செய்தனர். “ஒரு நாள், ஒருவர் அவர்கள் கதவைத் தட்டி, சின்சினாட்டியிலுள்ள ஷ்ரைனர்ஸ் மருத்துவமனைக்குச் செல்வதற்கான விமான டிக்கெட்டுகளைக் கொடுத்தார். அது தீக்காயங்கள் உள்ளிட்ட குழந்தைகளுக்கான சிறப்பு மருத்துவ சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற, ஃப்ரீ மெசன் குழுமத்தின் ஒரு பகுதியாகும்.” இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது? அவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, ஹாங்காங், டோக்கியோ, சிகாகோ மற்றும் சின்சினாட்டி ஆகிய இடங்களில் தொலைபேசி அழைப்புகள் ஒலித்தன, மேலும், “அப்போது நான் ரோட்டரி தலைவராக இருந்ததால், சிகாகோவில் உள்ள ஒன் ரோட்டரி மையத்தில் மாலை 5 மணிக்கு நான் அழைப்பை ஏற்றேன், அவசர சிகிச்சை தேவைப்பட்ட மங்கோலியக் குழந்தையைப் பற்றி எனக்கு விளக்கப்பட்டது” என்று அவர் கூறினார்.

RI தலைமையகம் ஹாங்காங் ஆளுநரைத் தொடர்பு கொண்டது, அவர் மங்கோலியாவில் உள்ள ரோட்டேரியர்களைத் தொடர்பு கொண்டு, அவர்களது பிரதமரை அணுகும்படி கூறினார். மங்கோலியப் பிரதமர், நோய்வாய்ப்பட்ட குழந்தையை பெற்றோருடன் உடனடியாக அமெரிக்காவிற்கு விமானத்தில் கொண்டு செல்ல விமான நிறுவனத்திற்கு உத்தரவிட்டார். “நாம் திறந்த மனதுடன் இருக்கும்போதும், கைகள் உதவத் தயாராக இருக்கும் போதும், இறக்கும் தருவாயில் உள்ள



**இடமிருந்து:** PDG A *சம்பத் குமார்*, RIPR PDG S *கோபால்*, RID 3231 DG M *ராஜன்பாபு*, PRIP K R *ரவீந்திரன்*, PDG C R *சந்திர பாப்*, DGND T *சிவக்குமார்*, PDGs J K N *பழனி*, *அபிராமி ராமநாதன்*, *டிஸ்கான் தலைவர்* V *திலீப் குமார் மற்றும்* PDG *நிர்மல் ராகவன்*.



*RIDE M முருகானந்தம் நடிகர் Y Gee மகேந்திராவுக்கு ரோட்டரி வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்கினார். டிஸ்கான் செயலாளர் P விநாயகம் (**இடமிருந்து 3வது**), திரைப்பட இயக்குனர் சுரேஷ் கிருஷ்ணா, கலை இயக்குனர் தோட்டா தரணி, நடிகை லட்சுமி, DGE V சுரேஷ் மற்றும் டிஸ்கான் தலைவர் திலீப்குமார் ஆகியோரும் காணப்படுகின்றனர்.*

ஒரு குழந்தையின் வாழ்க்கையை மாற்றுவதற்கு ஒரு தொலைபேசி அழைப்பே போதும்” என்றார் ரவீந்திரன்.

### சேவையில் சிறந்தது

ரோட்டரி உலகின் சிறந்த சேவை அமைப்பாகும், “ஏனெனில் தரமதிப் பீடுகள் பொய் சொல்வதில்லை, அற்புதங்கள் போலியானவை அல்ல, மற்றும் மாயாஜாலம் என்பது ஒரு கானல் நீர் அல்ல. நமது பெருமை ஒரு விபத்தோ அல்லது தற்செயல் நிகழ்வோ அல்ல, நாம் பல வாழ்க்கையை மாற்றி யுள்ளோம். உலகில் அற்புதங்கள் நிகழத்தான் செய்கின்றன, ஏனெனில் ரோட்டேரியர்கள் அவற்றை நிகழ்த்திட இருக்கிறார்கள். ரோட்டரி ஒவ்வொரு அற்புதமாக உலகை மாற்றிக் கொண்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் இதுவரை செய்து வருவதையே தொடர்ந்து செய்யுங்கள்” என்று அவர் பிரதிநிதிகளை வலியுறுத்தினார்.

RID 3000-த்தின் RIPR சுந்தர்ராஜன் கோபால் கூறுகையில், ரோட்டரியில் தாக்கத்தை ஏற்படுத்தும் திட்டங்களைச் செய்வது, புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது மற்றும் TRF-க்கு பங்களிப்பது ஆகியவற்றால் தான் ரோட்டேரியர்கள் ரோட்டரியில் மாயாஜாலத்தை உருவாக்க முடியும் என்றார்.

RIDE M முருகானந்தம், மோதல் களும் சச்சரவுகளும் நிறைந்த உலகில், “நான்கு தலைமுறைகளைக் கடந்து வந்த ஒரே சேவை அமைப்பு ரோட்டரிதான். உலகெங்கிலும் உள்ள 45,000 சங்கங்களில் ஒவ்வொரு ஆண்டும் தலைமைப் பண்பின் சீரான மாற்றத்தை இங்கு நாம் காண்கிறோம். மனிதர்களாக இருப்பதிலிருந்து, உலகிற்கு அனைத்தையும் வழங்குவதன் மூலம் மனிதநேயத்துடன் இருத்தல் வரை, “நாம் கடவுளின் கரங்களாக மாறுகிறோம்” என்றார்.

போலியோவுக்கு எதிரான போராட்டத்தில் RI இதுவரை 10 பில்லியன் டாலர்களை செல விட்டுள்ளது என்றும், 1979 முதல் உலகளாவிய பிரச்சாரத்தின் மூலம் உலகின் மூன்று பில்லியன் குழந்தை களுக்கு நோய்த்தடுப்பு செய்துள்ளது என்றும் அவர் கூறினார்.

ரோட்டேரியர்களின் கருணை மற்றும் தாராள மனப்பான்மையை முதலீடு செய்து, பின்தங்கிய மக்களின் வாழ்க்கையை மாற்றுவதன் மூலம் அவர்களுக்கு மகிழ்ச்சியை ரோட்டரி கொண்டுவருகிறது என்றும் அவர் தெரிவித்தார். நான்கு திரைப்பட பிரபலங்களுக்கு - நாடக ஆசிரியரும் நடிகருமான Y GEE மகேந்திரன், மூத்த நடிகை லட்சுமி, கலை இயக்குநர் தோட்டாதரணி மற்றும் திரைப்பட இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா - ரோட்டரி வாழ்நாள் சாதனையாளர் விருதுகளையும் அவர் வழங்கினார்.

RID 3231-ன் முதன்மை ஆலோசகர், PDG அபிராமி ராமநாதன் கூறுகையில், தனக்கு 20,000 ரோட்டரி நண்பர்கள் இருப்பதாகவும், அவர்கள் “எப்போதும் எனக்கு உதவத் தயாராக இருக்கிறார்கள், அவர்களை எனது உறவினர்களை விட நெருக்கமாக நான் கருதுகிறேன். சாதி, மதம், தேசியம் மற்றும் பிற வேறுபாடுகளைக் கடந்து மனிதகுலத்தை ஒன்றிணைக்கும் உலகின் ஒரே NGO ரோட்டரி தான்” என்றார். ஆனால் சங்கங்கள் தங்கள் திட்டங்கள் மற்றும் சேவைப் பணிகளைத் தொடர்ச்சியான மக்கள் தொடர்பு பிரச்சாரங்கள் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டவேண்டும் என்றார். “மேலும் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில், அவர்களின் பின்னணியைச் சரிபார்க்காமல் எல்லோரையும் உங்கள் சங்கங்களில் சேர்க்காதீர்கள், ஏனெனில் அவர்கள் ரோட்டரியை நாசம் செய்துவிடுவார்கள்” என்றும் எச்சரித்தார்.

DG M ராஜன்பாபு பேசுகையில், சேவையும் நல்லுறவும் சமூகங்களுக் கான புதுமையான திட்டங்கள் மூலம் உலகத்தை மேம்படுத்த வேண்டும் என்றார். “இந்த மாவட்ட மாநாடு ஒவ்வொரு பிரதிநிதியும் ஒரு புதிய திட்ட யோசனையை வீட்டிற்கு எடுத்துச் செல்ல, புதிய நட்பை உருவாக்க, நற்பணி செய்வதற்கான தங்கள் பிணையத்தை விரிவாக்க, அல்லது சில மகிழ்ச்சியான தருணங் களை தங்களுடன் கொண்டு செல்ல உதவினால் அது அதன் நோக்கத்தை அடைந்திருக்கும்” என்றார். V திலீப் குமார் மாநாட்டின் தலைவராக இருந்தார்.

புகைப்படங்கள்: முத்துகுமரன்

Rotary PEOPLE OF ACTION

# குடிசைப் பகுதியை வாழ்விடமாக மாற்றிய நெய்வேலி ரோட்டேரியன்கள்

ஜெய்ஸ்ரீ




நெய்வேலியில் உள்ள அய்யனார் தெருவில் RC நெய்வேலி லிக்னைட் சிட்டியால் நிறுவப்பட்ட சூரிய சக்தி தெரு விளக்கு.

தமிழ்நாட்டின் நெய்வேலியில், அய்யனார் தெரு ஒரு காலத்தில் விளக்கு வெளிச்சம் இல்லாமல் இருள் சூழ்ந்திருந்த அந்த பகுதியில் RID 2981-க்கு உட்பட்ட நெய்வேலி லிக்னைட் சிட்டி ரோட்டரி சங்கத்தினர் சூரிய சக்தி மூலம் இயங்கும் தெருவிளக்குகளை நிறுவி அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளனர். மூன்று சந்துகளை உள்ளடக்கிய இந்த குறுகிய தெரு பாழடைந்த 34 குடிசைகளைக் கொண்டுள்ளது. இங்கு பெரும்பாலும் முதியோர்கள் வசிக்கின்றனர். இரண்டு குடும்பங்களில் பள்ளி செல்லும் குழந்தைகள் அருகில் உள்ள அரசுப் பள்ளிக்குச் சென்று வருகின்றனர்.

அய்யனார் தெரு, நெய்வேலியின் புறநகர் பகுதியில் அமைந்துள்ளது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு தேசிய நெடுஞ்சாலையில் வசித்து வந்த மக்கள், சாலை விரிவாக்கப் பணி காரணமாக இப்பகுதிக்கு இடம்பெயர்ந்தனர். அப்போதிலிருந்து மின்சாரம், குடிநீர், சுகாதாரம் அல்லது முறையான சாலை வசதி இல்லாமல் இப்பகுதி புறக் கணிக்கப்பட்டு வந்தது என்று சங்கத்தின் தலைவர் J பால்ராஜ் தெரிவித்தார்.

“அங்கு கழிப்பறை வசதியோ அல்லது குடிநீர் வசதிகளோ இல்லை. குடியிருப்பு வாசிகள் என்.எல்.சி.யிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரையே நம்பியிருந்தனர். இரவு நேரத்தில் இருள் சூழ்ந்திருப்பதால், முதியவர்கள் இருவர் சமீபத்தில் பாம்பு கடித்து இறந்துபோனார்கள்” என்று அவர் மேலும் கூறினார். அடிப்படை வசதிகள் கோரி அரசு நிர்வாகத்துக்கு பலமுறை கோரிக்கைகள் வைத்தும் எந்த பலனும் இல்லை.

இங்குள்ள குடியிருப்புவாசிகளின் துயரத்தை அறிந்த ரோட்டரி சங்கம், இப்பகுதியை மாற்றிய அமைக்க முடிவு செய்தது. முதல் கட்டமாக அந்த தெருவில் ஒவ்வொன்றும் ரூ.15,000 மதிப்புள்ள ஏழு சூரியசக்தி மின்விளக்குகள் நிறுவப்பட்டன. இருள் சூழந்த் இடத்தில் ஒளி கிடைத்ததும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. முதியோர்கள் தற்போது தங்கள் வீட்டுக்கு வெளியே அமர்ந்து அரட்டை அடிக்க முடிந்தது. அதே நேரத்தில் குழந்தைகள் விளக்கொளியில் படிக்கவும் முடிந்தது.




*பகுதியில் குடிநீர் வசதியை PDG A மணி திறந்து வைக்கிறார். சங்கத்தலைவர் J பால்ராஜ் (இடமிருந்து மூன்றாவது) மற்றும் சங்க உறுப்பினர் பாலாஜி குருமூர்த்தி (இடது) ஆகியோரையும் காணலாம்.*

விளக்கொளி திட்டத்தின் தொடக்க நிகழ்வின் போது PDG A மணி, ஒவ்வொரு வீட்டினருக்கும் தனித்தனியாக சூரியசக்தி கருவிகளை வழங்குமாறு பரிந்துரைத்தார். அதைச் செயல்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. “ஒவ்வொரு சூரியசக்தி கருவியும் ரூ.32,000 விலை கொண்டது. இதில் இரண்டு விளக்குகள் மற்றும் ஒரு மின்விசிறியும் அடங்கும். ஒவ்வொரு மாதமும் இரண்டு வீடுகளுக்கு சூரியசக்தியில் இயங்கும் கருவிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இதற்காக அனைத்து குடும்பத்தினருக்கும் டோக்கன்கள் வழங்கப்பட்டுள்ளன” என்று பால்ராஜ் விளக்கினார்.

பின்னர் சங்கம், தண்ணீர் சுத்திகரிப்பு ஆலையை நிறுவி, அதனுடன் 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டியை இணைத்து சமூகத்தின் தண்ணீர்ப் பிரச்னைக்கு தீர்வுகண்டது. என்.எல்.சி.யிலிருந்து வெளியாகும் கழிவுநீர், சுத்திகரிக்கப் பட்டு பாதுகாப்பான குடிநீர் வழங்கப் படுகிறது என்று அவர் கூறினார். மற்றொரு தாக்கத்தை ஏற்படுத்தும் செயலாக பார்வைக் குறைபாடுள்ள முதிய தம்பதிகளுக்கு வசிப்பதற்கு எளிமையான ஒரு தங்குமிடத்தையும் சங்கம் அமைத்துக் கொடுத்தது.

ஆரஞ்சு விஷன் சென்டர் மற்றும் ஜோதி கண் மருத்துவ மனையுடன் இணைந்து சங்கம் சமீபத்தில் கண் பரிசோதனை முகாமை நடத்தியது. அவர்களுக்கு கண்பரிசோதனை நடத்தப்பட்டு கண்ணாடிகள் வழங்கப்பட்டன. மேலும் தேவைப்பட்டவர்களுக்கு கண் அறுவைச்சிகிச்சையும் நடத்தப்பட்டது. இரண்டு குடியிருப்பாளர்களுக்கு கண் விழித்திரை மாற்று அறுவைச் சிகிச்சையும் செய்யப்பட்டது என்று சங்கத்தின் உறுப்பினர் பாலாஜி குருமூர்த்தி கூறினார்.

இது ஆரம்பம்தான். “இந்த புறக் கணிக்கப்பட்ட பகுதிக்கு மின்சாரம், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்த நகராட்சி நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்ற நாங்கள் திட்டமிட்டுள்ளோம்” என்றும் பால்ராஜ் கூறினார்.■

# தூய்மைப் பணியாளர்களுக்கு விளையாட்டு போட்டி

ரோட்டரி செய்திக்குழு

உழைப்பாளர் நாளை முன்னிட்டு, ஈரோடு நகராட்சிக் கழக வளாகத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப் பட்டன, இந்நகரைத் தூய்மையாக வைக்கும் அவர்களுடைய தன்னலமற்ற சேவை பாராட்டப்பட்டது. புதிய சங்கமான RC ஈரோடு சக்ராஸ், RID 3203 தன் முதல் திட்டமாக இந்த நிகழ்வை நடத்தியது.

சுமார் 500 பாதுகாப்புப் பணி யாளர்கள் பல விளையாட்டுகள், மகிழ்ச்சி நிகழ்வுகளில் பங்கேற்றார்கள். அவர்களுக்கு ரோட்டரித் தொப்பிகள் வழங்கப்பட்டன. "அது மகிழ்ச்சியும் சிரிப்பும் நிறைந்த இனிய மாலை. அவர்களுடைய சிறந்த பணிக்காக அனைவரையும் எங்கள் சங்கம் பாராட்டியது" என்றார் DG S சுரேஷ் பாபு. ஈரோடு நகரத் தலைவர் S நாகரத்தினம், நகராட்சி ஆணையர் H S ஸ்ரீகாந்த், PDG E K சகாதேவன், பிற ரோட்டரியன்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றார்கள்.

இந்த மாவட்டத்தின் முன்னுரிமைத் திட்டம், பழங்குடியினர் நலன்.





**மேலே:** *மே தினத்தை முன்னிட்டு ஈரோட்டில் துப்புரவுத் தொழிலாளர் களுக்கான விளையாட்டுப் போட்டி மற்றும் பாராட்டு நிகழ்வில் RID 3203 DG S சுரேஷ் பாபு, ஈரோட்டில் துப்புரவுத் தொழிலாளர்களுடன் கலந்துரையாடுகிறார்.* **(வலது)** *தமிழ்நாட்டின் ஈரோட்டின் சத்தியமங்கலம் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் இருளர் குடும்பத்திற்கு மீண்டும் கட்டப்பட்ட வீடுகளை ஒப்படைக்கும் போது DG பாபு அவர்களுக்கு புதிய ஆடைகளை வழங்குகிறார்.*












ரூ.10 லட்சம் செலவில் RC சத்தி-யால் மாற்றிக் கட்டப்பட்ட 12 வீடுகளை இருளர் குடும்பங்களுக்கு DG பாபு வழங்கினார். இந்தச் சங்கம் தன் தலைவர் அமுதா, RID 3203-ன் பழங்குடியினர் நலத் துணைத்தலைவர் கந்தவேல் தலைமையில் இந்த நம்பிக்கைக் கூரைத் திட்டத்தைச் செயல்படுத்தியது.

நீலகிரியைச் சேர்ந்த பாபு நீலகிரிக் குக்கிராமங்களில் பல நூற்றாண்டுகளாக வாழும் தோடர்கள், குரும்பர்கள், இருளர்கள், பனியர்கள், காட்டு நாயகர்கள் போன்ற பழங்குடியினருக்கு ஆற்றல் அளிக்க விரும்பினார். RC கோத்தகிரியைச் சேர்ந்த, பழங்குடியினர் நலத்துக்கான மாவட்டத் தலைவர் A K தேவராஜ் இந்தத் திட்டக் குழுவை நன்கு பாராட்டினார். RC திருப்பூர் தலைவர் K ரவீந்திரனும் அவருடைய குழுவினரும் இரண்டு இருளர் வீடுகளை மாற்றிக் கட்டித்தர முன்வந்தார்கள்.

மாற்றிக் கட்டப்பட்ட வீடுகள் தமிழ் நாட்டின் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம் கடம்பூர் அருகிலுள்ள வைத்தியநாதபுரம் என்ற குக்கிராமத்தில் உள்ள இருளர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.■

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்



**சந்தோஷ் ஸ்ரீதர்**
பல் அறுவை
சிகிச்சை நிபுணர்
RC பய்யனூர், RID 3204

## ரோட்டரி அறிவைப் பரப்புதல்

கேரளத்தின் மலபார் பகுதியில் 84 சங்கங்களில் மொத்தம் 2,865 ரோட்டரியன்களைக் கொண்ட இந்த மாவட்டத்தில் 500 புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது இவருடைய இலக்கு. இதில் 280 பேர் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுவிட்டார்கள். ஸ்ரீதர் நான்கு புதிய சங்கங்களைப் பதிவு செய்துள்ளார், ஜூன் முடிவுக்குள் இன்னும் 15 சங்கங்களைத் தொடங்கவுள்ளார்.

மாவட்ட மருத்துவமனைக்கு ரத்தம் திரட்டும் வேன் ஒன்றைக் (GG: $35,000) கொடையளித்துள்ளது RC காசர்கோட். ஜூன் மாதம் தொடங்கி, உயிர்ப் பரிசுத் திட்டத்தின்கீழ் கோழிக்கோடு MIMS, கண்ணூரில் உள்ள இரண்டு மருத்துவமனைகளில் குறைந்தது 60 குழந்தைகளுக்கு இதய அறுவைச் சிகிச்சைகளைச் செய்யவுள்ளது RC கண்ணூர் சென்ட்ரல். முந்தைய இரண்டு ஆண்டுகளில் RC கண்ணனூர் 45 குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சைகளைச் செய்துள்ளது. கோழிக்கோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட நல்கையின்மூலம் நீர் வடிகட்டி அமைப்பு (ரூ.5 லட்சம்) நிறுவப்பட்டுள்ளது.

மாணவர்கள், பொதுமக்களுக்கு 200க்கும் மேற்பட்ட பல் பரிசோதனை முகாம்கள், வாய் நல விழிப்புணர்வு வகுப்புகளை நடத்தியுள்ளது. 60க்கும் மேற்பட்ட சங்கங்கள் நகர்ப்புறப் பகுதிகளில் மியாவாகிக் காடுகளை உருவாக்கியுள்ளன. இவருடைய TRF வழங்கும் இலக்கு, $250,000. 1999ல் ரோட்டரியில் சேர்ந்த ஸ்ரீதர் “சேவையின் வழியாக அது வழங்கும் தலைமைப்பண்புப் பொறுப்பில்” சிறந்து விளங்குகிறார்.

## ரோட்டரியன்களின் நலனுக்கு முன்னுரிமை

குப்தா, “ரோட்டரியன்களின் நலனைக் கவனித்துக் கொள்வது, அவர்கள் அனைவரையும் நம் திட்டங்களில் சேர்ப்பதிலும் நான் கவனம் செலுத்துகிறேன்” என்கிறார். 146 சங்கங்கள், 3,800க்கும் மேற்பட்ட ரோட்டரியன்கள் உள்ள இந்த மாவட்டத்தில் 250+ புதிய உறுப்பினர்களைச் சேர்த்து, 5 புதிய சங்கங்களைப் பதிவு செய்து 5 முதல் 7.5% நிகர உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சிக்கு இவர் திட்டமிட்டுள்ளார். இதில் நான்கு சங்கங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுவிட்டன.

பல GG திட்டங்கள் ($96,350) நடந்துவருகின்றன, அவற்றில் சில: கருப்பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிரான HPV தடுப்பு மருந்து முகாம்கள்; ஜாதவ்பூர் பல்கலைக்கழகத்தில் கண் பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்கான நூலக அணுகல்; செயற்கைக் கை, கால் வழங்கல்; கிராமப்புற வீடுகளில் கழிப்பறைகள்; தூய பள்ளிகள்; நடமாடும் ரோட்டரி தொலைநோக்கு; ரோட்டரி ஜாய்நகர் கண் மருத்துவமனையில் கண் பராமரிப்பு; 1,500 இலவச ஃபாகோ அறுவைச் சிகிச்சைகள், கருவி நன்கொடை; முன்னாள் குற்றவாளிகளுக்குத் திறன் பயிற்சி.

$23,000 மாவட்ட நல்கை ஒன்றின்கீழ் ஏழை களுக்குத் தையல் இயந்திரங்கள், மிதிக்கும் ரிக்ஷாக்கள், வேன்கள் வழங்கப்பட்டுள்ளன. எளிதான பள்ளித் திட்டத்தின்கீழ் நூற்றுக்கணக்கான குழந்தைகள், பெரியவர்களுக்கு ஆங்கிலம், கணக்கு கற்றுத்தரப்படுகிறது. திருநபர் சமூகத்தினருக்கென இரண்டு புதிய RCCகள் தொடங்கப் பட்டுள்ளன. TRF வழங்கலுக்கான இலக்கு $550,000 என்றபோதும், “எங்கள் மாவட்டம் முதன்முறையாக $1 மில்லியனைக் கடக்கும் என்று நம்புகிறேன்”.

1992ல் ரோட்டரியில் இணைந்த குப்தா விரைவில் AKS தலைவர் வட்டத்தின் உறுப்பினராவார்.



**கிருஷ்ணேந்து குப்தா**
மகப்பேறு மருத்துவர்
RC கல்கத்தா விக்டோரியா
RID 3291

# ஹூப்ளியை சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் சலுகை கட்டணத்தில் டயாலிசிஸ் சிகிச்சை

ஜெய்ஸ்ரீ

ஹூப்ளியைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு போராடிவரும் மக்களுக்கு ஒவ்வொரு முறையும் டயாலிசிஸ் சிகிச்சை செய்துகொள்வது ஒரு சவாலாகவே இருந்தது. அவர்கள் நோயை எதிர்த்து மட்டுமல்ல, தொலைவு மற்றும் கட்டணத்தை எதிர்த்தும் போராட வேண்டியிருந்தது. அருகில் உள்ள டயாலிசிஸ் சிகிச்சை மையமே வெகு தொலைவில் இருந்தது. மேலும் போக்குவரத்து வசதியையும் நம்பமுடியவில்லை மற்றும் சிகிச்சை கட்டணமும் அதிகமாக இருந்தது. "இன்றும்கூட அந்தப் பகுதியில் 4 அல்லது 5 டயாலிசிஸ் சிகிச்சை மையங்களே உள்ளன. ஒருமுறை சிகிச்சை செய்துகொள்ள வேண்டுமானால் ரூ.2,500 கட்டணமாக செலுத்த வேண்டும். உள்ளூர் விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் தினக்கூலி தொழிலாளர்களால் இந்த அளவு கட்டணம் கொடுக்க முடியாது. இதனால், சிறுநீரக நோயாளிகள் பலர் சிகிச்சை செய்து கொள்வதை தவிர்க்கிறார்கள் அல்லது ஒட்டு மொத்தமாக நிறுத்திவிடுகிறார்கள்" என்கிறார் RC ஹூப்ளி சௌத் (RID 3170) முன்னாள் தலைவர் பினோய் மோமயா. ஹூப்ளியில் உள்ள ஒரு பல்நோக்கு மருத்துவமனையில் நோயாளிகளிடம் நம்பிக்கை ஏற்படுத்தும் நோக்கில் தொலைநோக்குப் பார்வையுடன் ரோட்டரி ஹூப்ளி சௌத் - பான்ஜி கிம்ஜி லைஃப்லைன் டயாலிசிஸ் மையம் ஏற்பட முக்கிய காரணமாக இருந்தார்.



*டயாலிசிஸ் மையத்தில் அனில் குமார் ஜெயின் (இடது) மற்றும் மனோஜ் நாகன்சுரே (வலது) ஆகியோருடன் முன்னாள் சங்கத்தலைவர் பினோய் மோமயா (நடுவில்)*

2019-ம் ஆண்டு சங்கம் TRF இடமிருந்து உலகளாவிய மானிய உதவி கேட்டு விண்ணப்பித்த போது இந்த யோசனை வேரூன்றியது. துரதிருஷ்டவசமாக, கோவிட் தொற்றுக்காலம் குறுக்கிட்டதால் நிதி கிடைப்பது சீர்குலைந்தது. இறுதியில் இரண்டு ஆண்டுகள் பிறகு 2021-ல் பிரேசில் நாட்டில் உள்ள குவெடாஸ் டீ இகாகு ரோட்டரி சங்கத்தின் கூட்டு முயற்சியில் டயாலிசிஸ் சிகிச்சை மையம் ஏற்படுத்தப்பட்டது. மொத்த திட்டச் செலவு ரூ.50 லட்சம். இதில் ஹூப்ளி சௌத் ரோட்டரி சங்கத்தின் பங்களிப்பு ரூ.25 லட்சம். இந்த சங்கத்தில் 40 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் நிதி திரட்டுவதில் ஆர்வம் காட்டியதால் இரண்டு நாட்களில் தேவையான நிதி திரட்டப்பட்டது என்று மொமயா கூறினார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த டயாலிசிஸ் சிகிச்சை மையம் 10,000 தடவைகளுக்கு மேலான சிகிச்சைகளைப் பூர்த்தி செய்துள்ளது. அதாவது 300 நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறது. ஆனால், இந்த எண்கள் சிகிச்சையை மட்டும் குறிக்கவில்லை, அவர்களின் வாழ்க்கை காப்பாற்றப்படுகிறது, அவர்களின் குடும்பத்தினரிடம் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் கூறினார்.

ஹூப்ளியைச் சுற்றியுள்ள 100 சிறிய கிராமங்களில் உள்ள 25 லட்சம் பேருக்கு ரோட்டரி டயாலிசிஸ் மையம் வரப்பிரசாதமாக இருந்து வருகிறது. ஒருமுறை டயாலிசிஸ் சிகிச்சை செய்துகொள்ள சலுகை கட்டணமாக ரூ.1000 வசூலிக்கப்படுகிறது. ஐந்து நோயாளிகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் அவ்வப்போது அளிக்கும் நன்கொடைகள் மூலம் தொடர்ச்சியான செலவுகள் சமாளிக்கப்படுகின்றன. எங்களைப் பொருத்தவரை இது ஒரு திட்டம் மட்டுமல்ல, இது நாங்கள் மக்களுக்கு அளிக்கும் வாக்குறுதி என்று புன்னகையுடன் கூறினார் அவர்.

35 ஆண்டுகள் பழமைவாய்ந்த இந்த சங்கத்தின் அடுத்த செயல் திட்டம் உலகளாவிய மானிய உதவியுடன் பிறந்த குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை பிரிவை ஏற்படுத்துவதுதான். ஒவ்வொரு ஆண்டும் கிராமங்களுக்குச் சென்று 8 முதல் 10 கண்புரை அறுவைச்சிகிச்சைக்கான மருத்துவ முகாமை நடத்தி வருகிறோம். எங்களது முயற்சியால் இதுவரை குறைந்தபட்சம் 600 பேர் பார்வை பெற்றுள்ளனர். இவையும் உறுப்பினர்கள் அளிக்கும் நன்கொடை மூலம் செயல்படுத்தப்படுகின்றன என்று அவர் கூறினார் மோமயா.■

# புனேவில் புற்று நோயாளிகளுக்கு இலவச கதிர்வீச்சு சிகிச்சை

V முத்துகுமரன்

ரோட்டரி மாவட்டம் 3131-க்கு உட்பட்ட, புனே பிரிஸ்டைன் ரோட்டரி சங்கத்தின் ஆதரவுடன் ஒரு ஆராய்ச்சி மையம் மற்றும் தனியார் மருத்துவமனை இடையேயான கூட்டாண்மை மூலம் CSR நிதியை அடிப்படையாகக் கொண்ட ரோட்டரி அறக்கட்டளையின் ரூ.4.2 கோடி மானிய உதவியுடன் புற்றுநோயாளிகளுக்கு இலவசமாகவும் சலுகை கட்டணத்திலும் நவீன தொழில்நுட்பத்துடன் கதிர்வீச்சு சிகிச்சை அளிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. "அதிமுக்கியத்துவம் வாய்ந்த இந்த மருத்துவத் திட்டம் எண்ணற்ற நோயாளிகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் திட்டமாகும்" என்று TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா தெரிவித்தார்.

புனேவில் புறநகர் பகுதியான வாக்ஹோலி என்னுமிடத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை மையத்தில் கதிர்வீச்சு மற்றும் CT ஸ்கேன் சிகிச்சை மையத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார். சூர்யா சஹயாத்ரி மருத்துவமனையில் கடந்த 2022-ம் ஆண்டு அப்போது ரோட்டரி சர்வதேச தலைவராக இருந்த ஜென்னிஃபர் ஜோன்ஸால் சங்கத்தின் ஆதரவால் $860,000 செலவில் முதன்முதலாக கதிர்வீச்சு சிகிச்சை மையம் திறந்துவைக்கப்பட்டது. இப்போது தொடங்கப்பட்டுள்ள மையம் சங்கத்தின் இரண்டாவது மையமாகும். இது புனே சங்கம், ICTRC மற்றும் ஆன்கோ லைஃப் ஹாஸ்பிடல் ஆகியவற்றின் கூட்டுமுயற்சியாகும். இந்த மருத்துவமனையில் ரூ.12 கோடிக்கு அதிநவீன மருத்துவச்சிகிச்சை கருவிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 1.4 மில்லியன் புதிய புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 10 சதவீத வருடாந்திர வளர்ச்சியை கருத்தில் கொண்டால், அடுத்த 5 அல்லது 7 ஆண்டுகளில் வருடத்திற்கு 2 மில்லியன் நோயாளிகள் சிகிச்சை பெறும் சூழ்நிலை ஏற்படும்" என்று அவர் எச்சரித்தார்.

புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் அறுவைசிகிச்சை, கீமோதெரபி மற்றும் கதிர்வீச்சு சிகிச்சைகள் முக்கியமானவை. "அனைத்து நோயாளிகளுக்கும் குறைந்த கட்டணத்தில் தரமான சிகிச்சை அளிப்பதற்கு வகை செய்யும் இந்த நிலையான திட்டத்துக்கு TRF

**(இடமிருந்து):** TRF *அறங்காவலர் பரத் பாண்டியா, திட்ட கன்வீனர் சுதின் ஆப்தே,* RC *புனே பிரிஸ்டைன் தலைவர் ஷில்பா போஸ்கர்,* DG *ஷிதல் ஷா,* ICTRC *இயக்குனர் டாக்டர் அரவிந்த் குல்கர்னி,* Onco-Life *ஹாஸ்பிடல்ஸ் தலைவர் உதய் தேஷ்முக்,* DRFC *ஷைலேஷ் பாலேகர், அனில் கோயல், அனுப் பந்திஷ்ட, டாக்டர் அபிஷேக் புர்கயஸ்தா மற்றும்* PDG-*கள் கிரிஷ் குணே மற்றும் பங்கஜ் ஷா (வலது)*



வழங்கும் பணம் பயன்படுத்தப்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

ரோட்டரி சங்கத்தின் முன் முயற்சியைப் பாராட்டிய மாவட்ட ஆளுநர் ஷீதல் ஷா, இந்த ரோட்டரி ஆண்டில் சங்கம் இதுவரை ரூ.14 கோடி மதிப்பிலான திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஆண்டும் புதிதாக 1.46 மில்லியன் புதிய புற்றுநோயாளிகள் உருவாகிறார்கள். இதனால் குறைந்தது எட்டு லட்சம் பேர் கதிர்வீச்சு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. அவர்களில் பெரும்பாலோனோர் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள். கட்டணம் செலுத்தி புற்றுநோய்க்கு சிகிச்சை பெறமுடியாத நிலையில் அவர்கள் உள்ளனர்.

உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய கதிர்வீச்சு சிகிச்சை பிரிவு அமைக்கப் பட்டது குறித்து பெருமகிழ்ச்சி தெரிவித்த ICTRC-யின் நோயியல் மருத்துவ இயக்குநர் டாக்டர் அரவிந்த் குல்கர்னி கூறுகையில், “இந்த அறக்கட்டளை மருத்துவமனை, 1994-ம் ஆண்டு சர் தேஷ்முக் மகராஜ் என்னும் ஆன்மிகத் தலைவரால் ஏற்படுத்தப்பட்டது. அணுசக்தி கமிஷன் மற்றும் மத்திய அரசின் நிதியுதவி மூலம் இங்கு கோபால்ட் இயந்திரக் கருவி நிறுவப்பட்டது” என்று குறிப்பிட்டார். “ஆயுர்வேதம் போன்ற மாற்று இயன்முறை சிகிச்சைகளும் இங்கு நோயாளிகளுக்கு அளிக்கப்படுகின்றன. இந்த புதிய மையத்தின் மூலம் ஆண்டுக்கு 1,200 நோயாளிகளுக்கு கதிர்வீச்சு சிகிச்சை அளிக்க முடியும், முன்பு 400 பேர் பயனாளிகளாக இருந்த நிலையில் இப்போது 80 சதவீதம் பேர் இலவச சிகிச்சை பெறுகின்றனர் என்று கூறினார். ரோட்டரியின் சீரிய முயற்சிக்கு முன்பு நாங்கள் இருவரும் இணைந்து ஏழை நோயாளிகளுக்கு இலவச புற்றுநோய் சிகிச்சை அளிப்பது குறித்து நினைத்துகூடப் பார்க்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

“இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் புற்றுநோயாளிகள் எண்ணிக்கை 5 முதல் 7 சதவீதம் வரை அதிகரித்து வருவதால் புனேக்கு சிகிச்சைக்காக வரும் 15,000 பேரில் 60 சதவீதத்தினருக்கு புற்றுநோய் கட்டிகள் இருப்பது தெரியவந்துள்ளது. எனவே அறுவைசிகிச்சைக்கு முன்னர் அவர்களுக்கு கதிரீவீச்சு சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்” என்கிறார் ரோட்டரி சங்கத்தின் மருத்துவத் திட்டங்களுக்கான அமைப்பாளர் சுதின் ஆப்தே.

ஆனால், கதிர்வீச்சு சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்ட 36 சதவீதம் பேர், சிகிச்சைக்கு ஆகும் செலவு ரூ.2 லட்சத்தை கொடுக்க முடியாது. சங்கத்தின் மதிப்பீட்டின்படி அவர்களில் 1,500 பேர், புனேயில் உள்ள மருத்துவமனைகளில் அரசு நல்வாழ்வுத் திட்டங்களின் கீழ் இலவச சிகிச்சை பெறமுடிகிறது. மீதமுள்ள 2,000 நோயாளிகளுக்கான செலவை நாங்கள்தான் சமாளிக்க வேண்டியுள்ளது என்று விளக்கினார்.

முன்னதாக சங்கத்தின் தலைவர் ஷில்பா போஸ்கர் உரையாற்றுகையில், 30 உறுப்பினர்கள் அடங்கிய தமது சங்கம் TRF-க்கு 1 மில்லியன் டாலர் நிதிப்பங்களிப்புச் செய்துள்ளதாக கூறினார். மேலும் $2.1 மில்லியன் மதிப்பிலான 8 சர்வதேச மானிய உதவித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

புனே டௌடவுன் ரோட்டரி சங்கத்தின் AKS உறுப்பினர் அனில் கோயல், தனது டூரோஷாக்ஸ் நிறுவனத்தின் சார்பாக CSR நிதியாக ரூ.36.3 லட்சத்தை நன்கொடையாக வழங்கினார்.

## *பிரிஸ்டைன் புற்றுநோய் பராமரிப்பு வலையமைப்பு*

*2020 முதல் புனே பிரிஸ்டைன் ரோட்டரி சங்கம் ஏழை நோயாளிகளுக்கு இலவசம் அல்லது குறைந்த கட்டணத்தில் சிகிச்சை வழங்கும் புற்றுநோய் பராமரிப்பு மருத்துவமனைகளின் வலையமைப்பை (இதுவரை 9 மையங்கள்) உருவாக்க செயல்பட்டு வருகிறது.*

*சங்கத்தின் மருத்துவத் திட்டங்களின் அமைப்பாளரும், மருத்துவமனையின் வலை யமைப்புக்கு தலைமை வகிப் பவருமான சுதின் ஆப்தே கூறுகையில், இந்த 9 மருத்துவ மனைகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகள் OT, ICU, கதிர்வீச்சு, கீமோ வார்டு, அறுவைச்சிகிச்சை உபகரணங்கள் பிரிவு போன்றவை சர்வதேச மானிய உதவி, CSR நிதி மற்றும் இதர வளங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டது. “கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த மருத்துவமனையில் 6,000 புற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க சங்கம் ரூ.18 முதல் ரூ.20 கோடி வரை செலவிட்டுள்ளது” என்று அவர் விளக்கினார்.*

*சங்கம் சூர்ய சஹ்யாத்ரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவு கீமோ சிகிச்சை பிரிவு மற்றும் OT பிரிவுகள் ரூ.12 கோடியில் (சர்வதேச மானிய உதவி) தரம் உயர்த்தப்பட்டது. புனே சென்ட்ரல் ரோட்டரி சங்கம், ரூ.1.5 கோடி சர்வதேச மானிய உதவி மூலம் டயாலிசிஸ் சிகிச்சை மையத்தை அமைத்தது. புனே பாஷன் ரோட்டரி சங்கம் (ரூ.50 லட்சம் சர்வதேச மானிய உதவி மூலம்) நோய் கண்டறிதல் மையத்தை அமைத்தது. புனே கட்கி ரோட்டரி சங்கம் ஒரு தோல் வங்கியை (ரூ.1 கோடி) நிறுவியது. இவையெல்லாவற்றையும் கணக்கில் கொண்டால் ரூ.15 கோடி மதிப்பிலான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இதன் மூலம் ஆண்டுக்கு 2500 நோயாளி களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.*

*தற்போது, புதிய கதிர்வீச்சு மையத்துடன் சங்கம் மற்ற மருத்துவமனைகளுடன் இணைந்து கதிர்வீச்சு சிகிச்சை வசதி இல்லாத மையங்களிலிருந்து நோயாளிகளை ICTRC மருத்துவமனைக்கு அழைத்துவர ஏற்பாடு செய்துள்ளது. சிகிச்சைபெற வரும் நோயாளிகள் மற்றும் அவரது பராமரிப்பாளர்களுக்கும் இலவசமாக உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கதிர்வீச்சு சிகிச்சையினால் ஏற்படும் பக்கவிளைகளை சமாளிப்பதற்கான மருத்துவ உபகரணங்களும் வழங்கப் படுகிறது என்று ஆப்தே மேலும் கூறினார்.*

புகைப்படம்: V முத்துகுமரன்

The ROTARY ACTION PLAN

# ROTARY'S ACTION PLAN IN MOTION

## TRANSFORMING CLUBS AND COMMUNITIES THROUGH GLOBAL GRANTS





### Cadre input leads to greater impact and supports engagement

As a 25-year member of the Rotary Club of Guayaquil Norte, Guayas, Ecuador, Xavier "Xavi" Sanchez Pólit knows the transformative power of Rotary projects. And as a member of The Rotary Foundation Cadre of Technical Advisers, he uses his civil engineering expertise to help other clubs achieve their goals.

Cadre members help clubs plan and implement global-grant funded projects, and Xavi has advised members on initiatives such as building primary schools and water filtration systems.

### Engaging clubs and building partnerships to expand our impact

Xavi knows some clubs avoid global grants because it's a long-term process and can seem daunting. But he believes it's worthwhile. "Committing to multiphase projects keeps your club busy and engaged with Rotary," he says. Cadre advisers can help clubs navigate the grant application and reporting cycle.

Xavi also emphasizes the benefits of working with local leaders and organizations that have a presence in the community. "They have important knowledge and relationships to make projects successful."

### Adapting to local needs for lasting change

Visiting one water sanitation project involved a six-hour car trip and a three-hour canoe ride, but Xavi found his time with community members rewarding. "It was quickly clear they cared very much for their community and environment," he says.

Beyond commitment, it's also important to be flexible. "Most mistakes Rotarians make come from thinking we know what communities need, instead of asking them," Xavi says. By being receptive to new ideas, asking questions, and responding to community feedback, Rotary members can help their projects have a lasting impact.

Xavi and other Cadre members offer their expertise on these kinds of projects to help clubs advance Rotary's Action Plan commitment to increasing our impact and our ability to adapt.

Rotary PEOPLE OF ACTION

# கிராமப்புறப் பெண்களுக்கு ஆற்றல் அளித்தல்

ரோட்டரி செய்திக்குழு

சில்க் சிட்டி ராமநகரா ரோட்டரி சங்கம், RI மாவட்டம் 3191, அதன் தலைவர் K N ஸ்ரீதர் தலைமையில், 285 கிராமப்புறப் பெண்களுடைய வாழ்க்கைகளை மாற்றியமைத்துள்ள தொழில் சார்ந்த சேவைகள் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளது.

இந்தப் பெண்களுக்கு வேலை தேடித்தரக்கூடிய திறன்களை வழங்கி, அதன்மூலம் அவர்கள் தங்கள் சொந்தத் தொழில்களைத் தொடங்கி, நிதி அடிப்படையில் சொந்தக் காலில் நிற்க உதவும் இலக்கைக் கொண்ட திட்டம் இது. இந்தப் பயிற்சி நிகழ்வுகள் நேரடியான, எதார்த்தமான, தொழில்துறைக்குப் பொருந்தும்வகையில் வடிவமைக் கப்பட்டிருந்தன. இதன் மூலம், பங்கேற்பாளர்கள் தங்கள் தேர்ந்தெடுத்த திறன்களில் தன்னம்பிக்கை, தேர்ச்சியைப் பெற்றார்கள். ரூ.17 லட்சம் செலவில் 90 நாட்கள் நடைபெற்ற இந்தக் கிராமப் புரட்சித் திட்டம் இந்தப் பகுதியில் 285 கிராமப்புறப் பெண்களுக்கு உதவியது என்றார் மாவட்டச் செயலாளர் ராகவேந்திர இனம்தார்.




*மாவட்ட செயலாளர் ராகவேந்திர இனம்தார், மகளிர் அதிகாரமளித்தல் தலைவர் அனுபமா சவதி, பொதுச் செயலாளர் குமார் சுவாமி, Rtn நாகராஜு மற்றும் சங்கத்தின் தொழில் சேவைகள் இயக்குனர் அருண் குமார் (இடது) ஆகியோர் கலந்து கொண்டு விநியோக நிகழ்வைத் தொடங்கி வைக்கின்றனர். DG சதீஷ் மாதவன் (நடுவில்) மற்றும் சங்கத்தலைவர் K N ஸ்ரீதர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.*

பயிற்சி முடிந்ததும், பங்கேற் பாளர்கள் ஒவ்வொருவருக்கும் தையல் இயந்திரம், அடிப்படைக் கருவிகள், தேவையான பிற பொருட்களை இந்தச் சங்கம் கொடையளித்தது. இதன்மூலம் அவர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்கலாம். இந்தத் திட்டத்தின் தாக்கம் இன்னும் பல ஆண்டுகளுக்கு உணரப்படும். ஏனெனில், இந்தப் பெண்கள் தொழில்முனைவோர் ஆவார்கள், வேலை வாய்ப்புகளை உருவாக்குவார்கள், தங்கள் சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பார்கள்.

இந்தத் திட்டத்தின் வெற்றிக்கு வித்திட்டவர்கள், DG சதீஷ் மாதவன், பொதுச் செயலாளர் குமார் சுவாமி, மாவட்டச் செயலாளர் ராகவேந்திர இனம்தார், மாவட்டப் பெண்களுக்கு ஆற்றல் அளித்தல் இயக்குநர் அனுபமா சவடி. இந்தச் சங்கம் தையல் மற்றும் அழகுக் கலைப் பயிற்சிகளை வழங்கும் ஒரு முழுமையான திட்டத்துக்கு ஏற்பாடு செய்தது.■



# உலகில் எங்கே

இந்த மாதம், RI மாநாட்டின் பங்கேற்பாளர்கள் கால்கரியில் ஒன்றுகூடுவார்கள். கடந்த மாநாடுகளின் புகைப்படங்களின் தொகுப்பு இங்கே. இவை எடுக்கப்பட்ட நகரங்களை யூகிக்கவும்.












இந்த நகரத்தில் போன்சோக்கள் கௌச்சோ கலாச்சாரத்தின் பாரம்பரிய சின்னமாக இருப்பதை ரோட்டேரியன்கள் கண்டுபிடித்தனர்.

ரோட்டரி கோப்பு புகைப்படங்கள்






மாநாட்டின் தொடக்க அமர்வு, திடமான பாறையில் செதுக்கப்பட்ட இந்த நகரத்தின் அடையாளச் சின்னமான ஆம்பிதியேட்டரின் அர்ப்பணிப்புடன் ஒத்துப்போனது.





ரோட்டரி அதன் 2026 மாநாட்டிற்காக இந்த நகரத்திற்கு மீண்டும் வருகை தருகிறது.





இந்த வருட மாநாட்டிற்காக நீங்கள் கால்கரியில் இருக்கும்போது, இந்த மற்றொரு கனேடிய நகரத்திற்கும் சென்று பாருங்கள்.



**Answer key:**

1. சியோல், 1989; 2. ஹொனலுலு, 1969; 3. சிட்னி, 1971, 4. ஒசாகா, ஜப்பான், 2004; 5. பியூனோஸ் அயர்ஸ், 2000; 6. பார்சிலோனா, 2002; 7. மினியாபோலிஸ்-செயிண்ட் பால், 1974; 8. தைபே, 1994; 9. டென்வர், ரெட் ராக்ஸ் பார்க், 1941; 10. டல்லாஸ், 1982; 11. டொராண்டோ, 1924; 12. மெக்சிகோ நகரம், 1968; 13. மியூனிக், 1987.



©ரோட்டரி

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## ராஞ்சி விமான நிலையத்தில் AED இயந்திரம்

பிர்சா முண்டா விமான நிலையத்தில், மாரடைப்பால் துன்புறக்கூடிய பயணிகள், விமான நிலைய ஊழியர்களுக்கு நெருக்கடி நேர உதவி வழங்குவதற்கென ஓர் AEDஐ (தானியங்கி வெளி டீஃபைப்ரில்லேட்டர்) நிறுவியது RC ராஞ்சி, RID 3250. இந்த இயந்திரம் மின் அதிர்ச்சியை வழங்கி இதயத்தை உயிர்ப்பிக்கிறது, மருத்துவ உதவி வரும்வரை நோயாளியை உயிருடன் வைக்கிறது.
பிர்சா முண்டா விமான நிலையத்துக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பயணிகள் வருகிறார்கள். இவர்களில் யாருக்காவது திடீர் மாரடைப்பு வந்தால் AED இயந்திரம் அவர்களைக் காக்க உதவும்.



*விமான நிலைய ஊழியர்களுக்கு AED இயந்திரத்தை DG பிபின் சச்சன் (இடமிருந்து ஐந்தாவது) வழங்குகிறார். மேலும் காண்க: RC ராஞ்சி தலைவர் கௌரவ் பக்ராய் (நடுவில்) மற்றும் PDG கோபால் கெம்கா (இடமிருந்து நான்காவது).*

## செயற்கைக் கை, கால்களுக்கு அன்னெட்களின் நன்கொடை

அன்னெட்களுக்குச் சேமிப்புப் பழக்கத்தைக் கற்பிப்பதற்கென, செயற்கைக் கை, கால் வடிவத்திலான உண்டியலை வழங்குகிறது RC கோயம்பத்தூர் மிட் டவுன், RID 3201. ரோட்டரியன்களுடைய குழந்தைகள் இந்தச் சங்கத்தின் செயற்கைக் கை, கால் வழங்கல் முகாம்களுக்குப் பங்களிக்கவேண்டும் என்று இது ஊக்குவிக்கும்.
இந்த உண்டியல்கள் அன்னெட்களின் இதயங்களில் சேவை, இரக்கத்துக்கான விதைகளை ஊன்றும் என்றார் சங்கத் தலைவர் ஸ்ரீனிவாஸ் ஸ்ரீராமன்.



*அன்னெட் தல்ஹிர் இந்த முயற்சியை துவக்கினார்.*

## பள்ளிக் குழந்தைகளுக்கான கால்பந்து முகாம்

RC செங்கண்ணூர், RID 3211, நடத்திய கோடைக் கால்பந்துப் பயிற்சி முகாமில், சுற்றுச்சூழல் நாளை (ஏப்ரல் 22) முன்னிட்டு 60 பள்ளிக்குழந்தைகள் ஒரு மரத்தைத் தழுவுவோம் என்ற தனித்துவமான திட்டத்தில் பங்கேற்றார்கள். BSF-பொதுக் கண்காணிப்பாளரும் ரோட்டரியனுமான P V ஈப்பென் உதவியுடன் காவல் துறைக்கண் காணிப்பாளர் K T சாக்கோ இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

மாணவர்களுக்கு ரோட்டரிச் சின்னம், போதை மருந்துகளை மறுப்போம் என்ற முழக்கத்தைக் கொண்ட கால்பந்து மேற்சட்டைகள் வழங்கப்பட்டன. போதைப் பழக்கத்தின் கொடுமையைப் பற்றிய கருத்தரங்கு ஒன்றும் நடத்தப்பட்டது.




*"ஒரு மரத்தை கட்டிப்பிடி" பிரச்சாரத்தில் பள்ளி குழந்தைகள் மற்றும் ரோட்டேரியன்கள்.*



RYLA *பங்கேற்பாளர்களுடன்* RID 3240 PDG *கல்பனா கோண்ட்* (*வலது*).

## அஸ்ஸாம், டிப்ருகர்ஹில் RYLA

அஸ்ஸாமிலுள்ள ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த 13 பள்ளிகளில் பயிலும் 52 மாணவர்களுக்கான மூன்று நாள் RYLA ஒன்றை நடத்தியது RC டிப்ருகர்ஹ், RID 3240. இங்கு இவர்கள் தலைமைப் பண்புகள், ஆளுமை மேம்பாடு, பணி வாழ்க்கைக் கட்டமைப்பு போன்ற தலைப்புகளில் வல்லுனர்களுடன் ஊடாடினார்கள்.

இந்த RYLAவின் தலைவர், டெபஜித் கோஸ்வாமி. சுற்றுச்சூழல்பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும் ஒரு பேரணியை மாவட்டக் காட்டு அலுவலர் சந்தீப் பெண்டி தொடங்கிவைத்தார். பங்கேற்பாளர்கள் BCPL மற்றும் க்ரோமா ஹைட்ரோபானிக் நர்சரிகளுக்குக் கல்விச் சுற்றுலாவாக அழைத்துச்செல்லப்பட்டார்கள். நிறைவு விழாவில் மாவட்ட ஆணையர் பிக்ரம் கைரி பேசினார்.

# மனித குலத்திற்கான ஒரு காப்பு, ஆர்க்டிக் பனிக்கட்டிகளின் கீழ்

ஸ்டீவன் வெர்மெய்லன்

ஆவணப்பட புகைப்படக் கலைஞர் கிறிஸ்டியன் கிளாவர்ஸ், RC ஆண்ட்வெர்பென்-ஓஸ்ட்டைச் சேர்ந்தவர், ஒரு தசாப்தத்திற்கும் மேலாக உலகளாவிய வெப்பமயமாதலின் விளைவுகளைப் பிடிக்க உலகம் முழுவதும் பயணம் செய்து வருகிறார். அவரது புகைப்படங்கள் எதை இழக்க நேரிடும் என்பதைக் காட்டுகின்றன, அந்த வகையில் அவை ஒரு பெரிய எச்சரிக்கை மணியாகவும் இருக்கிறது. அவரது சமீபத்திய திட்டத்திற்காக, ஸ்வால்பார்ட் தீவுக்கூட்டத்தில் உள்ள ஸ்பிட்ஸ்பெர்கனில் உள்ள உலக விதை வங்கிக்கு பிரத்யேக அணுகலைப் பெற்றுள்ளார்.

“உலகளாவிய விதை பெட்டகத்தின் திறவுகோல் மூன்று பேரிடம் மட்டுமே உள்ளது, அங்கு உலகம் முழுவதிலுமிருந்து உணவுப் பயிர் விதைகளின் கூடுதல் பிரதிகள் வைக்கப்படுகின்றன. பெர்மாஃப்ரோஸ்ட்டில் ஆழமாக அமைந்துள்ள இந்த களஞ்சியம், தேசிய விதை வங்கிகளுக்கு காப்புப் பிரதியாக செயல்படுகிறது, உள்ளூர் பயிர்களை ஆவணப்படுத்தி பாதுகாக்கிறது. இயற்கை பேரழிவுகள், போர்கள் அல்லது முன்னேறி வரும் காலநிலை மாற்றம் போன்ற பேரழிவுகளிலிருந்து அவற்றின் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாக்கிறது” என்று கிளாவர்ஸ் கூறுகிறார்.

உயர் ஆர்க்டிக்கிற்கான தனது பயணங்களில் ஒன்றில், கிளாவர்ஸ் விதை வங்கியின் பிரம்மாண்டமான நுழைவாயிலைக் காண நேர்ந்தது. அந்த கனமான கதவுக்குப் பின்னால் என்ன இருக்கும் என்பதில் அவர் உடனடியாகக் கவரப்பட்டார். அங்கு 78 டிகிரி வடக்கு அட்சரேகையில் மேலும் வட துருவத்திலிருந்து 1,000 கிலோமீட்டர் தொலைவில் வறண்ட பாலைவன காலநிலை நிலவுகிறது. இங்கே நார்வே அரசாங்கம் உலகளாவிய சமூகத்திற்கு சேவை செய்வதற்காக ஒரு வசதியை உருவாக்கியுள்ளது, இது நமது விவசாயப் பயிர்களின் மரபணு பன்முகத்தன்மைக்கான ஒரு பாதுகாப்பு வலையாகும்.”

உலகளாவிய விதை பெட்டகத்தை அணுக கிளாவர்ஸுக்கு ஆறு மாதங்களுக்கு மேல் ஆனது. இறுதியில், பொறுப்பில் இருந்த ஒருவர் அனுமதி வழங்கினார். “நான் வேடிக்கைக்காகவோ அல்லது தொழில் ரீதியாக லாபம் ஈட்டவோ உள்ளே செல்ல விரும்பவில்லை என்பதை அவர் உணர்ந்தார். இது நமது பூமியின் பலவீனத்தையும் அதற்குத் தகுதியான பாதுகாப்பையும் பற்றிய எனது ஒட்டுமொத்தக் கதையில் பொருந்தியது” என்று அவர் கூறுகிறார். “நாங்கள் சில மாதங்களுக்குப் பிறகு லாங்யர்பியன் விமான நிலையத்தில் சந்தித்தோம். எனது விமானத்தில் இருந்த அனைத்து பயணிகளும் வெளியேறிய பிறகு, அவர் என்னை அழைத்துச் செல்ல வந்தார். அவர் விதைகளின் புதிய சரக்கைச் சேமித்துக்கொண்டிருந்தபோது, நான் விதை வங்கியை சுதந்திரமாகச் சுற்றி திரிந்தேன். அந்த நாள் எனக்கு மிகுந்த அதிர்ஷ்டமான நாள், உலக விதை வங்கியின் இணை நிறுவனரான அமெரிக்க விவசாய நிபுணர் கேரி ஃபவுலர் அங்கு இருந்தார். நான் தற்போது தொகுத்து வரும் புத்தகத்திற்காக அவரை நேர்காணல் செய்ய முடிந்தது.”

“ஃப்ரோசன் ஹெரிடேஜ், ஆர்க்டிக் வால்ட்ஸ் அண்ட் தி ஃப்யூச்சர் ஆஃப்



*விதைப் பெட்டகத்தின் நுழைவு வாயில் வட துருவத்திலிருந்து 1,000 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.*

அவர் ஹிஸ்டரி" என்ற கிளாவர்ஸின் புத்தகம் நவம்பரில் வெளியிடப்பட்டது.

உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலிருந்தும் 1,301,397 விதை மாதிரிகள் பனிக்கட்டியின் கீழ் சேமிக்கப்பட்டுள்ளன. மொத்த சேமிப்பு திறன் சுமார் 4.5 மில்லியன் பிரதிகளுக்கு இடமளிக்கிறது. விதைகள் சுமார் மைனஸ் 18 டிகிரி செல்சியஸ் நிலையான வெப்பநிலையில் காற்றுப்புகாத கொள்கலன்களில் வைக்கப்படுகின்றன. இது அவற்றை நீண்ட காலத்திற்கு சேமிக்க உதவுகிறது. சிரியாவின் தேசிய விதை வங்கி உள்நாட்டுப் போரின்போது கடுமையாக சேதமடைந்தபோது, உலகளாவிய விதை பெட்டகம் அதன் மதிப்பை நிரூபித்தது. சிரிய விஞ்ஞானிகள் தங்கள் சேகரிப்பை நிரப்ப விதைகளை சேகரிக்க வந்தனர். "விதைகள் 130 மீட்டர் நீளமுள்ள சுரங்கப்பாதையின் முடிவில் மூன்று உறைபனி அறைகளில் வைக்கப்பட்டுள்ளன, அவை எந்தவொரு பேரழிவையும் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன" என்று கிளாவர்ஸ் கூறுகிறார். "முரண்பாடாக, காலநிலை மாற்றமும் இங்கே தன்னை உணர வைத்துள்ளது: 2017-ல், உருகும் நீர் பதுங்கு குழியில் கசிந்து அணுகல் சுரங்கப்பாதையை வெள்ளத்தில் மூழ்கடித்தது. அதிர்ஷ்டவசமாக, சேமிப்பு அறைகள் பாதுகாப்பாகவே இருந்தன.

உலகளாவிய விதை பெட்டகத்தின் முன்னோடியையும் கிளாவர்ஸ் பார்க்க முடிந்தது. "ஸ்வால்பார்டில் உள்ள கைவிடப்பட்ட நிலக்கரி சுரங்கத்தில், நோர்டிக் மரபணு வள மையம் 1986-ம் ஆண்டிலேயே ஸ்காண்டிநேவிய தாவர வகைகளின் விதைகளைக் கொண்ட 20 மரப்பெட்டிகளைச் சேமித்தது"




*உலகளாவிய பேரிடர் ஏற்பட்டால் தரவுகளைப் பாதுகாக்க வடிவமைக்கப்பட்ட ஒரு சேமிப்பு வசதியான ஆர்க்டிக் உலக காப்பகத்திற்கு கிறிஸ்டியன் கிளாவர்ஸ் (நடுவில்) தனது புகைப்படங்களில் சிலவற்றை நன்கொடையாக வழங்கினார்.*

என்று அவர் கூறுகிறார். "ஒவ்வொரு பெட்டியிலும் ஒரே விதைகள் உள்ளன. விதைகளின் சாத்தியக்கூறு மற்றும் ஏதேனும் நோய்க்கிருமிகள் உள்ளதா என்று சரிபார்க்க ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒன்று திறக்கப்படுகிறது. 2086-ல் கடைசி மாதிரிகள் ஆய்வு செய்யப்படும் வரை சோதனை தொடரும்."

ஸ்வால்பார்டில் ஒரு மூன்றாவது சர்வதேச சேமிப்பு மையம் உள்ளது, இருப்பினும் இது வேறு வகையான சேமிப்பு மையம். ஆர்க்டிக் உலகக் காப்பகத்தில் மனித குலத்திற்கு அத்தியாவசியமாகக் கருதப்படும் கலாச்சார, வரலாற்று மற்றும் அறிவியல் தரவுகள் சேமிக்கப்படுகின்றன."நார்வே நிறுவனமான பிக்ல் உருவாக்கிய சிறப்பு பெல்லிக்கிளில் (மெல்லிய படலம்) தரவு சேமிக்கப்படுகிறது. இது ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நீடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது" என்று கிளாவர்ஸ் கூறுகிறார். "தரவு ஒப்புமையாகவும் டிஜிட்டல் முறையிலும் சேமிக்கப்படுகிறது, எனவே தற்போதைய தொழில்நுட்பம் தொலைந்து போனாலும் படிக்கக் கூடியதாக இருக்கும்.



உலகளாவிய பேரழிவு ஏற்பட்டால் மனித குலத்தின் முக்கியமான தரவைப் பாதுகாப்பதே இதன் பின்னணியில் உள்ள நோக்கம். இந்த தளம் அணு ஆயுதத் தாக்குதல்கள் மற்றும் மின்காந்தத் துடிப்புகளுக்கு எதிர்ப்புத் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது."

நாடுகள், அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் ஆர்க்டிக் உலகக் காப்பகத்தில் தரவைச் சேமிக்கலாம். கிளாவர்ஸ் தானே அங்கு பெல்ஜியத்தின் முதல் பங்களிப்பைச் செய்துள்ளார்: காலநிலை மாற்றத்திற்கு சாட்சியாக இருக்கும் பல புகைப்படங்கள். "இதில் பசிபிக்கில் எனது திட்டத் திலிருந்து 26 புகைப்படங்கள் உள்ளன, அவை துவாலு, கிர்பாட்டி மற்றும் மார்ஷல் தீவுகள் போன்ற தீவுகள் கடல் மட்டம் உயர்ந்து வருவதால் எவ்வாறு மறைந்து போகும் அபாயத்தில் உள்ளன என்பதை ஆவணப்படுத்துகின்றன. இந்த வழியில், நான் தீவு மக்களுக்கு ஒரு குரல் கொடுக்க விரும்புகிறேன்" என்று அவர் கூறுகிறார்.

புகைப்படம் : ©கிறிஸ்டியன் கிளாவர்ஸ்
©ரோட்டரி



## RID 2981

### RC பட்டுக்கோட்டை கிங்ஸ்

புதிதாகத் தொடங்கப்பட்ட பொன்னவரயன்கோட்டை RCC உறுப்பினர்களின் நன்மைக்காக அதற்குத் தையல் இயந்திரங்கள், பண்ணைக் கருவிகள் கொடையளிக்கப்பட்டன. இந்தத் திட்டம் இந்தப் பகுதியில் சங்கத்தின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தியது.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3000

### RC கந்தர்வக்கோட்டை

விவசாயிகளுக்குத் தங்கள் பயிர்களைக் கவனித்துக்கொள்ள உதவும் உரத் தெளிப்பான்கள் வழங்கப்பட்டன. பண்ணை உற்பத்தித்திறனை மேம்படுத்தும் இந்த உதவிக்காக அவர்கள் ரோட்டரிக்கு நன்றி தெரிவித்தார்கள்.

## RID 3030

### RC சோப்டா

மகளிர் நாளன்று அடவாட் கிராமத்தில் சுய உதவிக் குழுப் பெண்களுக்கான தைராய்டு பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இது தைராய்ட் குறைபாடுகளைத் தடுப்பதற்கான தேவையைப்பற்றிய விழிப்புணர்வையும் அவர்களிடையில் உண்டாக்கியது.





RID **3060**

### RC வாத்வான் மெட்ரோ

60 பெண்களுக்கு மாதவிடாய் சுகாதார விழிப்புணர்வு நடத்தப்பட்டது. இதன் நிறைவில் இவர்கள் ஒவ்வொருவருக்கும் 100 சானிட்டரி பேட்கள் வழங்கப்பட்டன.

RID **2982**

### RC ஜலகண்டபுரம்

ஜலகண்டபுரம் அரசு மருத்துவமனையில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் 20 தாய்மார்களுக்குத் தங்கள் குழந்தைகளைக் கவனித்துக்கொள்வதற்கான தூய்மை, நலப் பொதிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சி இந்தச் சங்கத்தின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தியது.




RID **3080**

### RC அம்பாலா இன்டஸ்ட்ரியல் ஏரியா

அம்பாலா காந்தி மைதானத்தில் நடந்த சீக்கியக் குர்மட் சமகத்தில் நடைபெற்ற முதலுதவி, நலப் பரிசோதனை முகாமில் சுமார் 50,000 பக்தர்கள் பலன் பெற்றார்கள். சங்க உறுப்பினர் டாக்டர் ஜோகீந்தர் சிங் நோயாளிகளைப் பரிசோதித்தார். அவர்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டன.



RID **3090**

### RC ஹிசார் சென்ட்ரல் டைனமிக்

ஏழைப் பெற்றோரின் குழந்தைகளுக்கு எழுதுபொருட்கள், கல்விப் பொருட்கள் வழங்கப்பட்டன. கல்விப் பொருட்களை வழங்குவதன்மூலம் இன்னும் பல குடும்பங்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்ப்பார்கள் என்று இந்தச் சங்கம் நம்புகிறது.

# பறவைகளை விடுவிக்கவும்

பிரீத்தி மேஹ்ரா

எங்கள் அடுக்குமாடி குடியிருப்பின் வாட்ஸ்அப் குழுவில் செல்லப் பறவை ஒன்று பறந்து போய்விட்டது என்றும், யாராவது அதைப் பார்த்தால் உரிமையாளருக்கு அதன் இருப்பிடம் குறித்து தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் அடிக்கடி செய்திகள் வந்த வண்ணம் இருக்கும். பறவைகளை திரும்பப் பெறுவதற்கான இத்தகைய தொடர்ச்சியான முயற்சிகளை பார்க்கும் போது மக்கள் ஏன் பறவைகளை செல்லப்பிராணிகளாக வைத்திருக்கிறார்கள், இது நிலையான நடைமுறையா என்று என்னை எப்போதும் யோசிக்க வைக்கிறது.

நான் செல்லப்பிராணிகளை நேசிப்பவள், எனக்கு நினைவிருக்கும் காலத்திலிருந்தே வீட்டில் நாய்களை வைத்திருந்திருக்கிறேன், இருந்தும் பறவைகள் என்னை பொறுத்தவரையில் சுதந்திரமான ஆவிகள்; மேலும் பறவை நோக்கும் பயணத்தின்போது அவற்றின் இயற்கையான வாழ் விடத்தில் உன்னிப்பாகக் கவனிக்கப்படவும் ஆய்வு செய்யப்படவும் வேண்டியவை.



அதிகரித்து வரும் நகரமயமாக்கலும் பறவைகளின் எண்ணிக்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

2012-ம் ஆண்டிலிருந்து சிட்டுக்குருவி பல ஆண்டுகளாக டெல்லியிலிருந்து மறைந்து போனது உங்களுக்கு நினைவிருக்கிறதா, அவற்றின் பாதுகாப்பில் கவனம் செலுத்துவதற்காக, அப்போதைய முதலமைச்சர் ஷீலா தீட்சித் அதை தலைநகரின் மாநிலப் பறவையாக அறிவித்து, சணல், தென்னை நார், மண்பாண்டங்கள் மற்றும் மூங்கில் போன்ற இயற்கை பொருட்களால் செய்யப்பட்ட செயற்கை கூடுகளை உருவாக்கும் இயக்கத்தைத் தொடங்கினார். இந்த நடவடிக்கைகள் உதவின, ஒரு தசாப்தத்தில் சிட்டுக்குருவிகள் மீண்டும் வந்தது. அச்சிறிய பறவையின் வருகை ஊடகங்களிலும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பறவை நோக்குநர்களிடையேயும் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டது.

பசுமையாக இருப்பது என்பது இயற்கையோடு ஒன்றிணைந்து, அதன் அனைத்து மகிமையிலும் திளைத்து அதைக் கவனிப்பதாகும். அது நம்மைத் தாங்கி வளர்க்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும் ஆகும். இயற்கையின் அருமையான வரங்களை ரசிக்க, உங்கள் சுற்றுலாப் பைகளையும் தொலைநோக்கியையும் எடுத்துக்கொண்டு ஒரு பூங்காவிற்குச் சென்று, விமானங்களை தயாரித்து பறக்க நம்மை ஊக்குவித்த இயற்கையின் அற்புதமான படைப்புகளில் ஒன்றை நாள் முழுவதும் கவனிப்பதை விட சிறந்தது வேறொன்றுமில்லை.

பறவை நோக்குதலில் என்ன தான் இருக்கிறது அவ்வளவு வசீகரமாக? புதர் ஒன்றில் ஒரு பறவை சிணுங்குவதையோ அல்லது மரக்கிளையில் அமர்ந்து பாடுவதையோ பார்ப்பதும் கேட்பதும், சிறகுகள் வெட்டப்பட்டு கூண்டில் அடைக்கப்பட்டிருக்கும் பல பறவைகளை பார்ப்பதை விட அதிக மகிழ்ச்சியைத் தரும் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த விஷயத்தைப் பற்றி நான் படித்துக்கொண்டிருந்தபோது, ஷான் பெங் மற்றும் டொனால்ட் M ப்ரூம் ஆகிய ஆராய்ச்சியாளர்களின் “செல்லப்பிராணிகளாக பறவைகளை வைத்திருப்பதன் நிலைத்தன்மை: அவைகளை வைத்திருக்கலாமா?” என்ற ஆய்வை நான் கண்டேன். செல்லப்பிராணிகளாக பறவைகளை வைத்திருப்பது பல்லுயிரியலுக்கு எவ்வாறு தீங்கு விளைவிக்கிறது மற்றும் காட்டுப் பறவைகளின் எண்ணிக்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை பற்றி அவர்கள் பேசுகிறார்கள். செல்லப் பறவைகளை வணிகம் செய்பவர்கள் மற்றும் அவற்றை வைத்திருக்கும் உரிமையாளர்கள் பின்பற்றும் நெறிமுறையற்ற மற்றும் நிலையற்ற நடைமுறைகளை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். “காட்டுப் பறவைகள் பொதுமக்களுக்கு செல்லப்பிராணிகளாகவோ அல்லது இனப்பெருக்க நிறுவனங்களுக்குவோ பல காரணங்களுக்காக விற்கப்படக் கூடாது, ஏனென்றால் 75 முதல் 90 சதவிகித காட்டுப் பறவைகள் விற்பனைக்கு வருவதற்கு முன்பே இறந்துவிடுகின்றன, மேலும் காடு களிலிருந்து பறவைகளை எடுப்பது பல்லுயிரியலில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறது” என அவர்கள் கூறுகிறார்கள்.

மேலும், செல்லப் பறவைகளுக்கு வழங்கப்படும் இருப்பிடம் அந்த இன பறவைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் மற்றும் நல்ல நலனை அனுமதிக்க வேண்டும் என்று அவர்களின் ஆய்வு சுட்டிக்காட்டுகிறது, உதாரணமாக சிறிய கூண்டுகள் இருக்கக்கூடாது, இடவசதியுடன்

கூடிய பறவையகங்கள் இருக்க வேண்டும், மேலும் சமூகப் பறவைகள் சமூகக் குழுக்களாக வைக்கப்பட வேண்டும். "தற்போது, பல செல்லப் பறவைகளுக்கு போதுமான தங்குமிடம் இல்லாததால் பறவைகளில் ஒரே மாதிரியான நடத்தைகள் மற்றும் மோசமான நலனின் பிற குறிகாட்டிகள் ஏற்படுகின்றன. உரிமையாளர்கள் நல்ல ஊட்டச்சத்தை வழங்குவது மற்றும் நோயின் அபாயத்தைக் குறைப்பது எப்படி என்பது பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும். இந்த மாற்றங்கள் செய்யப்படாவிட்டால், பறவைகளை செல்லப் பிராணிகளாக வைத்திருப்பது அனுமதிக்கப்படக் கூடாது" என்று ஆய்வு கூறுகிறது.

சுற்றுச்சூழல் மற்றும் நிலைத் தன்மையில் கவனம் செலுத்தும் ஒருவராக, காலநிலை மாற்றம் பறவைகளின் எண்ணிக்கையில், குறிப்பாக நீண்ட தூர வலசை செல்லும் பறவைகளில் ஏற்படுத்தும் தாக்கத்தை அறிவது முக்கியம். ஆராய்ச்சி சில கவலை அளிக்கும் உண்மைகளை எனக்கு காட்டியது. நான் பகிர்ந்து கொள்ள விரும்பும் சில உண்மைகள் இங்கே:

★மாறிவரும் வெப்பநிலை மற்றும் காலநிலை மாற்றத்தால் தூண்டப்படும் தீவிர வானிலை நிகழ்வுகளால், வலசை செல்லும் பறவைகளின் வலசை முறைகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. அவை செல்லும் பாதையை மாற்றவோ, பயணங்களை ரத்து செய்யவோ அல்லது குறைக்கவோ கட்டாயப்படுத்தப்படுகின்றன, இது பெரும்பாலும் அவற்றின் உயிர்வாழ்வுக்கு சவாலாக உள்ளது.

★வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்கள், பாலைவனமாக்கம் மற்றும் நீர் பற்றாக்குறை அல்லது வெள்ளம் காரணமாக, பல பறவை இனங்கள் வாழ்விட இழப்பை எதிர்கொள்கின்றன. இது அவற்றின் இயற்கையான கூடு கட்டும் மற்றும் உணவு தேடும் முறைகளை கடுமையாக பாதிக்கிறது.

★வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக வலசை செல்லும் பறவைகள் ஒரு பிராந்தியத்திற்கு முன்னதாகவே வந்து சேர்வதற்கும், அத்தகைய இடங்களில் உள்ள தாவரங்கள் அவற்றின் இனப்பெருக்க காலத்துடன் ஒத்துப்போவதை நிறுத்தி விடுவதற்கும் வழிவகுத்துள்ளது, இதனால் அவற்றின் சந்ததிகளுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படுகிறது. சுருக்கமாகச் சொன்னால், காலநிலை மாற்றம் வலசை செல்லும் பறவைகளின் வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மையைக் கொண்டு வந்துள்ளது, பலவற்றின் உயிர்வாழ்வை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

எனவே, பசுமைப் போராளிகளாக நாம் என்ன பங்கு வகிக்க முடியும்? நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த விஷயம் – நாம் வாழும் இடத்தில் பறவைகளை காப்பதற்கான ஒரு விழிப்புணர்வு இயக்கத்தைத் தொடங்குவது. நம் நண்பர்கள், அண்டை வீட்டார், பள்ளி, கல்லூரி ஆகியோரிடம் இந்த தகவலை எளிமையாக எடுத்துச் சொல்ல முடிந்தால், அது பெரிய உதவியாக இருக்கும்.

விழிப்புணர்வு முகாம்களை நடத்துவது ஒரு அர்த்தமுள்ள தலையீடாக இருக்கும். மாணவர்களை இயற்கை பூங்காக்களுக்கு அழைத்துச் சென்று, பறவைகள் மற்றும் விலங்குகளை அவற்றின் இயற்கையான வாழ்விடங்களில் கவனிப்பதன் அடிப்படைகளை அவர்களுக்குக் கற்பிப்பது ஒரு மகிழ்ச்சியான மற்றும் கல்வி புகட்டும் அனுபவமாக இருக்கும். நம்முடைய பறவை நண்பர்களை கவனிப்பது பற்றி பேசுகையில், அவர்களுக்கு உணவளிப்பதன் மூலம் நாம் அவர்களுக்கு உதவவில்லை என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்களே தங்கள் உணவைத் தேடட்டும். மக்கள் வனவிலங்குகளுக்கும் பறவைகளுக்கும் மீதமான உணவு மற்றும் தானியங்களை வழங்குவது வழக்கமாகி விட்டது. இதற்கு புறா ஒரு சிறந்த உதாரணம், இது காலை நடைப்பயிற்சி செய்பவர்களை தங்கள் உணவிற்காக நம்பி இருக்கிறது.


காலநிலை மாற்றத்தைத் பெரிய அளவில் தணிக்க நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சொந்த வழியில் ஒன்றிணைவது அவசியம். குறைவான ஆற்றலைப் பயன்படுத்துங்கள், உங்கள் கழிவுகளைப் பிரித்தெடுங்கள், இயற்கை பொருட்களைத் தேர்ந்தெடுங்கள், புதைபடிவ எரிபொருளைப் பயன்படுத்தும் போக்குவரத்துக்குப் பதிலாக மிதிவண்டியைப் பயன்படுத்துங்கள், மேலும் சுற்றுச் சூழலுக்காக வாதிடுபவராக இருங்கள்.

மிக முக்கியமாக, இயற்கை மற்றும் பல்லுயிரியலைப் பொறுத்தவரை, கிரகத்தின் நலனுக்காக பறவை வளர்ப்பை விட பறவை நோக்குதலை மேற்கொள்வது சிறந்தது.

எழுத்தாளர் மூத்த இதழாளர்
சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி
எழுதி வருகிறார்.



# பெண் எழுத்தாளர்கள் சந்திக்கும்போது




*‘கதைகள் மட்டுமே நம்மிடம் இருப்பது’ அண்மையில் மூன்று நாட்கள் நடைபெற்ற குழந்தைகளுக்கான கதைகள் எழுதும் பெண்களின் சந்திப்பில் பல இந்திய மொழிகளில் கதைகள் மற்றும் பகிர்வுகள் இந்த அடிப்படை உண்மையை ஆற்றல்மிக்க வழிகளில் மீண்டும் வலியுறுத்தின.*



**சந்தியா ராவ்**

வங்க எழுத்தாளர் ஜோயா மித்ரா, அமெரிக்க இந்திய எழுத்தாளர் லெஸ்லி மர்மன் சில்கோவின் ‘செரிமோனி’ புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டி, ‘அவர்கள் உங்களிடம் கதைகள் வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமே என்று சொல்வார்கள். நம்பாதீர்கள். கதைகள் மட்டுமே நம்மிடம் இருப்பது’ என்று கூறியபோது, அது உடனடியாக என்னுள் எதிரொலித்தது. மேலும், ஈரோடு சர்மிலாவின் தமிழ் விளக்கக்காட்சியின் முடிவில், ஓவியர்/எழுத்தாளர் தீபா பல்சவர் என்னருகில் சாய்ந்து, ‘அவர் என்ன சொன்னார் என்று எனக்கு ஒரு வார்த்தை கூட புரியவில்லை, ஆனாலும் எனக்கு எல்லாம் புரிந்தது’ என்று கூறியபோது, குழந்தைகளுக்காக (மற்றும் பெரியவர்களுக்காக) எழுதும் பெண்களின் சமீபத்திய மூன்று நாள் சந்திப்பின் உணர்வை அது உள்ளடக்கியது என்பதை நான் உணர்ந்தேன். பிரபல தமிழ் எழுத்தாளர் அம்பை (டாக்டர் C S லட்சுமி) தலைமையில் இயங்கும் ஸ்பாரோ (பெண்கள் ஆராய்ச்சிக்கு ஒலி மற்றும் படக் காப்பகம்) ஏற்பாடு செய்து, அவரது விசுவாசமான குழுவினரால் செயல்படுத்தப்பட்ட இது, ‘உரையாடல் மற்றும் கலந்துரையாடல் மூலம் பெண்களின் எழுத்தை கொண்டாடும் ஒரு கலாச்சார நிகழ்வு’ ஆகும். பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன – முறையான அமர்வுகளின் போதும், உணவு நேரங்களிலும், இடைவேளைகளிலும், நீச்சல் குளத்திலும் அதற்கு வெளியிலும், பெரும்பாலும் ஒரு பொதுவான மொழி கூட இல்லாத இருவர் பகிர்ந்து கொண்ட அறைகளிலும் – ஆனாலும், முயற்சியால், அவர்கள் பேசினார்கள்!

ஒரு வகையில், இது இந்தியாவுக்கு ஒரு இணைப்பு மொழி தேவை என்ற வாதத்தை பொய்யாக்குகிறது. மந்தீப் ரிம்பி பஞ்சாபியைத் தொடர்ந்து பயன்படுத்தினார் – அது பெரும் பலனைத் தந்தது. எப்போதும் யாராவது மொழிபெயர்க்க இருந்தார்கள். உண்மையில், இந்தியர்களுக்கு மொழிகளில் திறமை உண்டு என்பது எனது தனிப்பட்ட நம்பிக்கை. நாம் அனைவரும் அறிவார்ந்த அல்லது இலக்கியத் திறமை பெற்றிருக்க முடியாவிட்டாலும், குரல்வளையின் உதவியுடனோ இல்லாமலோ நம்மால் புரிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளப்படவும் முடிகிறது. பெரும்பாலான இந்தியர்கள் குறைந்தது இரண்டு மொழிகளையாவது அறிந்திருக்கிறார்கள்; பலர் அதற்கு மேற்பட்ட மொழிகளையும் அறிந்திருக்கிறார்கள்.

இரவு நேரத்தில் நடந்த ஒரு ஹாட் சாக்லேட் கலந்துரையாடலின் போது, கிராபென் பட், ஷாலினி மூர்த்தியை தாய் மொழியில் பேசும்படி வேண்டினார் – அவர் இந்தியை குறிப்பிட்டார் – அதற்கு உடனடியாக பதில் வந்தது: “அவர் தன் தாய்மொழியான கன்னடத்தில் தான் பேசுகிறார்!” இந்த இரவு நேர அமர்வுகளில் நாங்கள் ஹாட் சாக்லேட்டைப் பருகியபடி, குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தங்கள் கலாச்சாரம் மற்றும் வரலாற்றில் வேரூன்றவும், ஆளுமை வளர்ச்சிக்கும் தாய்மொழியின் செயல்திறன், மற்றும் மொழிபெயர்ப்புகளின் அவசியம் மற்றும்/அல்லது முக்கியத்துவம், குறிப்பாக ஒரு இந்திய மொழியிலிருந்து மற்றொரு இந்திய மொழிக்கு, குறிப்பாக விளிம்புநிலை மொழிகளுக்கு முக்கியத்துவம் அளித்து விவாதித்தோம்.

நாம் ஏன் குழந்தைகளுக்காக எழுதுகிறோம்? நாம் எதைப் பற்றி எழுதுகிறோம்? நாம் ஏன் ஒரு குறிப்பிட்ட மொழிகளில் எழுதுகிறோம்? என்ன இலக்கிய மரபுகள் எழுத்து தேர்வுகளை ஆளுகின்றன அல்லது கட்டுப்படுத்து கின்றன? கதை சொல்வது எழுதுவதிலிருந்து எவ்வாறு வேறு படுகிறது? உதாரணமாக, ஜோபா முர்மு சந்தாலியில் ஒரு சிறந்த எழுத்தாளர்; அவர் சந்தாலிக்கு மொழிபெயர்க்கவும் செய்கிறார். அவரது படைப்புகளுக்கு வாசகர்கள் இருக்கிறார்களா? சந்தாலி எழுத்தின் வரலாறு என்ன? ‘நீங்கள் தாய்மொழியில் எழுதும்போது மற்றும் சொல்லும்போது குழந்தைகள் எளிதாகப் புரிந்துகொள்கிறார்கள்,’ என்று அவர் கூறினார், மேலும் சந்தாலிக்கு ஒரு வளமான வாய்மொழி பாரம்பரியம் உள்ளது; எழுத்து வடிவம் சமீபத்தியது

சங்கு லெப்சா டார்ஜிலிங்கில் வசிக்கிறார்; அவர் இந்தி மற்றும் நேபாளி மொழிகளில் எழுதுகிறார். ஓய்வு பெற்ற பள்ளி தலைமை ஆசிரியையான அவர், பெரும் பாலானோர் நினைப்பது போல்

தான் நேபாளி அல்ல, இந்தியன் என்று வலியுறுத்துகிறார். ‘நான் இயற்கைக்கு அருகில் வளர்ந்தேன், வசிக்கிறேன், அதனால் தான் எனது பெரும்பாலான படைப்புகள் இயற்கை உலகம், சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்டதாக இருக்கின்றன’ என்று அவர் விளக்குகிறார். அவரது கிராஃபிக் நாவலான சாந்திபன், இப்பகுதியின் பறவை நாட்டுப்புறக் கதைகளின் தொகுப்பாகும், மேலும் அது மொழிபெயர்க்கப்பட்டு நாடகமாக நிகழ்த்தப்பட்டுள்ளது. நேபாளத்தின் நேபாளிக்கும் தனது நேபாளிக்கும் வித்தியாசம் இருப்பதாக சங்கு தெளிவுபடுத்துகிறார். ‘எங்கள் நேபாளி இந்தி, பெங்காலி, ஆங்கிலத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது, அது ஒரு ஜாத் கோஷ்டி,’ என்று அவர் சுட்டிக்காட்டுகிறார். இது, தகவல் தொடர்பு மொழி ஒரு வெற்றிடத்தில் இருந்த வந்ததில்லை என்பதையும், ஒரு வடிவம் மற்றொன்றை விட தூய்மையானது அல்லது சிறந்தது அல்லது உயர்ந்தது அல்ல என்பதையும் மீண்டும் வலியுறுத்துகிறது.

கற்றுக்கொள்ள நிறைய இருந்தது, அவர்களின் உறுதி, விடாமுயற்சி, பிடிவாதம், நகைச்சுவை உணர்வு மற்றும் மாயாஜால படைப்பாற்றல் ஆகியவற்றிற்காக பலரைப் பாராட்ட வேண்டியிருந்தது. விபா ராணி, ஒரு நாடகக் கலைஞர், எழுத்தாளர் மற்றும் கதைசொல்லி, இந்தியில் திறமையானவர், அவர் மைதிலியில் கதைகள் சொல்வது மட்டுமல்லாமல், திருமண விழாக்களின் போது மாப்பிள்ளை/சம்பந்திகள் மற்றும் பிறரைத் திட்டிப் பாடும் பாரம்பரிய ‘காலி’ பாடல்களையும் பாடி மகிழ்வித்தார். உண்மையில், காலியில் திட்டாமல் விடப்பட்டவர்கள் அவமானமாக உணர்ந்தார்கள் என்று அவர் கூறினார்! தெளிவாக, நாம் அனைவரும் ஒரு வலுவான நகைச்சுவை உணர்வைப் பெறலாம். உண்மையில், பல பெண்கள் இந்த ஆணாதிக்க மற்றும் அதிகார உலகில் உயிர்வாழ்வதற்கு அவர்களின் நகைச்சுவை உணர்வுதான் காரணம் என்று கூறுவது மிகையாகாது. விபா, கோனு ஜாவையும் எங்களுக்கு அறிமுகப்படுத்தினார், அவர் மைதிலியின் பீர்பால், தெனாலிராமன் மற்றும் நஸ்ருதீன் ஹோஜாவுக்கு சமமானவர்.

‘சிந்திதான் பழமையான மொழி என்று உங்களுக்குத் தெரியுமா?’ என்று ராஷ்மி ரமணி விமான நிலையத்திலிருந்து கல்யாணில் உள்ள பாப்சாய்க்கு நாங்கள் பயணிக்கும்போது கூறினார், அங்கு மாமரங்கள் நிறைந்த எங்கள் ரிசார்ட் அமைந்திருந்தது. எனக்குத் தெரியாது. நான் அதைப் பற்றி யோசித்ததே இல்லை. அவர் சிந்தி மொழி மற்றும் இலக்கியம் பற்றிய தனது ஆராய்ச்சியைப் பற்றியும், இந்தியாவிலுள்ள சிந்தி மக்கள் தங்கள் தாய்நாடான சிந்து பிரிவினைக்குப் பிறகு மறுபக்கத்தில் இருந்ததால் அவர்கள் உணரும் தனிமை உணர்வு பற்றியும் பேசினார். ‘சில ஆண்டுகளுக்கு முன்பு நான் சிந்துவுக்குச் சென்றபோது, எனக்கு மிகுந்த அன்புடன் வரவேற்பு கிடைத்தது, அங்குள்ள மக்கள் சிந்தி பற்றிய எனது ஆராய்ச்சியைத் தொடர என்னை முழு மனதுடன் ஊக்குவித்தனர். நான் செய்யும் வேலையைப் பற்றி அவர்கள் மிகவும் பெருமைப்பட்டார்கள்.’ எழுத்து தேவநாகரி மற்றும் அரபு மொழிகளில் எழுதப் பட்டுள்ளது, ராஷ்மியின் முதல் கவிதைத் தொகுப்பான சிந்தி பால் கீத், சிந்தி-தேவநாகரி, சிந்தி-அரபு மற்றும் இந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டது. ஒரு கவிதையில், ஒரு குழந்தை கேட்கிறது: காற்று எங்கிருந்து வருகிறது? / அதற்கு கால்கள் இல்லை / எப்படி நடக்கிறது? / அதற்கு கைகள் இல்லை / எப்படித் தொடுகிறது?


ஈரோடு சர்மேலா மற்றும் சென்னையைச் சேர்ந்த கலையரசியுடன் சந்தியா ராவ் (எங்கள் கட்டுரையாளர்).

அம்பையைப் பற்றி சில வார்த்தைகள் இல்லாமல் இந்த கட்டுரை முழுமையடையாது. சர்மிலா, கலையரசி (சென்னையைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர்) மற்றும் நான் ஒரே விமானத்தில் மும்பை சென்றோம். அவர்களுக்கு ஒருவரை ஒருவர் தெரியும், எனக்குத் தெரியாது. விமானத்திலிருந்து இறங்கியதும், நான் அம்பையின் ‘தி டெத் ஆஃப் எ சாரஸ் கிரேன் ’ புத்தகத்தை ஏந்தியபடி இறங்குதளத்தின் அடியில் நின்றுகொண்டிருந்தேன்! அவர்கள் இருவரும் புத்தகத்தையும் பின்னர் என்னையும் பார்த்தவுடன், மகிழ்ச்சியில் கூச்சலிட்டனர், எங்கள் பந்தம் உறுதியானது. சில மொழிகளுக்கு மற்றவைகளை விட அதிக கவனம் கிடைக்கிறது என்பதை நாம் அறிந்திருந்தாலும், குறைவாகத் தெரியும் ஆனால் சமமாக அல்லது அதிகமாக நம்மை நெகிழச் செய்யும் மற்ற மொழிகளுக்கு செவிசாய்க்க அம்பை எங்களுக்கு வாய்ப்பளித்தார்.

தமிழ், இந்தி, பங்களா, ஆங்கிலம், அஸ்ஸாமி, குஜராத்தி மற்றும் மராத்தி உட்பட பல எழுத்தாளர்கள், பல மொழிகள் இருந்தன இசை இருந்தது, நாடகம் இருந்தது, குழந்தைகள் இருந்தார்கள். கோவாவைச் சேர்ந்த ஹர்ஷா சத்குரு ஷெட்டி ஒரு ஆந்தை உள்ளூர் திருவிழாவிற்குச் செல்ல விரும்பிய கதையைச் சொன்ன விதத்தால் நாங்கள் அனைவரும் முற்றிலும் மயங்கினோம். அதுவும் கொங்கணியில்! அவர் முதன்முறையாக ஒரு கதையைச் சொல்கிறார் என்று யார் நம்புவார்கள்! மராத்தி பேசுபவர்களுக்குப் புரிந்தது, மற்றவர்களுக்குப் புரியவில்லை. ஆனாலும், எங்களுக்குப் புரிந்தது. ஒவ்வொரு வார்த்தையும் – கிட்டத் தட்ட! அதுதான் கேட்பதின் சக்தி.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# முதுகுப்பையுடன் உடற்பயிற்சி

பரத் — ஷலன் சவூர்

**ரக்கிங்: முதுகுப்பையின் சக்தி**

உங்கள் தோள்கள், கூனலாகவோ அல்லது நிமிர்ந்தோ இருப்பது முதல் தோற்றங்களுக்கு முக்கியமானது. முதலாவது எதிர்மறையான அபிப்பிராயத்தையும், இரண்டாவது நேர்மறையான அபிப்பிராயத்தையும் குறிக்கிறது. இரண்டிற்கும் நிஜ வாழ்க்கை உதாரணங்கள்: தலையில் ஒரு பானை தண்ணீரை சுமந்து செல்லும் கிராமத்துப் பெண், நகரத்து நாகரீக உடையணிந்த அழகிக்கு இணையான கிராமப்புற உதாரணமாக இருக்கிறார். பின்னர், சாமான்களை சுமந்து செல்லும் ரயில்வே போர்ட்டர் இருக்கிறார். மேலே கூறப்பட்ட தொழில்கள் முதுகெலும்பு நிலைத்திருப்பதையும் உடலின் உள்ளார்ந்த வலிமையையும் காட்டும் வெளிப்புற எடுத்துக்காட்டுகள்.

**ரக்கிங்: இரண்டு நன்மைகள் கொண்ட ஒரு பயிற்சி**

நடத்தை மற்றும் மனித வாழ்வைப் படிக்கும் நிபுணர்கள், சமூகவியலாளர்கள் மற்றும் உளவியலாளர்கள், நமது ஊடாடும் தொடர்புகளின் பெரும் பகுதி சொற்கள் அல்லாதவை என்கின்றனர். உடல்மொழி சக மனிதர்களைத் தொடர்புகொண்டு இணைக்கிறது. அமைதி, தலையசைப்பு மற்றும் தோள் குலுக்குதல் ஆகியவை நமது பேச்சுக்கு சமமானவை.

கிராமத்துப் பெண் மற்றும் ரயில்வே போர்ட்டரின் நடைமுறைகள் சித்தரிப்பது போல, உடல்மொழி ரக்கிங் மூலம் மேம்படுத்தப்படுகிறது. அவர்களின் பயிற்சி பல வருட கடினமான, சரியான நடைக்குப் பிறகு வருகிறது. தலை முதல் இடுப்பு வரை முழு முதுகெலும்புப் பகுதியையும் பலப்படுத்துகிறது. ரக்கிங் உங்களுக்கு அதே பலனை அளிக்கும், ஏனெனில் இது எடைப்பயிற்சியை கார்டியோ வேஸ்குலர் விளைவுகளுடன் இணைக்கிறது.

ரக்கிங் என்பது சுமையுடனான முதுகுப் பையை சுமந்து கொண்டு நடப்பது. சிறந்த ஏரோபிக் நன்மைக்காக ஒரு நாளைக்கு ஒரு



மணி நேரம், வாரத்திற்கு மூன்று நாட்கள் என்ற திட்டத்தை நாங்கள் பரிந்துரைக்கிறோம். நீங்கள் ரக்கிங் செய்யத் தொடங்கும் போது மெதுவாகத் தொடங்குங்கள். 10 நிமிடங்களுக்கு ஒரு கிலோமீட்டர், அதாவது மணிக்கு ஆறு கிலோமீட்டர் என்ற இலக்கை அடைய படிப்படியாக வேகத்தை அதிகரிக்கவும்.

உங்களுக்கு ஒரு முதுகுப்பை, காலுறைகள், நல்ல குஷனிங் மற்றும் வலுவான சஸ்பென்ஷன் கொண்ட நடைப்பயிற்சி/ஓட்டப்பயிற்சி காலணிகள் தேவைப்படும். ரக்கிங் நிபுணர்கள் பரிந்துரைக்கும் எடை: பெண்களுக்கு 10 கிலோ மற்றும் ஆண்களுக்கு 20 கிலோ. ஆனால் ஒரு மணி நேரம் சுமக்க உங்களுக்கு வசதியான எடையை முடிவு செய்யுங்கள்.

இந்த ஒரு மணி நேரம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும். முதலாவது 30 நிமிடங்களுக்கு மணிக்கு சுமார் 3 கிமீ வேகத்தில் ரக்கிங் செய்யவும். முடிந்தால், இலக்கு நேரத்தை அடைய 10 நிமிட இடைவெளியில் குறைந்த மற்றும் அதிக வேகத்திற்கு இடையில் மாறவும். இரண்டாவது பாதி 10 நிமிடங்களுக்கு ஒரு முறை 10 புஷ்-அப்கள் (முடிந்தால் முதுகுப் பையுடன்), மற்றும் 10 ஓவர்ஹெட் பிரஸ்கள் (பெஞ்ச்-பிரஸ்ஸின் செங்குத்து வடிவம்) செய்யவும், இதில் நீங்கள் மார்பு மட்டத்தில் இருந்து முதுகுப்பையை தோள்களுக்கு மேல் நேராக உயர்த்த வேண்டும்.

எங்கள் முழுமையான கண்ணோட்டத்தில், தேர்வு, வேகம் மற்றும் சுமை என ஒவ்வொரு அம்சத்திலும் ரக்கிங்கை விருப்பத்திற்கேற்ப செய்யலாம். முதுகுப் பையை அணிவது முதுகு நேராக இருப்பதை உறுதி செய்கிறது. நீங்கள் பையை தண்ணீரால் நிரப்பலாம். நினைவில் கொள்ளுங்கள்: ஒரு கிலோ தண்ணீர் ஒரு லிட்டருக்கு சமம். எனவே, உங்கள் சுமை காரணியின்படி வேலை செய்யுங்கள். இந்த ஒரு மணி நேரத்திற்குப் பிறகு தாராளமாக நீரை அருந்துங்கள்.

ரக்கிங் வாழ்க்கையின் மாறும் பருவங்களையும் காலத்தின் சவால்களையும் எதிர்த்துப் போராட உங்களுக்கு உதவும். ஆகையால், பெருமையுடன் நடக்கவும். ரக்கிங்கின் தூரம் உங்கள் வலிமை.

**கடைசிப்பகுதி: புத்தகப்பை இல்லா நாட்கள்**

மகாராஷ்டிரா மாநில அரசு, பள்ளி நிர்வாக அதிகாரிகளுக்கு 10 'புத்தகப்பை இல்லா' நாட்களைப் பரிந்துரைத்துள்ளது. ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் இதன் கீழ் வருவார்கள். இந்த புத்தகப்பை இல்லா நாட்கள் தச்சு வேலை, மண்பாண்டம் செய்தல், மின்சார வேலை மற்றும் தோட்டக்கலை போன்ற தொழிற்கல்வி பாடங்களில் செய்முறை அனுபவத்தை ஊக்குவிப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், உள்ளூர் கைவினைஞர்கள் மற்றும் கலைஞர்களுடன் கலந்துரையாடி அவர்களின் வேலை மற்றும் சூழலை நன்கு புரிந்துகொள்வதற்காக களப்பணிகளும் மேற்கொள்ளப்படும். எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் வழக்கமான பாடங்களுடன் இத்தொழிற்கல்வி படிப்புகளையும் தொடர ஊக்குவிக்கப்பட வேண்டும். ஒரு கல்வி ஆண்டில் 10 புத்தகப்பை இல்லா நாட்கள் வரலாற்று மற்றும் கலாச்சார இடங்கள், கைவினை மற்றும் சுற்றுலா இடங்களுக்கான பயணங்களையும் உள்ளடக்கும்.

சில பள்ளிகள் ஏற்கனவே இந்த முன்மொழிவுகளை செயல்படுத்தியுள்ளன. புத்தகப்பை இல்லா திட்டம், அரசு முன்னர் அறிமுகப்படுத்திய 'மகிழ்ச்சியான சனிக்கிழமை' திட்டத்தின் தொடர்ச்சியாகும். இதில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் வகுப்பறைப் பாடங்களுக்குப் பதிலாக வேடிக்கை விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள்.

ரக்கிங் தொடங்க சரியான சூழல், அல்லவா? ஆரம்பத்திலேயே ஒருங்கிணைந்த பயிற்சி வாழ்க்கையை ஆரோக்கியமாகவும், நீண்ட காலமும், மகிழ்ச்சியானதாகவும் மாற்றும் அடித்தளமாக அமையும்.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spiritual, You are naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.






RID 3100

**RC முஜாஃபர்நகர் மிட் டவுன்**
சிக்ஷா தேவி பட்டக் கல்லூரி, சொஹன்ஜானி டகன் மற்றும் கஸ்தூர்பா காந்தி பெண்கள் உண்டுறை பள்ளி, ஷாபூரில் DGN பாயல் கௌர் நீர்க் குளிர்விப்பான்களைத் தொடங்கிவைத்தார்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்






RID 3132

**RC அம்பாஜொகாய் சிட்டி**
ஜொகாய்வாடி வட்டத்தில் உள்ளூர்ப் பஞ்சாயத்துடன் இணைந்து கட்டப்பட்ட ஓர் சுடுகாடு மற்றும் தவாடி சிவாரா வட்டத்தில் ஓர் அணையையும் அரசியல் பிரதிநிதிகள், கிராம மேம்பாட்டு அலுவலர்கள் முன்னிலையில் DG சுரேஷ் சாபூ தொடங்கிவைத்தார்.

RID 3141

**RC மும்பை கன்டிவ்லி வெஸ்ட்**
மூன்றாவது ரோட்டரி கால்பந்து லீக் போட்டிகளில் 16 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 260 மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றார்கள். இந்த இரண்டு நாள் விளையாட்டுப் போட்டிகளுக்கு ரூ.5 லட்சம் செலவானது. இதைப் பந்தன் AMC ஆதரித்தது.





## RID 3142

### RC கல்யாண்

ரோட்டரியின் 120வது ஆண்டுவிழாவை முன்னிட்டு (பிப்ரவரி 23), ஆர்யன் சதுரங்க உன்னதக் கல்விக் கழகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட FIDE அதிவிரைவுச் சதுரங்கப் போட்டியில் DG தினேஷ் மேத்தா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். 18 மாநிலங்களைச் சேர்ந்த 350க்கும் மேற்பட்டவர்கள் இந்தப் போட்டிகளில் விளையாடினார்கள்.

## RID 3131

### RC பூனா மிட் டவுன்

ஒரு GG திட்டத்தின்கீழ், புணே தாராசந்த் மருத்துவ மனைக்குக் கண் நோய்ச் சிகிச்சைகள் மற்றும் அறுவைச் சிகிச்சைகளுக்கான ரூ.55 லட்சம் மதிப்புள்ள மருத்துவக் கருவிகள் கொடையளிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தின் பன்னாட்டுக் கூட்டாளர், RC லேக் புயெனா விஸ்டா, US.






## RID 3240

### RC இம்ஃபால்

இந்த சங்கம் அதன் 52-வது பட்டய தினத்தைக் கொண்டாடியது. சங்கத்தால் பல நிகழ்வுகள் திட்டமிடப்பட்டன.

## RID 3182

### RC கல்லியான்பூர்

கல்லியான்பூர் கொரெட்டி மருத்துவ மனைக்கு நடமாடும் எக்ஸ்-கதிர் இயந்திரத்தை (ரூ.1.57 லட்சம்) வழங்கினார் DG தேவ் ஆனந்த். இந்த மாவட்ட நல்கைகள் திட்டத்தை RC செஸ்டர் கவுன்டி, USஐச் சேர்ந்த வசந்த் பிரபு ஆதரித்தார்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# RI தெற்காசிய அலுவலகத்திலிருந்து செய்தி

**சங்கங்கள் மற்றும் மாவட்டங்களுக்கான அறக்கட்டளை நிதி சவால் விருதுகள்**

2025-ம் ஆண்டுக்குள் $2.025 பில்லியன் இலக்கை அடைவதற்கான முயற்சிகளை ஊக்குவிக்க, TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா மற்றும் EMGA-க்கள் அறக்கட்டளை நிதி சவால்களை வழங்குகிறார்கள். இந்த விருதுகள் 2025 நவம்பர் மாதம் புதுதில்லியில் ரோட்டரி மாநாட்டில் நடைபெறும் நிகழ்ச்சியில் வழங்கப்படும்.

அனைத்து மாவட்டங்களுக்கான நிதிச்சவால்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**நிபந்தனைகள் / அளவுகோல்:**

| | | |
|---|---|---|
| தி சாம்பியன்ஸ் டிராபி | : | $500,000 மற்றும் அதற்கு மேல் |
| தி பிளாட்டினம் டிராபி | : | $300,000 முதல் $499,999 வரை |
| தி கோல்டு டிராபி | : | $200,000 முதல் $299,999 வரை |
| தி சில்வர் டிராபி | : | $1,00,000 முதல் 1,99,999 வரை |

அனைத்து சங்கங்களுக்குமான அறக்கட்டளை நிதிச் சவால்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**நிபந்தனைகள் / அளவுகோல்:**

| | | |
|---|---|---|
| தி சாம்பியன்ஸ் டிராபி | : | $150,000 மற்றும் அதற்கு மேல் |
| தி பிளாட்டினம் டிராபி | : | $1,00,000 முதல் $1,49,999 வரை |
| தி கோல்டு டிராபி | : | $75,000 முதல் %99,999 வரை |
| தி சில்வர் டிராபி | : | $50,000 முதல் $74,999 வரை |

ஜூலை 1, 2024 முதல் ஜூன் 30, 2025 வரை அறக்கட்டளை நிதிக்கான பங்களிப்புகள் கணக்கில் கொள்ளப்படும்.

விவரங்கள் மற்றும் கேள்விகளுக்கு உங்கள் பிராந்தியத்தின் அறக்கட்டளை/பெரு நன்கொடைக்கான ஆலோசகரைத் தொடர்புகொள்ளவும்.

PDG ஆசிஷ் அஜ்மீரா: EMGA மண்டலம்-4, ashishajmera27 hotmail.com; PDG மாதவ் சந்திரன்: மண்டலம்-5, madhav.chandran@ymail.com; PDG ராஜீவ் சர்மா: மண்டலம்-6, rtn.rajiv.3030@gmail.com; PDG சாம் மோவ்வா: மண்டலம்-7, sammovva@yahoo.com

**அறக்கட்டளை அங்கீகாரத்துக்கான புள்ளிகள் பரிமாற்ற நடைமுறைகளுக்கான ஆண்டு இறுதி காலக்கெடு:**

2025 ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட அங்கீகார பரிமாற்ற கோரிக்கை விண்ணப்பங்கள், ஜூலை மாதம் 4-ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குள் RI தெற்காசியா அலுவலகத்துக்கு வந்துசேர வேண்டும். அப்போதுதான் அவை வரவு வைக்கப்படும். கெடுதேதிக்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் 2025–26 ஆம் ஆண்டில், அதாவது அடுத்த ஆண்டில் வரவு வைக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்டு கையெழுத்திடப்பட்ட படிவத்தை ஸ்கேன் செய்து PDF முறையில் மஞ்சு ஜோஷிக்கு Manju.Joshi@rotary.org. என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

**பங்களிப்புகளை மறுவகைப்படுத்துவதற்கான (திருத்தம்) TRF வழிகாட்டுதல்கள்:**

ஒரு நன்கொடையிலிருந்து மற்றொன்றுக்கு, அதாவது அறக்கட்டளை அல்லது மானியங்கள் அல்லது போலியோ முதல் வருடாந்திர பங்களிப்பு (மானியங்களுக்கான ஆண்டு பங்களிப்பு அனுமதிக்கப்படாது) தொடர்பான உங்கள் திருத்தங்கள் (அல்லது மறுவகைப்படுத்துதல்) ஜூன் மாதம் 21-க்குள் அனுப்பிவைக்க வேண்டும். அப்போதுதான் 2025, ஜூன் 30-ம் தேதிக்குள் நடைமுறைப்படுத்த முடியும்.■

## 2024–25 Annual Fund (AF) Challenge

| | Champion | Platinum | Gold | Silver |
|---|---|---|---|---|
| **For District** | District achieving AF per capita of $200 or more | 100% members contributing $25 or more to AF, or the district reaching an AF per capita of $175 or more | At least 75% members contributing $25 or more to AF, or the district reaching an AF per capita of $150 or more | At least 50% members contributing $25 or more each to the AF, or the district reaching AF per capita of $100 or more |
| **For Club** | NA | Minimum $25 contribution by each member along with on AF per capita of $200 | Minimum $25 contribution by each member along with AF per capita of $100 | Minimum $25 contribution by each member |
| **Eligibility criteria** | To be eligible for district award, the district must achieve 100% clubs giving with minimum $100 from each club | | | |

## Paul Harris Society Award

From each zone, district with highest new PHS members (minimum 20 new PHS members) with an overall eligibility of 80% (percentage of PHS members fulfilling their commitment) will be eligible for this award.

# Membership Summary

Source: RI South Asia Office


As on May 1, 2025

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 142 | 6,019 | 5.68 | 56 | 110 | 35 | 255 |
| 2982 | 91 | 4,076 | 5.86 | 33 | 490 | 97 | 188 |
| 3000 | 149 | 6,272 | 11.64 | 93 | 1,215 | 244 | 218 |
| 3011 | 136 | 5,336 | 30.88 | 72 | 1,924 | 235 | 41 |
| 3012 | 159 | 3,982 | 24.81 | 55 | 646 | 102 | 61 |
| 3020 | 82 | 4,634 | 8.01 | 46 | 698 | 178 | 351 |
| 3030 | 103 | 5,569 | 16.20 | 62 | 975 | 513 | 400 |
| 3040 | 102 | 2,376 | 14.86 | 35 | 757 | 63 | 216 |
| 3053 | 76 | 3,195 | 17.78 | 23 | 332 | 43 | 131 |
| 3055 | 85 | 3,470 | 12.28 | 49 | 682 | 59 | 400 |
| 3056 | 85 | 3,822 | 24.83 | 21 | 187 | 110 | 201 |
| 3060 | 101 | 5,172 | 15.62 | 52 | 1,836 | 78 | 154 |
| 3070 | 116 | 3,107 | 15.35 | 36 | 352 | 73 | 64 |
| 3080 | 114 | 4,459 | 13.90 | 59 | 1,972 | 212 | 127 |
| 3090 | 134 | 2,607 | 6.29 | 24 | 368 | 359 | 174 |
| 3100 | 115 | 2,203 | 10.39 | 17 | 112 | 41 | 151 |
| 3110 | 137 | 3,742 | 12.00 | 22 | 216 | 104 | 114 |
| 3120 | 90 | 3,865 | 15.86 | 34 | 478 | 43 | 58 |
| 3131 | 137 | 5,514 | 35.67 | 123 | 2,632 | 304 | 244 |
| 3132 | 99 | 3,853 | 14.77 | 32 | 381 | 198 | 227 |
| 3141 | 123 | 6,653 | 28.86 | 124 | 3,550 | 216 | 248 |
| 3142 | 115 | 4,074 | 23.05 | 55 | 1,650 | 140 | 99 |
| 3150 | 106 | 4,096 | 12.87 | 83 | 1,684 | 126 | 130 |
| 3160 | 78 | 2,483 | 9.02 | 26 | 94 | 100 | 82 |
| 3170 | 144 | 6,670 | 15.04 | 89 | 1,051 | 203 | 184 |
| 3181 | 91 | 3,799 | 11.06 | 40 | 444 | 136 | 122 |
| 3182 | 87 | 3,761 | 11.01 | 49 | 304 | 118 | 105 |
| 3191 | 90 | 3,353 | 19.86 | 74 | 1,822 | 199 | 36 |
| 3192 | 84 | 3,439 | 22.10 | 63 | 1,685 | 163 | 40 |
| 3201 | 174 | 6,761 | 10.19 | 112 | 1,975 | 119 | 98 |
| 3203 | 101 | 5,277 | 7.58 | 47 | 749 | 158 | 39 |
| 3204 | 84 | 2,837 | 9.98 | 27 | 295 | 23 | 22 |
| 3211 | 162 | 5,324 | 9.34 | 13 | 206 | 33 | 135 |
| 3212 | 120 | 4,708 | 10.77 | 89 | 607 | 215 | 153 |
| 3231 | 94 | 3,659 | 7.24 | 35 | 436 | 117 | 421 |
| 3233 | 88 | 3,348 | 18.37 | 61 | 1,752 | 55 | 63 |
| 3234 | 79 | 3,230 | 24.06 | 64 | 1,580 | 95 | 42 |
| 3240 | 100 | 3,520 | 17.02 | 43 | 761 | 75 | 251 |
| 3250 | 113 | 4,407 | 23.51 | 37 | 537 | 78 | 193 |
| 3261 | 100 | 3,427 | 24.22 | 18 | 112 | 37 | 46 |
| 3262 | 118 | 3,932 | 16.35 | 84 | 814 | 655 | 294 |
| 3291 | 144 | 3,793 | 27.55 | | | 95 | 776 |
| **India Total** | **4,504** | **175,824** | **16.19** | **2,177** | **38,471** | **6,247** | **7,354** |
| 3220 **Srilanka** | 72 | 2,107 | 16.85 | 86 | 3,730 | 144 | 78 |
| 3271 **Pakistan** | 108 | 1,483 | 20.70 | 106 | 492 | 275 | 28 |
| 0063 (3272) **Pakistan** | 76 | 1,167 | 19.54 | 48 | 293 | 23 | 49 |
| 0064 (3281) **Bangladesh** | 247 | 5,314 | 17.26 | 185 | 1,012 | 120 | 211 |
| 0065 (3282) **Bangladesh** | 141 | 2,896 | 8.84 | 167 | 1,103 | 26 | 48 |
| 3292 **Nepal** | 161 | 5,698 | 22.10 | 159 | 5,365 | 128 | 143 |
| **S Asia Total** | **5,309** | **194,489** | **16.35** | **2,928** | **50,466** | **6,963** | **7,911** |



# இழுப்பறை... வேண்டுமா? வேண்டாமா?

LBW



TCA ஸ்ரீனிவாச ராகவன்

இரண்டு மாதங்களுக்கு முன்பு, எனது 98 வயது தாயார் காலமானார். அவர் தரை தளத்தில் இருந்த ஒரே படுக்கையறையைப் பயன்படுத்தி வந்தார். ஆனால் எனக்கு வயதாகி, கால்கள் தள்ளாடத் தொடங்கியதால், ஒரு நாளைக்கு சுமார் 25 முறை மேலும் கீழும் செல்வது விழுந்துவிடும் வாய்ப்பை அதிகரித்தது. எனவே கடந்த மாதம், நான் கீழ் தளத்திற்கு குடியேற எனது தாயாரின் பழைய படுக்கையறையைப் புதுப்பிக்க முடிவு செய்தேன். ஆனால், வாழ்கை எப்போதுமே எளிதாக இருக்குமா? என் மனைவிக்கும் எனக்கும் இடையே ஒவ்வொரு விவரமும் ஆராய்ந்து ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு, என் வாழ்க்கையில் ஒரு பெரிய கொள்கை சிக்கல் எழுந்துள்ளது. என் புதிய அலமாரியில் இழுப்பறைகளைச் செய்யும்படி தச்சரிடம் கேட்க வேண்டுமா வேண்டாமா என்பதுதான் அது. என் மனைவி ஆம் என்கிறார். நான் இல்லை என்கிறேன். என் மகன், பொதுவாக மிகவும் நல்ல குணம் கொண்டவன், இந்தச் சிறு விஷயங்களால் என்னை தொந்தரவு செய்யாதே என்கிறான்.

இதனால், இந்த இழுப்பறை பிரச்சனை, காஷ்மீர் பிரச்சனையைப் போல் தீர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. இது ஒரு கிளாசிக்கல் "ஒருபுறம், மறுபுறம்" சூழ்நிலை. இழுப்பறைகளுக்கான மற்றும் எதிரான எல்லா வாதங்களும் சமமாக நியாயமாக இருக்கின்றன. உங்களுக்கு இழுப்பறைகளில் என்ன பிரச்சனை என்று நீங்கள் கேட்கலாம்? நிறைய இருக்கிறது, அவை மிகப்பெரிய தொல்லை. அவை எந்தெந்த வழிகளில் மிகவும் எரிச்சலூட்டுவதாக இருக்கும் என்பதை கீழே பட்டியலிடுகிறேன்.

முதலில், எண்ணிக்கை. அலமாரியில் எத்தனை இழுப்பறைகள் இருக்க வேண்டும்? அதன் எண்ணிக்கை ஒன்று முதல் ஆறு வரை இருக்கலாம். அடுத்த கேள்விகள்: எவ்வளவு பெரியது? எவ்வளவு ஆழம்? எவ்வளவு நீளம்? எங்களிடம் பலவிதமான இழுப்பறைகள் உள்ளன. சில ஆழமாக இருக்கும் ஆனால் நீளமாக இருக்காது. சில நீளமாக இருக்கும் ஆனால் ஆழமாக இருக்காது. பல சிறியதாக இருக்கும், வெறும் மூன்று அங்குலம் நீளம் மற்றும் ஐந்து அங்குலம் அகலம். இரண்டு அடி நீளமும் 10 அங்குலம் ஆழமும் கொண்ட ஒன்று கூட உள்ளது. அது முற்றிலும் பயனற்றது ஆனால் ரோஸ்வுட் மரத்தால் ஆனது. ஏதோ காரணத்திற்காக என் தந்தை அதை சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்பு செய்தார். என் தாயாரது தந்தையின் வீட்டில் மீதமிருந்த ரோஸ்வுட் மரத்தைக் கண்டெடுத்ததால்தான் அவர் அதைச் செய்தார் என என் தாயார் கூறியிருக்கிறார். அதை வீணாக்க அவர் விரும்பவில்லை. காரணம் எதுவாக இருந்தாலும், அது இப்போது இடத்தை அடைத்து நின்று கொண்டு இருக்கிறது- என்னைப் போலவே கனமாக, என் மனைவியின் பார்வையில், என்னைப் போலவே பயனற்றதுமாக!

அலமாரிகள் உள்ள இழுப்பறைகள் மற்றொரு சிரமத்தை ஏற்படுத்துகின்றன. அவற்றில் பொருட்களைப் போடுவது மிக எளிது, ஆனால் அவற்றை வெளியே எடுப்பது மிகக் கடினம். அவற்றில் என்ன இருக்கிறது என்பதையும் நீங்கள் மறந்துவிடுவீர்கள். சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் சுத்தம் செய்தபோது, வெவ்வேறு அறைகளில் உள்ள வெவ்வேறு பெட்டிகள் மற்றும் அலமாரிகளில் கிட்டத்தட்ட ஒரு டஜன் இழுப்பறைகளில் சிகரெட்டுகள் மற்றும் லைட்டர்களைக் கண்டெடுத்தோம். நாங்கள் இந்த இழுப்பறைகளை அரிதாகவே சோதிப்போம் என்பதை என் மகன்கள் நன்கு அறிந்திருந்தார்கள். இந்த பயங்கரமான பொருட்கள் மற்றொரு தீர்க்க முடியாத சிக்கலை ஏற்படுத்துகின்றன, அவற்றின் கைப்பிடிகள் உடைந்து விடும்போது, உங்கள் விரல்களை கடுமையாக காயப்படுத்தாமல் அவற்றை திறக்க முடியாது.

ஒரு இழுப்பறைகளில், நாங்கள் உள்ளமைக்கப்பட்ட கைப்பிடிகளை அமைக்க முடிவு செய்தோம். அவை உடைந்து போகாது. ஆனால் சிறிது காலத்தில், மரத்தில் உள்ள அந்த பள்ளங்களில் போதுமான பிடிப்பு இல்லாமல் போக இழுப்பறையை வெளியே இழுப்பது மிகவும் கடினமாகியது.மேலும், மரம் வீங்கி விடுவது அல்லது காகிதம் போன்ற ஏதாவது சிக்குவது போன்றவற்றால் இழுப்பறைகள் அடிக்கடி சிக்கிக் கொண்டுவிடுகின்றன. எங்கள் வீட்டில் மூன்று இழுப்பறைகள் கடைசி ஐந்து ஆண்டுகளாக திறக்கமுடியாத நிலையில் இருக்கின்றன. என் மகன்கள் அவற்றில் என்ன வைத்திருப்பார்கள் என்று நினைத்தால் எனக்கு நடுக்கமாக இருக்கிறது.

ஒரு இழுப்பறைப் பெட்டியில் தச்சர் தண்டவாளங்கள் கூடிய சக்கரங்களை பொருத்தித் தந்தார். அது மிகவும் உதவியாக இருந்தது, ஆறு இழுப்பறைகளில் இரண்டில் அவர் கைப்பிடிகளைச் சரியாகப் பொருத்தவில்லை என்பதை நாங்கள் உணரும் வரை. அவை சற்று மேல்நோக்கி சாய்வாக இருந்தன. விளைவு: இந்த இரண்டு இழுப்பறைகளும் எப்போதும் சில அங்குலங்கள் வெளியே வந்திருக்கும். நீங்கள் கவனமாக இல்லாவிட்டால் மென்மையான இடங்களில் உங்களை காயப்படுத்தலாம். அதனால் எனக்கு இழுப்பறைகள் வேண்டவே வேண்டாம்.

# RJ MANTRA ENGLISH SCHOOL

IDHAYAM RAJENDRAN CHARITIES, AFFILIATED TO CISCE-TN 082.
VIRUDHUNAGAR, TAMILNADU.

## SCHOOL ADMISSION

2025
2026



General schools often focus on academic subjects and may not always teach children essential life skills which are crucial for personal growth and success in life.

## LIFE SKILLS THAT MANTRITES ARE FACILITATED TO OWN

- Time Management
- Critical thinking and problem solving
- Conflict Management
- Emotional Intelligence and mental health





www.rjmantra.com | 9489067789 | 8903660689 | admin@rjmantra.com

ADVT.

Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27 | issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

THE MAGIC OF ROTARY




Rotary District 3212



kauvery hospital Tirunelveli

# ROTARY KARMAVEERAR KAMARAJAR HEART CARE BUS



**Heart care bus is a Clinic on wheels.**

It goes to multiple locations throughout the Rotary International District 3212.

Rotary International District 3212 shares the vision of 'Karmaveerar Bharat Ratna K.Kamarajar' in uplifting the quality of life in rural Tamilnadu. Rotary Heart Care bus takes the privilege to serve the underprivileged villages and towns to take Heart Check-ups and save their lives by availing due medical treatment for heart problems.

## HEART CARE BUS FEATURES

- Digitalized BMI Vital Screening
- Electro Cardiogram (ECG)
- Echo Cardiogram
- Defibrillator
- Physician Consultation
- Telemedicine Consultation

## HEART CAMP DETAILS From 03.07.2024 to 18.05.2025

| | |
|---|---|
| Total No.of Camps | 62 |
| No.of Beneficiaries | 7,353 |

| No.of ECG Done | No.of ECHO Done | No.of Patients Referred to Hospital |
|---|---|---|
| 3195 | 1660 | 581 |

LEKHA ads/ June 25/ Rotary/BW




**GG- 2341081**

**International Partners: Rotary Club of LAS VEGAS WON**

**RID District 5300**

Primary Contact :
Rtn.A.S.P.Arumugaa Selvan

International Partner
PDG.Rtn.Chehab El Awar



Clubs to Contact for Heart Care Camp **Rtn. T. SUDALAIVEL** - +91 97509 55445 Rotary club of Virudhunagar Idhayam

ADVT.